# முஸ்லிம் அரசியலின் இயலாமை



எம்.எம்.எம்.நூறுல்ஹக்

## எம்.எம்.எம். நூறுல்ஹக் – 1964
## சாய்ந்தமருது



கடந்த 1981ஆம் ஆண்டு எழுத்து துறையில் காலடி பதித்து சமயம் -- இஸ்லாம், அரசியல், சமூகம், வரலாறு, இலக்கியம், விமர்சனம் என்று பல்வேறு தளங்களில் தனது எழுத்துக்களை எதிர்கால வாசிப்புக்கு உகந்த வகையில் எம்.எம்.எம் நூறுல்ஹக் பதிவு செய்துவருபவர்.

வாசகர்களாலும் பல்வேறு துறை சார்ந்தவர்களாலும் பெரிதும் அறியப்பட்ட ஒரு எழுத்தாளராக திகழ்கின்ற இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த மர்ஹூம் களான அல்-ஹாஜ் ஐ.எல். முஹம்மது முத்து (பஹ்ஜி - ஓய்வு பெற்ற அரபு ஆசிரியர்), ஐ.எல். பாத்தும்மா தம்பதியினருக்கு பிறந்த மெய்யொளியாகும்.

பதினேழு வயதில் எழுத்துப்பணியில் தன்னை முழுமையாக உட்படுத் திக்கொண்ட இவர் "ஹாதிபுல் ஹுதா" – நேரிய எழுத்தாளர் என்ற பட்டத்தினையும் 2012 இல் கிழக்கு மாகாணசபை சாஹித்திய விருதை விமர்சனத்துறைக்கும் தனது எழுத்துப் பணிக்காக பெற்றவர். பன்னூலா சிரியராகவும் சிரேஷ்ட ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வருபவர். இவரது குறிப்புக்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் வரலாறு மற்றும் சாய்ந்தமருது வரலாறு ஆகிய வரலாற்றுத் தொகுப்பு நூல்களில் இடம்பெற்றிருப்பதும் கவனத்துக்குரியது.

முஸ்லிம் சமூகம், பூர்வீகம், சுயம், இருப்பு, அரசியல், சமயம் என்பன வற்றின் மீதான ஆய்வுகளுக்கும் தேடல்களுக்கும் சரியான வழிகளையும் உபயோகங்களையும் தனது படைப்புக்கள் ஊடாக திறந்துவிட்டிருக் கின்றார்.

தான் வாசிப்பு செய்துள்ள பல நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய மதிப்பீடு களையும் விமர்சனங்களையும் பதிவு செய்துள்ள இவர் இலக்கிய தலைப் புக்களிலான பல கட்டுரைகளையும் சில கவிதைகளையும் வடித்துள்ளார்.

ஓர் ஆய்வாளனாக தனது கருத்துக்களை புள்ளிவிபரத்திரட்டுக்களுடனும் கணக்குகளுடனும் ஆதாரங்களுடனும் முன்வைக்கும் இவரது எழுத்து முறைமை உறுதியும் உண்மைத்தன்மையும் யதார்த்த பூர்வமும் கொண்ட வைகளாக அடையாளம் காணப்பட்டவை.

தனது எழுத்துக்களை மிகுந்த ஆதாரத்துடனும் அவதானத்துடனும் முன்வைப்பது இவரது எழுத்தின் நேர்மையாகும். அதுவே அவரது எழுத்தின் வலிமையாகவும் கொள்கையாகவும் இருந்து வருகின்றன.

எழுத்துலகில் வெள்ளி விழாவைக்கடந்த, முதிர்ச்சி பெற்ற அனுபவத்தைக் கொண்ட இவர் ஒரு ஊடகவியலாளராகவும் பல பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் எழுத்துப்பணி புரிந்தவருமாவார்.

சோலை *(1984)*, அல் – ஹுதா *(1984-1987)* ஆகியவற்றில் பிரதம ஆசிரியராகவும் பார்வை *(1989-1990)*, உதயம் *(1991-1992)*, சங்கமம் *(1994-1995)*, இடி *(2001-2002)* ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் முஸ்லிம் குரல் *(2003-2004)*, எழுவான் *(2006-2012)* ஆகிய பத்திரிகைகளில் பிரதி ஆசிரியராகவும் கடமையாற்றியவர்.

எம்.எம்.எம்.நூறுல்ஹக்கின் எழுத்தின் அடையாளங்களாகவும் ஆதாரங்களாகவும் பின்வரும் நூல்கள் காலப்பதிவு பெற்றுள்ளன.

1. வலிமார்களும் வசீலாத்தேடல்களும் – *1988* (இஸ்லாமிய ஆய்வு)
2. தெரிந்த விடைகளுக்கான கேள்விகள் – *1996* (அரசியல்)
3. தீவும் தீர்வுகளும் – *1998* (அரசியலும், வரலாறும்)
4. சிறுபான்மையினர் சில அவதானங்கள் – *2002* (அரசியலும் வரலாறும்)
5. முஸ்லிம் பூர்வீகம் – *2006* (அரசியலும் வரலாறும்)
6. ஈமானியப் பேரொளிகள் – *2009* (இஸ்லாமிய ஆய்வு)
7. அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் – *2011* (அரசியலும் வரலாறும்) இந் நூல் 2012இல் கிழக்குமாகாண சபையின் சாஹித்திய விருதை விமர்சனத்துறைக்கு பெற்றமை குறிப்பிடத்தக்கது.
8. முஸ்லிம் அரசியலின் இயலாமை – *2016* (அரசியலும் வரலாறும்)

ஒரு எழுத்தாளன் எவ்வளவு காலம் எழுதினான் என்பதைவிட அவன் எதை எழுதினான் என்பதே காலத்திற்கும் சமூகத்திற்கும் அவசியமாகின்றது. இந்த பணியினை நிகழ்த்துபவர்கள் எம்மிற்சிலரே. இதில் எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களின் படைப்புலகப் பயணம் காலத்தினதும் சமூகத்தினதும் அவசியத்தை உணர்ந்தவையும் உணர்த்தியவையும் என்பதை அவரது எழுத்துக்கள் சான்றுபகிரும்.

**உவைஸ் முஹம்மட் ஏ.எம்**

# முஸ்லிம் அரசியலின் இயலாமை

எம்.எம்.எம். நூறுல்ஹக் (JP)

(Dip.in.Massmedia)

முஸ்லிம் அரசியலின் இயலாமை

Titele of book : muslim arasyalin iyalamai / Subject : Political and History / First Edition : 27/04/2016 / Author : M.M.M.Noorulhagu – JP Whole Island (Dip.in Mass Media) / Addres : 129b, Osman Road. Sainthamaruthu - 05 / Dial : 077 2612094, 075 28 81162 / Copy Right : Author / Type Setting : Mr.U.L.M. Manas, Mr.U.L.M.Hifan, Mrs.Najeema Fowzul / Cover Design : Uwais Mohamed / Layaout : Nawas Sawfi / Printed By : An – Noor Printers, Kalmunai, Tel : 077 6167535 / Book Size : 1/8 / Paper : Bank Paper 75 Gsm / Pages : 120 / Price : Rs.300/=

ISBN : 978 – 955 – 43179 – 0 - 1

**உடன்பிறப்புக்கள்**

எம்.எம்.நஜ்மா
எம்.எம்.நயிமா
எம்.எம்.எம்.நகீபு

**வாழ்வின் இணையாகி நிலைக்கும்**

எஸ்.யூ. கமர்ஜான் பீபீ (JP)

**பிள்ளைகள் துணையுடன்**

மிஸ்பாஹுல் ஹக்
பாத்திமா சப்றா

அப்துல் ஷியாம்
பாத்திமா பர்வின்

# பன்னூலாகத் திகழும் இந்நூல்

சிரேஷ்ட பத்திரிகையாளரும் பன்னூலாசிரியருமான எம்.எம்.எம்.நூறுல்ஹக் அவர்களது "முஸ்லிம் அரசியலின் இயலாமை" எனும் நூலானது சமகால இலங்கை முஸ்லிம் அரசியல் எதிர்நேக்கி நிற்கின்ற பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் ஆய்வுக்குட்படுத்தி அவற்றினை தீர்த்துக் கொள்வதற்கான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்கின்றது.

அரசியல் நிகழ்வுகளை மேலோட்டமாக அல்லாது மிக ஆழமாகவும் பல்வேறு கோணங்களிலும் நோக்கும் ஆற்றல் நிரம்பப்பெற்ற ஓர் ஆய்வாளனாக நூறுல்ஹக் திகழ்கிறார் என்பதற்கு இப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் சாண்றுபகர்கிறது.

அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் கல்விமான்கள் வெளிப்படுத்த முற்படு கின்ற சங்கடமான விடயங்களைக் கூட இந்நூலாசிரியர் எடுத்தியம்புகிறார்.

முஸ்லிம் அரசியலின் சமகாலப் போக்கினை விளங்கிக் கொள்ளும் நோக்கில் சாதாரண குடிமகனுக்கும், அரசியல் நிகழ்வுகளை பலகோணத் திலும் ஆய்வுக்குட்படுத்த உதவும்வகையில் அரசறிவியல்துறை மாணவர் களுக்கும், அவ்வாறே அரசியல் பிரச்சினைகளை கையாள உதவும் வகையில் அரசியல்வாதிகளுக்கும் என இந்நூல் பன்னூலாக திகழ்கிறது.

காலத்திக் தேவை கருதி வெளிவரும் இந்நூல் சகலரதும் கவனத்தை கவரும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் அரசியல் சிதறுண்டு வலுவிழந்து செல்கின்ற இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளையும் சமூக ஆர்வலர்களையும் இந்நூலிலுள்ள கட்டுரைகள் சிறிதளவேனும் அசைவுக் குட்டுத்தி சிந்திக்கத் தூண்டும் என நம்புகிறேன். இலங்கை முஸ்லிம்கள் பற்றிய நூறுல் ஹக்கின் ஆய்வுகளும் எழுத்துக்களும் மென்மேலும் தொடர ஆசிக்கிறேன்.

**ஆதம்பாவா சர்ஜுன்**

விரிவுரையாளர்

அரசறிவியல் துறை

பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனை-இலங்கை.

21.04.2016

## நூறுல்ஹக்கின் எழுத்து மூலம் நமது மக்களும் நமது அரசியலும் பலம் பெறட்டும்

முஸ்லிம் அரசியல் என்ன செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்கும்,அது என்ன செய்து கொண்டிருக்கின்றது என்ற யதார்த்தத்திற்கும் இடையிலான ஆதங்கமே இந்த நூல்."முஸ்லிம் அரசியலின் இயலாமை" என நூலசிரியர் எம்.எம்.எம்.நூறுல்ஹக் இதற்கு பெயரிட்டிருப்பதை இந்த அர்த்தத்தில் புரிந்து கொள்வது இன்னும் பொருத்தமானது.

"அரசியலுக்கும் தார்மீகத்துக்கும்மிடையே எந்த உறவும் கிடையாது" என்ற மக்கியாவல்லியின் கூற்றையும், "அரசியலில் முட்டாள்தனம் என்பது ஒரு குறைபாடு அல்ல" என்ற நெப்போலியனின் கூற்றையும் நிருபிக்கும் வகையிலேயே நமது நடைமுறை அரசியல் தாழ்ந்து,தரமிழந்து போயிருக் கின்றது.

ஆனால், இந்த அரசியலிருந்து நம்மால் ஒருபோதும் ஒதுங்கிவிட முடியாது. உள்ளும் புறமுமாய் தினமும் அது நம்மைப் பாதித்துக் கொண்டே இருக்கிறது.

"அரசியலில் பங்கு பற்ற மறுப்பீர்களாயின், உங்களைவிடத் தாழ்ந்தவர் களால் நீங்கள் ஆளப்படும் நிலையில்தான் அது போய் முடியும். அதுவே அதற்கான தண்டனையாகவும் அமைந்து விடுகிறது." என்று பிளேட்டோ இதனைத்தான் சொல்லியிருக்கின்றார்.

எம்.எம்.எம்.நூறுல்ஹக்கின் இந்தக் கட்டுரைத் தொகுதி அண்மைக் கால முஸ்லிம் அரசியலின் போக்கையும் அது கவனம் செலுத்தத் தவறிய பக்கங்களையும் கோடிட்டுக் காட்டுகிறது.இந்த வகையில் இந்நூலை காலத்திற்குப் பொருத்தமான ஒன்றாகக் கணிப்பிடலாம்.

"முஸ்லிம்கள் சமாதானத்தின் விரோதிகள் அல்லர்" என்று தொடங்கும் முதல் கட்டுரை பொது பல சேனா போன்ற சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் பொய்ப் பிரசாரங்களைக் கேள்விக் குட்படுத்துகிறது. முஸ்லிம் கள் இந்நாட்டில் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளை, அதற்கான வலுவை தெளிவான சான்றுகளுடன் இக்கட்டுரை விளக்குகின்றது.

நமது அடிப்படை உரிமைகளை நாம் உரத்து ஒலிக்க வேண்டுமே தவிர, சிங்கள பௌத்த இனவாத சக்திகளுடன் அர்த்தமற்ற பேச்சுவார்த்தைகளுக்காகக் கீழிறங்கக் கூடாது என இக்கட்டுரை அழுத்தமாக வாதிக்கின்றது.

இலங்கை முஸ்லிம்கள் தனியான இனத்தவர்கள்,தெளிவான இனத்துவ வரையறைக்குள் அவர்கள் அடங்குவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. என்ற கருத்தை, அடுத்த கட்டுரை மிகவும் உறுதியாக முன்வைக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இ.ரா.சம்பந்தன் மு.கா. தேசிய மகாநாட்டில் பேசிய கருத்துகளிலுள்ள அரசியல் பலவீனத்தை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது. இன்னும் ஒரு படிமேலேபோய் பொன்னம்பலம் இராமநாதன் முதல் இன்றுவரை முஸ்லிம்களை தனியான தேசிய இனமாக ஏற்க மறுக்கின்ற தமிழ் மேலாதிக்க அரசியலின் சுயரூபத்தை நூறுல்ஹக் அப்பட்டமாக வெளிப்படுத்துகிறார்.

முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற அரசியல் நிலைப்பாட்டை தர்க்க நியாயங்களுடன் அழுத்தமாக முன்வைக்கிறார்.

முஸ்லிம்களின் தனியான அரசியல் இருப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற இரு பெருந்தேசிய வாதங்களின் கறைபடிந்த உள்நோக்கங்களை இந்நூலின் ஆரம்பக் கட்டுரைகள் விளக்கி நிற்கின்றன இந்த இருதலைக் கொள்ளி எறும்பு அரசியல், ஒரு பிசாசைப் போல முஸ்லிம்களைத் தொடந்தும் துரத்தியே வருவதன் வலியை இதில் உணர முடிகின்றது.

புறச்சூழலில் மேலெழும் சவால்கள் ஒருபுறமிருக்க, அகத்தே நிலவும் கோட்பாட்டு, வறுமை, சிந்தனைத் தெளிவின்மை, முதன்மையான விடயங்களை முற்படுத்துவதற்கான அரசியல் விருப்பின்மை,சோரம் போதல் போன்ற அடுக்கடுக்கான பலவீனங்களை இக்கட்டுரைகள் சுட்டிக்காட்டுகின்றன.

முஸ்லிம் மாகாணசபை குறித்து, முஸ்லிம் அரசியல் தலைமைகள் எதுவும் பேசாமல் இழுத்தடிப்பது குறித்து நூலாசிரியர் ஆதங்கப்படுகிறார். முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கையின் சாத்தியத்தன்மை குறித்த கேள்விகள் இருக்கின்றன. எனினும் அது அவசியம் என்ற கருத்தில் நூலாசிரியர் உறுதியாக உள்ளார்.

“தேசிய மாநாடு என்பது கோடிகளால் ஆகக் கூடாது கொள்கைகளால் ஆக வேண்டும்” என்ற கட்டுரையில் தனித்துவ அரசியல் பாதை தடம் புரண்டு வழிமாறிச்செல்லும் அவலம் குறித்த ஆதங்கம் சற்று காட்டமாகவே ஒலிக்கிறது

வடக்குக் கிழக்கு இணைப்பு குறித்து இன்னொரு கட்டுரை ஆராய்கிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துடன், இந்த இணைப்பு விவகாரத்தை முடிச்சுப் போடுவது, இன்னொரு பிணக்கிற்கான வாயிலைத் திறக்கும் என்பதை இக்கட்டுரை அலசுகின்றது.

கல்முனை கரையோர மாவட்டம் எனும் நிர்வாக மாவட்டத்திற்கான கோரிக் கைக்குப் பின்னே உள்ள பலமான நியாயங்களைப் பிறிதொரு கட்டுரையில் புள்ளி விபரங்களின் துணையுடன் அழுத்தமாக முன்வைக்கிறார்.

வடக்கு முஸ்லிம்கள் பலவந்த வெளியேற்றம், ஒரு அப்பட்டமான இனச் சுத்திகரிப்பு என்று நிறுவும் கட்டுரை அம்மக்களுக்கு நியாயமான இழப்பீடு களும் அவர்களது பூர்வீக பூமியில் வாழ்வதற்கான உரிமைகளும் உத்தர வாதப்படுத்தப்பட வேண்டும் என வேண்டி நிற்கின்றது.

முஸ்லிம் தனியார் சட்டம் தோன்றி வளர்ந்த பின்புலம், அதில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவ்வப்போது தோன்றிய கோரிக்கைகள், மேலும் அது தொடர்பான விடயங்கள் இந்நூலில் அலசப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம் தரப்பு அரசியல் சக்திகள் காட்டுகின்ற அசமந்தப்போக்கு குறித்து பொதுத் தளத்தில் நிலவும் கையாறு நிலையை, முஸ்லிம் அரசியலின் இயலாமையை பற்றிய கட்டுரை விளக்குகிறது.

இலங்கையர் என்ற பொது அடையாளத்திற்குள் இனக் குழுமங்களின் தனித்துவமும் சுயாதீனமும் அழிந்து போகக்கூடாது என்ற ஆதங்கத்தை இன்னொரு கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

ஆட்சித்துறையில் அமைச்சரவையின் வகிபாகம் குறித்து, உரிய மேற் கோள்களுடன் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார்.எண்ணிக் கணக்கிட முடியாத அமைச்சர்கள் நிறைந்துள்ள இந்தச் சுழலில் பொது வாசகனுக்கு இக்கட்டுரை ஒரு தெளிவைத் தர முடியும்.

"நாடாளுமன்றப் பணிகளை மறந்து நாணயத்தின் மீது சவாரி செய்யும் நமது பிரதிநிதிகள்" என்ற கட்டுரையில், நாடாளுமன்ற பிரதிநிதிகள் ஆற்ற வேண்டிய பணி எங்கோ இருக்க, பணத்தால் வியாபாரமாக திசை மாறியிருக்கும் நடைமுறை அரசியல் அவலம் குறித்த ஆதங்கம் வெளிப்படு கின்றது.

தகுதியான,நேர்மையான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் கடப்பாடும் பொறுப்பும் இதில் மீள வலியுறுத்தப்படுகிறது. தேசியப்பட்டியல் குறித்த விளக்கமும் முஸ்லிம் அரசியலுடன் அது தொடர்புபடும் விதம் குறித்த விபரமும் இன்னொரு கட்டுரையில் அடங்கியிருக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களுக்கு, முதலமைச்சர் களுக்குமிடையில் அடிக்கடி வெடிக்கும் அகப்போர் குறித்து மற்றுமொரு கட்டுரை ஆராய்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் முதலமைச்சர்களை விடவும் ஆளுநர்களின் தலை பெருத்துக் காணப்படுகிறது ஏனைய மாகாணங்களில் ஆளுநர்கள் இந்தளவு தலையை நீட்டுவதில்லை.

இது 13ஆவது திருத்தத்திலுள்ள குறைபாடு மட்டுமல்ல. சட்டம் பக்கச்சார்பாக அமுல்படுத்தப்படுவதற்கான நடைமுறைச் சான்றாகவே இது விளங்கு கின்றது இனச் சாய்வுடன் சட்டத்தை வளைத்தெடுக்கும் இந்த நிலை அபாயகரமானது. இது இனப்பிரச்சனையின் கசப்பான யாதார்த்தங்களிலும் ஒன்று என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

எம்.எம்.எம்.நூறுல்ஹக் தொடர்ந்தும் முஸ்லிம் அரசியல் குறித்து விமர்சனக் கண்ணோட்டத்துடன் எழுதிவருபவர். அவர் சீலைக்கு மேலே சொறிபவர் அல்ல. சொல்ல வேண்டியதை நேர்படச் சொல்லும் போக்குடையவர்.

முஸ்லிம் அரசியலை வழிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் ஆதங்கமுமே அவரது கட்டுரைகளின் கருப்பொருட்களாக உள்ளன.பொதுவாக மழுப்ப லில்லாமல் இப்படி எழுதுபவர்கள் எம்மத்தியில் குறைவாகவே உள்ளனர்

எம்.எம்.எம்.நூறுல்ஹக் பத்திரிகைத் துறையில் நீண்ட அனுபவமுள்ளவர். தனக்கென தனியான அரசியல் பார்வையும் எழுத்துப்போக்கையும் வளர்த்துக் கொண்டுள்ளார். அவரது எழுத்துக்களில் எனக்கு பொது உடன்பாடு உள்ள போதிலும், சில விடயங்களில் மாற்றுக் கருத்துக்கள் உள்ளதை இங்கு பதிவு செய்வது அவசியம்

விமர்சனப்பார்வையின்றி ஒத்தோடுகின்ற நமது அரசியலில் இருந்தும், சாமரம் வீசும் செய்தியாளார்கள் நிறைந்த போலி ஊடகப்போக்கில் இருந்தும் நூறுல்ஹக் தனித்துத் தெரிகிறார். இதுவே ஒரு வகையில் ஆறுதல்தான். நூறுல்ஹக்கின் எழுத்துப்பணி மேலும் உரம்பெற்று வளர மனமார்ந்த வாழ்த்துக்கள் அவரது எழுத்து மூலம் நமது மக்களும் நமது அரசியலும் வளம் பெறட்டும்

**சிராஜ் மஷ்ஹூர்**

நிறைவேற்றுப் பணியாளார்
உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையம் (CDR)
கொழும்பு
25.04.2016

## கடந்தகாலக் குரல்கள் ஒரு பதிவுக்காக

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் "முஸ்லிம் பூர்வீகம்"என்ற நூலை எழுத்தாளர் நூறுல்ஹக் வெளியிட்டு இருப்பது மிகவும் பயன் மிக்கதொரு பாரிய முயற்சியாகும்.அதற்காக முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அவருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முஸ்லிம்களின் பூர்வீகத்தை நிரூபித்து நிலைநாட்டுவதற்கும் உரிமைகளை அடைந்து கொள்வதற்கும் இந்நூல் பக்க துணையாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.எல்லோரும் வாசித்து தெளிவு பெறுவதற்கான இலகு நடையில் சுருக்கமாகவும் நிறையத் தகவல்களை உள்ளடக்கி யதாகவும் முஸ்லிம் பூர்வீகம் நூல் அமைந்துள்ளது.

முஸ்லிம் பூர்வீகம் நூல் அறிமுக விழா - *15.04.2007*
நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை

**எம்.ரி.ஹசன் அலி** (செயலாளர் - ஸ்ரீ.ல.மு.கா)
உப பயிர்ச்செய்கை பிரதி அமைச்சர்

தினக்குரல் *19.04.2007*

தென்கிழக்கு மண்ணிலே பிறந்து வளர்ந்த சகோதரர் நூலுல்ஹக், பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் தைரியமாக நின்று ஒரு எழுத் தாளனுக்குரிய கடமையினை அவர் செய்திருக்கின்றார். வடகிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்கள் தங்களது மண்ணையும் வாழ்க்கையினையும் காப்பாற்றிக்கொள்ளப் போராடிக் கொண்டிருக்கின்றோம்

இது பற்றிய பல்வேறு விடயங்களை பல்வேறு கோணங்களில் இருந்து அவர் அலசி ஆராய்ந்து சமூகத்திற்கு தெளிவுபடுத்தியிருக்கின்றார்

**எச்.எம்.எம்.ஹரிஸ் (MP)**
முஸ்லிம் பூர்வீகம் நூல் வெளியீட்டு விழா
கல்முனை ஸஹிரா தேசியப்பாடசாலை
22.09.2006

வீரகேசரி 28.09.2006

# கடந்தகாலக் குரல்கள் ஒரு பதிவுக்காக

"முஸ்லிம் பூர்வீகம்"என்ற நூலை ஆக்கித்தந்த நூறுல்ஹக்கை நான் முதன்முதலில் சந்தித்துக்கொண்டது இன்றும் என் நினைவில் இருக்கின்றது.1989 காலப்பகுதிகளில் முஸ்லிம்களின் பிரச்சனைகள், அழிவுகள் பற்றிய விபரங்களை கூட்டு மொத்தமாகத் திரட்டிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டு நான் அவற்றினை தேடிக்கொண்டிருந்த காலகட்டத்தில்தான் நூறுல்ஹக்கைப் பற்றி அலவி ஷரீப்தீன் என்னிடம் எடுத்துக்கூறினார்.அதன் அடிப்படையில் நாங்கள் நூறுல்ஹக்கின் வீட்டுக்குச் சென்றோம். அங்கே அவரது ஆவண சேகரிப்புக்களைக் காணமுடிந்தது அவற்றினை ஒரு முறையான தொகுப்பாகப் பகுத்து பேணிக்காத்து வருவதை அவதானிக்க முடிந்தது முஸ்லிம் சமூகத் துக்கான தமது பங்களிப்பு என்ன என்பதினை அன்றே அவர் உணர்ந் திருந்தார்.

நூறுல்ஹக்கின் புத்தகம் என்பது அவரது எழுத்தின் தரத்தின் ஓர் உயற்சியை கொண்டிருக்கின்றது.இந்த புத்தகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றி பல கருத்துக்கள் வரலாறுகள் மிக ஆழமான அகலமான பார்வையோடு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.நூறுல்ஹக்கின் முஸ்லிம் பூர்வீகத்துக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு களுக்கும் நிறையவே தொடர்பிருக்கின்றது.

அசையும் பொருளைக் கண்டுகொள்வது கடினம் அதுபோல் அசையும் பொருளாக இருப்பவர் நூறுல்ஹக் இதனால் இவரின் தேடலும் சிந்தனையும் ஆங்காங்கே நடைபெறும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான வகையில் அமைந்திருக்கும்.எமது மறைந்த தலைவர் எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்களின் வழிகாட்டலில் உருவான, நெறிப்படுத்தப்பட்ட ஒரு எழுத்தாளர் இவரின் வெள்ளிவிழா நிகழ்வினை சிறப்பிப்பதில் நான் பூரிப்படைகின்றேன்

**பஷீர் சேகுதாவூத்** (எம்.பி, தவிசாளர் - ஸ்ரீ.ல.மு.கா)
முஸ்லிம் பூர்வீகம் நூல் வெளியீட்டு விழா
கல்முனை ஸஹிரா தேசியப்பாடசாலை
*22.09.2006*

தினகரன் *14.10.2006*

## கடந்தகாலக் குரல்கள் ஒரு பதிவுக்காக

எம்.எம்.எம்.நூறுல்ஹக் உடைய அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் என்ற புத்தகத்திலே நிச்சயமாக இந்த முஸ்லிம் காங்கிரசுக்கு மாற்றீடாக ஒரு அரசியல் கட்சி வரவேண்டுமா? என்ற ஒரு தேவையை நண்பர் நூறுல்ஹக்குடைய கட்டுரைகளில் பல இடத்திலே அதனை தொட்டுக்காட்டுவதுபோல் இருக்கின்றது

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

*வீரகேசரி 30.04.2016*

மகிழ்ச்சி. உங்கள் பெயர் அழகானது. உங்கள் தமிழ் ஒலியன்கள் தெளிவானவை. நீங்கள் சமூகச் சிந்தனை உடையவராகவும் தோன்று கிறீர்கள். கட்டுரை எழுதுவதில் தேர்ச்சி காணப்படுகிறது. அதாவது கருத்தை நன்கு தியானித்துத் தெளிந்த பின் மொழியும் நற் சீலம் பாராட்டிற்குரியது. இதில் என்ன புதுமை? உங்கள் அடையாளமே அது தானே!.ஜெர்னலிஸ்ட்.

சன்முகரத்தினம் விவேகானந்தா
பாரீஸ்

(முகநூலில்)

ஆன்மீகம் அரசியலே எழுத்து
ஆய்வில்தான் நூறுல்ஹக் பழுத்து
சான்றோராய் ஆனாரே
சாய்ந்தமரு தூருக்கு
தோன்றுவதை சொல்வாரே வலுத்து!

எம்.எல்.எம். அன்ஸார்

(முகநூலில்)

# எனது எழுத்தில் காணப்படும் சத்தியமும் உறுதிப்பாடும் உலகின் வெகுமதியை நோக்கியது அல்ல

இந்நூலில் பதினான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.இவை நமது முஸ்லிம் அரசியல் களத்தில் காணப்பட்ட நிலைகளுக்கு ஏற்ப வாராந்தம் எழுதப்பட்ட கட்டுரைகளில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. நூலாக்க தேவை கருதி சிலவற்றில் செவ்விதாக்கம் செய்யப்பட்டும் உள்ளது.

நமது முஸ்லிம் அரசியல் அரங்கு பல்வேறு நெருக்கடிகளை மும்முரமாக எதிர்கொண்ட காலத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளாகும். அதனால் சிலருடைய பார்வையில் பக்கச்சார்பான ஆக்கம் இதுவென எண்ணுவோர் இருக்கலாம் உண்மையில் களசூழல் சார்ந்து எழுதுகின்றபோது வெறும் அறிக்கை படுத்தல் கோணத்தில் சொல்வதை தவிர்த்து, எனது சிந்தனையில் சரி எனப்பட்டதையும் கருத்தியல் ரீதியாக பொருத்தமென பலராலும் எற்கத்தக்க வகையில் எழுதியிருக்கின்றேன்.

சிந்தனைகள் சமனாக வருவதில்லை. ஆயினும் சமூகநலன் சார்ந்த மையத்தை முன்னிறுத்தி எழுதுகின்றபோது சிலரை திருப்திப்படுத்த முடியாமல் போவதும் நியாயமானது.

நமது நாட்டைப்பொறுத்தவரை குறிப்பாக முஸ்லிம் அரசியல் களத்தில் கட்சி சாய்தல், உவத்தல் பெரிதும் விரும்பப்படுகின்ற ஒரு சூழலுக்குள் எனது எழுத்துக்கள் சிலரை காயப்படுத்தக்கூடும். அது என்னை பல சந்தர்ப்பங்களில் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டும் இருக்கின்றது.

இதற்காகவேண்டி எனது நடுநிலைப் பார்வையையோ, நியாயத்தின் சார்புப் பற்றையோ கைவிட முடியாது. எனது எழுத்தில் காணப்படும் சத்தியமும் உறுதிப்பாடும் உலகியல் வெகுமதியை நோக்கியது அல்ல. உண்மையில் எழுத்து என்பது ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையில் அமானிதமாகும். இது குலைந்துவிடாத பிடிப்பு முக்கியம்.

நீதியாக எழுதுவது ஒரு தனிக்கலையாகும் அதனை எனது எழுத்துக்களில் எப்போதும் இருப்புக் கொள்ளச்செய்வதில் இருந்து ஒரு போதும் நான் விலகிச் செல்வதில்லை. மனசாட்சியைத் திறந்து, நிதானத்தை அளவு கோலாக்கி நிறுத்துப்பார்ப்போர்கள் இதனை எடைபோடுவதில் எந்தத் திரையும் இராது.

எப்போதும் எனது எழுத்துக்களை நேர்மையானது என நம்புவோர்களுக்காக இந்நூலை வெளியிடுகின்றேன். அது இன்றைய சமகாலத்தில் வெகுவாக உள்வாங்கப்படாது போனாலும்.எதிர்காலச் சந்ததிகளிடம் எனது நூல் வாழும் என்ற நிறைந்த நம்பிக்கை எனக்குண்டு. அல்ஹம்துலில்லாஹ்.

நூலுக்கான மதிப்புரைகளை வழங்கிய பேராதனை பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் ஜனாப் ஆதம்பாவா சர்ஜுன், உரையாட லுக்கும் ஆய்வுக்குமான மையம், அமைப்பின் நிறைவேற்று பணியாளர் சிராஜ் மஷ்ஹூர் ஆகிய இருவருக்கும்.

என்னைப்பற்றிய அறிமுகக் குறிப்பை எழுதியும் இந்நூலின் அட்டைப் படத்தை வடிவமைத்தும் தந்த உவைஸ் முஹமட், இந்நூலின் பக்க வடிவமைப்பை நேர்த்தியாக செய்த நவாஸ் சௌபி ஆகியோருக்கும்.

முன்அட்டைக்கான எனது தோற்ற ஓவியத்தினை வரைந்த கவிஞர் எஸ்.நளீம், அறிமுகப் பக்கத்தில் உள்ள எனது தோற்ற ஓவியத்தினை வரைந்த கவிஞர் ஏ.எம்.றஸ்மி, பின்அட்டைக்கான புகைப்படத்தினை எடுத்த மூத்த ஊடக வியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் ஆகியோருக்கும்.

நூல் வெளிவருவதில் பெரிதும் உதவிய எம்.எஸ்.இப்ஹாம் (றிம்சான்), எம்.எம்.முஹம்மது நிலாம்தீன், ஏ.சி.எம். றியாஸ், ஏ.எம்.பயாஸ் ஆகியோருக்கும்.

இந்நூலை கணனியில் தட்டச்சி செய்து உதவிய யூ.எல்.எம். மனாஸ் (யாழ் பல்கலைக்கழக மாணவன்) யூ.எல்.எம்.ஹிபான் (HND in QS) நஜீமா பௌசுல் (ஆசிரியை) ஆகியோருக்கும்.

இந்நூலை அச்சிட்டு உதவிய கல்முனை அன்நூர் ஒப்செட் நிறுவனத்துக்கும் அதன் உரிமையாளர் அல் ஹாஜ் கலீலுர்ரஹ்மான் (ஆதம்பாவா) அவர் களுக்கும்.

இந்நூலினை வாங்கி உற்சாகப்படுத்தும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றியை தெரிவிப்பதில் மிகுந்த உவகை அடைகின்றேன்

மீண்டும் ஒரு சந்திப்பில் சந்திப்போம் – இன்ஷா அல்லாஹ்

**எம்.எம்.எம்.நூறுல்ஹக்** (மிஹ்லார் )
அகில இலங்கை சமாதான நீதவான்
Dip in Mass Media

*129B, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது - 05*
*0772612094 - 0752881162*

*27.04.2016*

## இயலாமையின் பக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1. | முஸ்லிம்கள் சமாதானத்தின் விரோதிகள் அல்லர் | 01 |
| 2. | தெளிவான இனத்துவ வரையறைக்குள் இலங்கை முஸ்லிம்கள் | 09 |
| 3. | எப்படியும் பெறவேண்டிய முஸ்லிம் மாகாணம் | 18 |
| 4. | தேசிய மாநாடு என்பது கோடிகளால் ஆகக்கூடாது கொள்கைகளால் ஆகவேண்டும் | 28 |
| 5. | இலங்கையர் என்ற அடையாளத்திற்கு இனக்குழுமத்துவம் ஒரு தடையா? | 34 |
| 6. | வடக்கு கிழக்கு இணைப்பு தொடங்கும் மற்றொரு பிணக்கு | 39 |
| 7. | கல்முனை கரையோர மாவட்டம் இலங்கையின் நிர்வாகத்திற்கு உட்பட்டதே | 45 |
| 8. | வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் ஓர் இனச்சுத்திகரிப்பே! | 54 |
| 9. | முஸ்லிம் தனியார் சட்டம் இஸ்லாத்துக்குப் புறம்பானதா? | 61 |
| 10. | முஸ்லிம் அரசியலின் இயலாமை | 69 |
| 11. | இலங்கையின் ஆட்சித்துறையில் அமைச்சரவையின் வகிபாகம் என்ன? | 75 |
| 12. | நாடாளுமன்றப் பணிகளை மறந்து நாணயத்தின் மீது சவாரி செய்யும் நமது பிரதிநிதிகள் | 80 |
| 13. | தேசியப்பட்டியல்:சட்ட ஒழுங்கும் சாதிக்கும் தலைமைகளும் | 86 |
| 14. | வடக்குக் கிழக்கு தொடரும் ஆளுனர் முரண்பாடுகளும் முடியாமல் தடுமாறும் முதலமைச்சர்களும். | 95 |
| | தகவல் மூலங்கள் | 100 |

# முஸ்லிம்கள்
# சமாதானத்தின் விரோதிகள் அல்லர்

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் எப்பகுதிகளில் வாழ்கின்றனரோ அப்பகுதிகளில் வாழ்கின்ற ஏனைய சமூக மக்களோடு எப்பொழுதும் ஒரு சுமூகமான உறவையும் பரஸ்பர நேசத்தையும் வெளிப்படுத்தி வாழ்ந்துவந்த வரலாறு ஒரு தொன்மையானதாகும்.இதனால்தான் இந்த நாட்டின் விசுவாசத்தில் என்றுமே பிசகாத ஒரு பிடிமானத்தையும் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலைக்கு நேரெதிராக முஸ்லிம்கள் சமாதானத்தின் எதிரிகளாக அடுத்த சமூகத்திலுள்ள சிலரினால் விமர்சிக்கப்பட்டிருந்தாலும் அச்சமூகத்தின் பெரும்பாலான மக்களினால் முஸ்லிம்கள் வரவேற்புக்குள்ளாக்கப்பட்டு வந்திருக் கின்றனர்.இதுதான் முஸ்லிம்கள் இந்த நாட்டின் அமைதிக்கு எதிரானவர்களாக என்றுமே இருக்கவில்லை என்பதற்கு பலமாக இருக்கின்ற ஓர் ஆதாரச் சான்றாகும்.

பொதுபலசேனா போன்ற சிங்கள-பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகள் முஸ்லிம்களை இந்த நாட்டின் விரோதிகளாகவும் சிங்கள மக்களின் விரோதிகளா கவும் காண்பிக்கின்ற ஒரு தோற்றப்பாட்டை கடந்த சுமார் மூன்று வருடங்களாக ஹலால் பிரச்சனை தொட்டு தீவிரவாதிகள்-அடிப்படைவாதிகள் என்ற கூற்று வரை அவர்களது முஸ்லிம்கள் குறித்தான சித்தரிப்பு விரிவடைந்து காணப்படு கின்றது.

இந்த பிழையான சித்தரிப்புக்குள் இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும்பாலான சிங்கள மக்கள் இரையாகிப்போகவில்லை.குறித்த சிலர்தான் இதன் பின்னணியில் இருந்துவந்திருப்பதும் நமது அவதானக்களுக்குரியவையாகும்.பொதுபலசேனா மாத்திரமன்றி காலத்துக்குக் காலம் பௌத்த பேரினவாத சிந்தனைகளில் ஊறித்திளைத்த சிலரினால் இம்முன்னெடுப்புக்கள் சந்தர்ப்பங்களுக்கு சந்தர்ப்பம் மேற்கிளப்பப்பட்டு வந்திருக்கின்றன.

என்றாலும் முஸ்லிம்கள் பௌத்தர்களுக்கு எதிரான ஒரு சக்தியாக அவர்கள் கருதுமளவில் இயங்குதளத்தைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. ஆட்சியாளர்களோடு ஒரு சிநேகபூர்வமான உறவை எப்பொழுதும் பேணுவதில்

முஸ்லிம் சமூகம் பின்னிற்காத கோணம்தான் அவர்களோடு பௌத்த ஆட்சியாளர்களும் ஏனைய சிங்கள குடியியல் சமூகத்தினர்களும் கைகோர்த்து வாழ்வதில் ஓர் ஆர்வத்தை வெளிப்படுத்திய பாங்கு பிரத்தியட்சமானது.

அண்மையில் பொது பல சேனா கொழும்பில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில், "இலங்கையில் முஸ்லிம் அடிப்படைவாதத்தை அழித்து முஸ்லிம் களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ள தாகவும் இதற்கு முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனும் உலமாக்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக உள்ளதாகவும்" கலாநிதி டிலந்த விதானகே குறிப்பிட்டிருந்த செய்தியை ஊடகங்களின் வாயிலாக நாம் அறியமுடிந்தது.

இந்த கூற்றின் மூலம் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் பாரிய முரண்பாடொன்று வெடித்து தொடர்ந்தேச்சியான பிணக்குகள் இருந்துவரு வதாகவும் அதற்கு தீர்வுகாண்பதற்காக பொதுபல சேனா தலைமைதாங்கு வதாகவும் இது அர்த்தப்படுத்துகின்றது. அப்படியானால் இங்கு எழும் கேள்வி யாதெனில் அவர்கள் குறிப்பிடும் சிங்கள விரோத செயற்பாட்டினை முஸ்லிம் சமூகத்துக்குள்ளிருந்து முன்னெடுத்த குழுவினர் யாரென்பதாகும்.

உண்மையில் இவ்வாறான ஒரு நிகழ்வு இங்கு நடைபெறவே இல்லை.அதேநேரம் அவ்வாறு நடந்திருந்தாலும் கூட அதனைத் தீர்த்துவைக்கும் அதிகாரமும் அதற்குரித்தான கட்டமைப்பையும் பொதுபல சேனாவுக்கு யாரால் எப்போது வழங்கப்பட்டிருக்கின்றது என்கின்ற ஒரு முக்கியமான வினாவும் இவ்விடத்தில் எழுப்பப்படவேண்டியிருக்கின்றது.

சிங்கள மக்களுக்கெதிராக முஸ்லிம் மக்கள் அடிப்படைவாதத்தை அல்லது முஸ்லிம் தீவிரவாதத்தை பிரயோகிக்கின்றனர் என்று ஒரு வாதத்துக்காக ஏற்றுக் கொண்டால், அதுகுறித்து பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு பொதுபல சேனாவுக்கு எந்தவிதமான தார்மீக பொறுப்புக்களும் இருக்க முடியாது. மாறாக அவர்கள் தம் மக்கள் சார்பில் முஸ்லிம்களுக்கெதிரான முறைப்பாட்டை அரசாங்கத்திடம்,அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை அமுல்படுத்துகின்ற காவல் துறையினர் போன்றோரிடம்தான் புகார் செய்திருக்க வேண்டும். இந்த யதார்த்த நிலைக்கு முரணாக முஸ்லிம்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பது ஒரு முரண்பாட்டு சிந்தனையின் வெளிப்பாடாகும்.

பொது பல சேனாவின் அழைப்பைப்பார்த்த மாத்திரத்தில் அதன் உள்ளார்ந்த சதியைப் பற்றியோ, அர்த்தமற்ற முனைப்பென்பது குறித்தோ முஸ்லிம் சமூக மாகிய நாம் அக்கறை எடுத்துக்கொள்ளாது நாம் சமாதானத்தின் தூதுவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக முண்டியடித்துக்கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சி செயலாளர்களும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, ஐ.தே கட்சியின் பாராளுமன்ற

உறுப்பினர் முஜீபுர்ரஹ்மான். அக்கட்சியின் அமைச்சர் எம்.எச்.ஏ ஹலீம் போன்றோர்கள் பச்சைக்கொடி காட்டியிருப்பது ஒரு விசித்திரமான செய லென்றுதான் குறிப்பிட வேண்டும்.

ஏனெனில் முஸ்லிம் சமூகத்துக்கு பொது பல சேனா போன்றோர்கள் தவறிழைத் திருந்தாலும்கூட நாம் அவர்களோடு பேசி ஒரு தீர்வைப் பெறமுடியாது.ஒன்றில் அரசாங்கத்திடம் முறையிட வேண்டும் அல்லது அவர்களின் செயற்பாட்டின் இன்னொரு வடிவமான காவல்துறையினரிடம் அல்லது நீதி மன்றத்திடம் நாம் நமது பக்க நியாயங்களை முன்வைத்து நியாயங்கள் பெறவேண்டி யிருப்பதே பொருத்தமானதாகும்.இந்த யதார்த்தத்தை மீறி மேற்குறிப்பிட்டோர் தமது இசைவுகளை இயம்பியிருப்பது வியப்பல்லாமல் வேறென்னவாகும்?

நமது நாட்டின் மிகப்பெரிய சட்ட ஏற்பாடாக இருப்பது அரசியலமைப்புச் சட்டமாகும். அவ்வரசியலமைப்புச் சட்டத்தின் அத்தியாயம் மூன்று அடிப்படை உரிமைகள் பற்றி விபரிக்கின்றது.அதில் 10ஆவது உறுப்புரிமை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

“ஆளொவ்வொருவரும்,தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம்,மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம்,மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.”

மேற்படிய சட்டத்திற்கு ஏற்புடையவர்களாக முஸ்லிம்கள் தமது அறநெறியான இஸ்லாத்தை இந்நாட்டில் பின்பற்றிவருகின்றனர்.அதனால்தான் இந்த நாட்டின் சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் இருந்தும் கூட முஸ்லிம்கள் தமது மார்க்க செயற்பாட்டை முன்னெடுப்பதில் ஆட்சேபனைகளை முன்னிறுத் தாது இருப்பதாகும். ஆயின் முஸ்லிம்களின் சமய செயற்பாட்டினால் இந்நாட்டின் அமைதிக்கு சீர்குலைவு ஏற்படவில்லை என்பதுதான் இதன் உறுதியான அர்த்தமாகும்.

ஆனால் முஸ்லிம் சமூகத்தின் மத கடமைகளை முன்னெடுப்பதில் சில அச்சுறுத்தல்களையும் பிழையான பொருள்கோடல்களையும் முன்வைத்து பொது பல சேனா போன்ற அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படுகின்ற அத்து மீறல்களை நமது நாட்டு சட்டத்தின் அடிப்படையில் கேள்விக்குட்படுத்தும் உரிமையும் அதன் அவசியமும் முஸ்லிம் சமூகத்துக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்தும் அதனை சரியாக கையாள்வதற்கு முடியாமலிருக்கின்றது.

இந்த தடை என்பது நமது அணுகுமுறையில் ஏற்படுகின்ற சறுக்குதல்கள் ஒரு காரணமாக இருந்தாலும் ஆளும் அரசாங்கமாக இருக்கின்ற சிங்கள மக்கள் சார்ந்த கட்சி தலைமைத்துவம், அதன் இருப்பு,தேர்தல் வெற்றி போன்ற

காரணங்களினாலும் சரியான நீதி நிலைநாட்டப்படாமல் மறுக்கப்பட்டுவருகின்ற ஒரு துயரமான நிலை முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. இந்நிலையின் எதிர்மறை யானது சிங்கள மக்களுக்கு இவ்வாறான சட்ட ஏற்பாடுகளை கையாள்வதில் எந்தச் சறுக்குதல்களும் இருப்பதற்கு வழியில்லை என்பதைத்தான் திடமாக தெரிவிப்பதாகக் கொள்ளமுடியும்.

மேற்சுட்டிக்காட்டிய அடிப்படை உரிமைகள் என்பது மிகவும் வலிமையுடையதாக இருக்கவேண்டுமென்பதனை நமது நாட்டின் சட்ட ஏற்பாடுகள் மிகவும் உறுதியாக வலியுறுத்துகின்றது.உண்மையில் இனப்பாகுபாட்டுச் சிந்தனையினால் பாதிக்கப்படுகின்ற ஒரு சமூகமாக முஸ்லிம்கள் இருந்தும் இந்த சட்ட ஏற்பாட்டின் துணையூடாக தட்டிக்கேட்கும் சந்தர்ப்பங்களை அடைந்துகொள்ளாமல் இருக்கின்றோம்.இது முன் சுட்டிக்காட்டிய அரசாங்கத்தின் சார்பு நிலையினால் நாம் முயன்றும் தோற்றுப்போய்விடுவோம் என்கின்ற அச்சத்தின் வெளிப் பாடாகக்கூட இருக்க முடியும்.

2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தில் பின்வருமாறு எடுத்துக்காட்டப் படுகின்றது.

3.(1)”ஆளெவரும் போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை,எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மத ரீதியிலான பகைமையை ஆதரித்தலோ ஆகாது”.

3.(2) “ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தவறொன்றை

(அ) புரிவதற்கு எத்தணிக்கும்

(ஆ) அதனை புரிவதில் உதவி புரியும் அல்லது உடந்தையாயிருக்கும் அல்லது

(இ) புரியப்போவதாக அச்சுறுத்துகின்ற ஒவ்வொராளும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாலியாதல் வேண்டும்.

3.(3) இப்பிரிவின் (1) அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்கு குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளொருவர் மேல் நீதிமன்றத்தால் குற்ற தீர்ப்பளிக்க படுவதன் மீது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குக் கடூழிய மறியல் தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

3.(4) இப்பிரிவின் கீழான தவறொன்று பிடியாணையின்றி கைது செய்யப் படற்பாலதும் பிணையில் விடுவிக்கப்பட முடியாததும் ஆதால் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவறொன்றுக்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது

குற்றம்சாட்டப்பட்ட ஆளெவரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல் நீதிமன்றத்தினால் தவிர பிணையில் விடுவிக்கப்படல் ஆகாது.

மேற்படி சட்டம் என்பது மதத்தை முன்வைத்தும் இனத்துவ குழுமத்துவத்தை முன்னிறுத்தியும் பாகுபாடுகளை ஏற்படுத்துவதென்பது ஒரு பயங்கரவாத செயற்பாட்டுக்கு சமனானதென்பதை குறிப்பிடுகின்றது.அது மாத்திரமன்றி இச்சட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள்,முனைப்புக் காட்டுபவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும் என்பதையும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாத கடூழிய மறியல் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்பதையும் முன்மொழிகின்றது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட சந்தேக நபர்கள் மீது விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல் நீதிமன்றத்தினால் தவிர பிணையில் விடுவிக்கப்படுதல் ஆகாது என்ற கடுமையான சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றது. அப்படியாயின் முஸ்லிம் சமூகம் தமது மதத்தினாலோ அல்லது தமது குழுமத்தினாலோ பாகுபாட்டை உருவாக்க முனைந்திருந்தால் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் முயற்சிகள் எப்போதோ அரங்கேற்றப்பட்டிருக்கும். அவ்வாறான நிலை தோன்றாமலிருப்பதும் முஸ்லிம்கள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடவில்லை என்பதை மிக ஆணித்தரமாக வலியுறுத்துவதாகக் கொள்ளமுடியும்.

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் பதினைந்தாவது அத்தியாயம் சமய சம்பந்தமான தவறுகள் குறித்து பேசுகின்றது.அதுமாத்திரமன்றி அடக்கஸ்தலங்களை அத்துமீறி உடைப்பது,மதஸ்தளங்கள் மீது கல்வீச்சு மேற்கொள்வது போன்ற நிகழ்வுக்கெல்லாம் இலங்கையின் சட்டத்தின் படி தண்டனைக்குரியதாகும் சமாதான சீர்குலைவுக்குரியதாகவும் அமைதிக்கு பங்கம் விளைவுக்கும் குற்றமுமாகவே இவை பார்க்கப்படுகின்றது.

290. ஆட்கள் வகுப்பு எதனதும் சமயத்தை நிந்திக்கும் கருத்துடன் அல்லது ஆட்கல் வகுப்பு எதுவும் அத்தகைய அழிவு செய்தலை சேதம் ஏற்படுத்தலை அல்லது தூய்மை கெடுத்தலைத் தனது சமயத்துக்கான நிந்தனை என எண்ணக்கூடும் என்ற அறிவுடன் ஏதேனும் வழிபாட்டிடத்தை அல்லது ஆட்கள் வகுப்பு எதனாலும் பரிசுத்தமானதென போற்றப்படும் ஏதேனும் பொருளை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது தூய்மை கெடுக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

290 அ. ஆட்கள் வகுப்பு எதனதும் சமய உணர்வினைப் புண்படுத்தும் கருத்துடன் அல்லது ஆட்கள் வகுப்பு எதுவும் அத்தகைய செயல் தமது சமயத்திற்கான நிந்தனை என எண்ணக்கூடும் என்ற அறிவுடன் வழிபாட்டிடம் அல்லது ஆட்கள்

வகுப்பு எதனாலும் பரிசுத்தமானதென அல்லது வணக்கத்துகுரியதெனப் போற்றப்படும் பொருள் எதிலும் அல்லது அதன் மீது அல்லது அதன் அயலில் ஏதேனும் செயலைச்செய்யும் எவரும் ஓராண்டு வரை நீடிக்க கூடிய ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

*291.* சமய வழிபாடு அல்லது சமய சடங்குகளைப் புரிவதில் சட்டப்படி ஈடுபட்டுள்ள ஏதேனும் கூட்டத்திற்கு வேண்டுமென்று குழப்பம் விளைவிக்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

*291* அ. ஆள் எவரதும் சமய உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற திட்டமான கருத்துடன் அவ்வாள் கேட்கக்கூடியதாக ஏதேனும் சொல்லைச் சொல்லுகின்ற அல்லது ஒசையை எழுப்புகின்ற அல்லது அவ்வாள் காணக்கூடியதாக ஏதேனும் அங்க அசைவைச் செய்கின்ற அல்லது அவ்வாள் காணக்கூடியதாக ஏதேனும் பொருளை வைக்கின்ற எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

*291* ஆ. ஆட்கள் வகுப்பு எதனதும் சமய உணர்வுகளைப் பாதிக்க வேண்டும் என்ற திட்டமான கெடுநோக்கான கருத்துடன் பேசப்படும் அல்லது எழுதப்படும் சொற்களின் மூலம் அல்லது கட்புலக்காட்சிகள் மூலம் அவ்வகுப்பின் சமயத்தை அல்லது சமய நம்பிக்கைகளை நிந்தனை செய்ய எத்தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

*292.* ஆள் எவரதும் உணர்வுகளை புண்படுத்தும் அல்லது ஆள் எவரதும் சமயத்தை நிந்தை செய்யும் கருத்துடன் அல்லது ஆள் எவரதும் உணர்வுகள் புண்படலாம் அல்லது ஆள் எவரதும் சமயம் அதனால் நிந்தை பண்ணப்படலாம் என்ற அறிவுடன்,

> ஏதேனும் வழிபாட்டிடத்தில் அல்லது கல்லறை அடக்கஸ்தலத்தில் அல்லது மரணக்கிரியைகளைப் புறிவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அல்லது இறந்தோரை அடக்கம் செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் இடத்தில் அத்துமீறுகின்ற அல்லது ஏதேனும் மனித பிரேதத்திற்கு மரியாதை குறைவு காண்பிக்கின்ற அல்லது மரணச் சடங்குகள் செவ்தற்கென கூடியுள்ள எவரேனும் ஆட்களுக்குக் குழப்பம் விழைக்கின்ற

எவரும் ஓராண்டுவரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆகவே சமய நிந்தனை குறித்து புதிதாக சட்டங்களை ஆக்குவது பற்றி ஆலோசிக்கவேண்டிய தேவை இப்போதைக்கு இல்லை. இருக்கின்ற சட்டங்களை சரியாகப் பிரயோகிக்கின்ற சூழ்நிலையொன்று உருவாக்கப்பட்டுவிட்டால் பொதுபல சேனா போன்ற அமைப்புக்களினால், இனவாத,மதவாத சிந்தனைகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அசௌகரியங்களும் இனக்கலவரங்களும் இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப் பட்டிருக்க முடியும்.

ஒன்றுகூடுகின்ற சந்தர்ப்பம் தடுக்கப்படாத ஒன்றாயினும் அது அடுத்த சமூகத்தினர்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையிலான முனைப்புக்களைக் கொண்டதாக அமைகின்ற போது அது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதையும் நமது நாட்டின் சட்டதிட்டங்கள் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டு கின்றது.இவ்வேற்பாட்டின் கீழ் முஸ்லிம்களை நிறுத்த முடியாமலிருப்பதுகூட முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் எந்த வகுப்பாருக்கும் விரோதிகள் அல்ல என்பதை வலிமைப்படுத்துகின்றது.

நாம் இங்கு சுட்டிக்காட்டிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு நமக்கெதிராக முனைப்புக்கொள்ளப்படுகின்ற பாகுபாடுகளை எதிர்கொள்பவர்களாக மாறவேண்டும்.அதற்கு முதல்படியாக நாம் செய்யவேண்டியது நாட்டின் அரசாங்கத்திடம் நமது நிலையை விளக்கி நமக்கெதிராக முன்னெடுக்கப்படுகின்ற இடர்களை நிறுத்துவதற்கு சட்டத்தைச் சரியான முறையில் உபயோகிக்கும் ஒரு நிலைப்பேற்றை நிரந்தரப்படுத்துமாறு கோரவேண்டும்.

உண்மையில் நாம் பொதுபல சேனா போன்ற அமைப்புக்களோடு பேசுவதற்கு செல்வதென்பதும் விளக்குவதும் நம் மீது கடமையென நினைத்துக்கொண்டு விளக்கில் வண்டு விழுவதுபோல் நாம் சென்று அகப்பட்டுக்கொள்வதும் நமக்கு ஆரோக்கியமான விளைவுகளைத் தரப்போவதில்லை. அரசாங்கம் நம்மீது இவ்வாறான நெருக்குவாரங்களை நேரடியாக பிரயோகிக்காமல் இருப்பதுதான் நமது இன்றைய பலமாகும். அதனை பலப்படுத்துவதற்கு என்னென்ன முயற்சிகளை நமது தரப்பில் நின்று யார் யாரெல்லாம் முன்னெடுக்கவேண்டுமோ அவர்கள் இப்பக்கம் தமது சிந்தனைகளை செலுத்த வேண்டும்.

சிங்கள-பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகள் நம்மை நோக்கி பேசுவதற்காக அழைத்த பல சந்தர்ப்பங்களில் நாம் பின்வாங்காது பகிரங்க விவாதங்கள் வரை சென்று பேசியிருக்கின்றோம்.கண்ட பலன்தான் என்ன? நமது பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர∴ப் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் போன்றோர்களும் நமது சமூகத்தின் உயர் சபையாக நம்பப்படுகின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல்

உலமா சபை உட்பட சென்று நமது நியாயங்களை சரியாக நெறிப்படுத்தியிருக் கின்றோம்.

இதனை அவர்கள் செவிசாய்த்து ஏற்றுக்கொண்டவர்களாக இருந்திருந்தால் மீண்டும் இன்று நம்மை அழைக்கின்றவர்களாக இருக்கமாட்டார்கள். அப்படியல்லாது இப்போதும் நம்மை அழைக்கின்றார்கள் என்றால் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற பெறுபேற்றைத்தான் நாம் அடைந்திருக்கின்றோம் என்பதையே இது அடையாளப்படுத்துகின்றது. அவ்வாறாயின் இந்த செயற்பாடு நமக்கு விமோஷனத்தை தரவில்லை, தரப்போவதுமில்லை என்பதைத்தான் இடித்துரைக்கின்றது.

தோல்விகண்ட வழிமுறைமைக்குள் மீண்டும் மீண்டுமாக நாம் இழுபட்டுச் செல்வதென்பது நமக்குப் பயனைத்தராத அதேநேரம் அடுத்த சமூகத்தினர்கள் மத்தியில் எரிச்சலூட்டும் நிகழ்வாக மாறிவிடும் அபாயமும் இதிலிருக்கின்றது. இப்படியான பாதையில் நமது பயணத்தை மேற்கொள்வது விவேகமானதல்ல. ஆயின் இதற்கான மாற்று வழி என்ன என்பதை நாம் தேடியாக வேண்டும்.

இந்த யதார்த்தத்தின் பொறிநிலைக்குள் இருந்துகொண்டு பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகளாக செயற்படுகின்ற வலிமையற்ற அமைப்புக்களின் கூப்பாடு களுக்குப் பின்னால் செல்வதைத் தவிர்த்து நமது நேர்மையில் நம்பிக்கை வைத்தும் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்கள் நாம் அல்ல என்ற உண்மையிலும் இருந்துகொண்டு நமக்கெதிராக கிளர்ந்தெழுகின்ற இனவாத பாகுப்பாட்டுச் சிந்தனைகளை சட்டத்தின் துணைகொண்டு எதிர்கொண்டு வெற்றியடைகின்ற ஒரு வழிமுறைமைதான் நமக்கு திட்டவட்டமான வெற்றிகளைக் கிட்டச்செய்யும்.

*13.04.2016* - விடிவெள்ளி.

# தெளிவான இனத்துவ வரையறைக்குள் இலங்கை முஸ்லிம்கள்

"எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் அதிகாரப் பகிர்வுகளுக்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள்தான் அதிகாரப்பகிர்வை வேண்டினார்கள். அதற்காக போராட்டங்களை செய்தார்கள். சிங்கள மக்களோ, முஸ்லிம் மக்களோ அதிகாரப்பகிர்வை கேட்கவில்லை. நாங்கள் மாத்திரமே அதிகாரப்பகிர்வை கேட்டோம். அதிகாரப்பகிர்வு சகல மக்களுக்கும் சமமாக இருக்க வேண்டும்." என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் மு.கா.வின் தேசிய மாநாட்டில் (19.03.2016இல்) தெரிவித்திருந்தமை மிகப்பகிரங்கமானவை.

மேற்படி உரையில் மூன்று விடயங்களை இரா.சம்பந்தன் அவர்கள் உரத்து வலியுறுத்தியிருப்பதை சற்று ஆழமாக நோக்கினால் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

01. அதிகாரப்பகிர்வு கேட்டவர்கள்தான் அதனைப் பெறவேண்டும்.

02. அதற்காக போராட்டங்களை முன்னெடுக்காதவர்கள் அதனைக் கேட்கக் கூடாது

03. எது எவ்வாறு இருந்தாலும் அதிகாரப்பகிர்வு சகல மக்களுக்கும் சமமாக இருக்க வேண்டும்.

இரா.சம்பந்தனின் கூற்றின் பிரகாரம் முஸ்லிம் மக்கள் அதிகாரப்பகிர்வை கோரவில்லை, அதற்கான போராட்டங்களை முன்னெடுக்கவில்லை என்பதை உட்கிடையாக முன்வைத்திருப்பதோடு, முஸ்லிம் மக்களுக்கும் சமனான அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்படவேண்டுமென சாட்டுக்கு முன்வைத்தது போன்றும் எம்மால் இதனைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

அதிகாரப்பரவலாக்கம் கோருவதென்பது காணப்படும் சூழலுக்கு ஏற்ப எழுகின்ற ஒரு விடயமாகும்.அவ்வாறு முஸ்லிம் மக்கள் அத்தகைய சந்தர்பத்திற்குள் அகப்பட்ட போது அது தொடர்பிலான குரல்களை ஓங்கி ஒலிப்பதற்கு எப்போதும் பின்னிற்கவில்லை. அந்தவகையில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சமூக புறக்கணிப்புக்களின் மையத்தில் நின்று மாற்று தீர்வுகளை வேண்டிய தருணங்கள் வரலாற்றில் உள்ளது.

போராட்டம் என்பதுகூட ஆயுதமேந்தி போராடுவதை மாத்திரம் குறித்து நிற்பதில்லை. மாறாக அகிம்சை வழியிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட பதிவுகளும் உலக அரங்கில் பதிவாகாமல் இல்லை. இவ்வாறான சந்தர்பங் களுக்கு ஏற்ற சரியான வழிமுறைகளில் மக்களை அழித்துக்கொள்ளாத ஒரு முறைமைக்குள் இலங்கை முஸ்லிம்கள் தமது போராட்ட முன்னெடுப்புக்களை மேற் கொண்டே இருக்கின்றனர்.

பௌத்த - சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திகளின் கோரிக்கையின் பின்னால் அரசாங்கம் கைகட்டி நின்ற வேளைகளில் கூட அதுகுறித்த தமது அதிருப்தி களையும் அதற்காக செய்யப்படவேண்டிய நிவாரணங்கள் பற்றியும் பிரஸ் தாபித்துமுள்ளனர்.

மதரீதியாக எதிர்ப்புக்கள் மேற்கிளம்பிய சந்தர்பங்கள் தொட்டு தமது உரிமைத் துவம் பாதிக்கும் வகையான சந்தர்பங்கள் வரை அதுகுறித்த தமது போராட்டங் களை அகிம்சை வழியில் முன்னிறுத்தியிருக்கின்றனர். இதேபோன்று தான் தமிழ் பேரினவாத ஆதிக்க சக்திகளினாலும் ஆயுதமேந்திய போராளி களினாலும் தொடுக்கப்பட்ட துவம்சங்களையும் எதிர்த்து தமது நியாயங்களை முன்வைப்பதிலிருந்து முஸ்லிம்கள் விலகியிருக்கவில்லை.

இவை நமக்கு எடுத்துக்காட்டுவது முஸ்லிம்கள் தமக்கு எதிராக தொடுக்கப்பட்ட அடக்குமுறைமைகளுக்கு அந்த அந்தச் சூழலில் தமது எதிர் நடவடிக்கைகளை செயலுருவாக்குவதில் தமது பங்கினை சரியாக கடைப்பிடித்திருக்கின்றனர் என்பதேயாகும். ஆகையால் முஸ்லிம் மக்கள் அதிகாரப்பகிர்வை கோரவில்லை யென்றோ அவர்களுக்கெதிரான அநீதிகளை எதிர்த்து நிற்கவில்லை என்றோ கூறுவது ஒரு அபத்தமான முன்வைப்பென்றே கருதவேண்டும்.

ஏனெனில் ஒரு பிரச்சினை தோன்றுகின்ற போதுதான் அதற்கான மாற்றுவழித் தேடலில் இறங்க வேண்டும். அந்த வகையில் தமிழ் மக்களின் போராட்டத்தின் போதுதான் முஸ்லிம் மக்கள் தமது போராட்டங்களை தொடங்கி இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது அல்லது அதற்கு முன்னரோ பின்னரோ ஆரம்பிக்கப்படாததினால் முஸ்லிம் மக்கள் இதுகுறித்து சிந்திக்கவில்லை என அர்த்தப்படுத்துவது அர்த்தமுள்ள கூற்றல்ல.

உண்மையில் தோன்றப்படுகின்ற பிரச்சனைகளின் போது அதுபற்றிய தமது மாற்று நடவடிக்கைகள் தமக்கு எவ்வாறான பரிகாரங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என குரல்கொடுத்திருப்பதும் அதனை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதும் முஸ்லிம்மக்கள் தமது இன்னல்கள் பற்றி உள்வாங்கி அதற்கான நியாயத்தீர்வுகளை தேடி தமது முன்னெடுப்புக்களை முன்னிறுத்தியிருப்பதாகவே இதனைக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதிகாரப்பகிர்வு கோரவில்லையென்றும் போராட்டங்களை முன்னெடுக்கவில்லையென்றும் உண்மைக்குமாறான குற்றச்சாட்டுக்களை குறிப்பாக

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பரவலாக பேசிவருவதற்கான சூழலை திட்டமிட்டு முன்னெடுக்கின்ற ஒரு கோணத்தை நாம் தரிசிக்க கூடியதாக இருக்கின்றது.

இது வெறும் சிலருடைய திடீர்கருத்துக்களாக அல்லாமல் தமிழ் மக்களின் பெரும் அங்கீகாரத்துக்குரிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர் வமான அறிக்கையென்ற பாணியில் வலுப்பெற்று வருவதும் நமக்கு மறைவானதல்ல.

தமிழர்களும் முஸ்லிம்களும் இனத்தால் ஒன்றென்றும் மதத்தால் வேறுபட்டவர்கள் என்ற வாதத்தை முன்வைத்து தமிழ்ப் பேசும் மக்கள் என்ற அடையாளத்திற்குள் முஸ்லிம்களையும் உட்படுத்திக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட பிரயத்தனங்கள் அதிகமாகும். அதுமாத்திரமன்றி இனத்தால் ஒன்றுபட்டும் புறக்கணிப்புக்களால் ஒருமித்தும் காணப்படுகின்ற முஸ்லிம் மக்களுக்காகவுமே தமிழ் மக்களிலிருந்து உருவான அரசியல் கட்சிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட ஆயுத குழு என்பன செயற்படுவதாக கூறிவந்திருப்பதும் நாம் அறிந்ததே.

அப்படியென்றால் இவ்விடத்தில் இரா.சம்பந்தன் முஸ்லிம்கள் போராடவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கக் கூடாது. மாறாக அவர்களும் தம்மோடு சமமாக போராடியவர்கள் என்றுதான் தமது கருத்துநிலையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இது தவிர்க்கப்பட்டிருப்பது அவர்கள் தமக்கு வசதியாக தமிழ் பேசுவோர் என்ற அடைமொழியினுள் முஸ்லிம்களை உட்படுத்துவதும் தமது அரசியல் மேலாண்மையை உறுதி செய்வதற்காக முஸ்லிம்கள் வேறு தமிழர்கள் வேறு என பறைசாற்றுவதும் ஒரு நீண்ட காலமாக கடைப்பிடித்து வரப்படுகின்ற ஒரு கைங்கரியமாகவும் இது உள்ளது.

“தமிழ்பேசும் மக்கள்” எனும் சொற்றொடர் இலங்கையில் எவ்வாறு பாவிக்கப் பட்டதென்பது பற்றி மறைந்த யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் முன்வைத்திருந்த கருத்தொன்று நமது நோக்குக்கு வலுச்சேர்ப்பதாக காணப்படுகின்றது.

“தமிழ் என்ற சொல் அம்மொழியையும் அதனை பயன்படுத்துபவரையும் குறிக்கின்றது. தென்னிந்தியாவில் இச்சொல்லின் பயன்பாடு முஸ்லிம்களையும் குறிக்கின்றது. (பெரும்பாலும் அவர்கள் தமிழ் முஸ்லிம்கள் எனக் குறிக்கப்படுவதுண்டு.) ஆனால் இலங்கையில் முஸ்லிம்கள் வேறான தனித்துவத்தை கொண்டுள்ளனர். எனவே, சமஷ்டிக்கட்சி தமிழ் பேசும் மக்கள் என்ற சொற்தொடரை பிரபலப்படுத்த முயற்சி செய்தது. ஆனால் அதில் மிகச்சிறிய அளவே வெற்றிபெற்றது. இலங்கையின் சமய, கலாசார பாரம்பரியங்களும், வரலாற்று நிலைமைகளும் முஸ்லிம்களுக்கொரு தனியான அரசியல் தனித்துவத்தினை அளித்தன.”

**(நன்றி – இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்)**

இலங்கையில் வாழும் பிரதான மூவின சமூகத்தினுள் இரு சமூகத்தினர் மொழியினை வைத்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அதனையே அவ்விரு சமூகங்களும் வரவேற்று அரவணைத்துள்ளதை காணலாம். சிங்களவர், தமிழர் என மொழியினை வைத்து அடையாளம் காணும் அதேநேரம் முஸ்லிம்கள் மட்டும் சமயத்தை வைத்தே இனம்காணப்பட வேண்டியவர்களாவர்.

சிங்கள மொழி பேசும் கிறிஸ்தவர்களும் தமிழ்மொழி பேசும் கிறிஸ்தவர்களும் சிங்கள, தமிழ் கலவரங்களின் போது அவரவர் மொழி ரீதியில் பிரிந்து நின்று போராடினார்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. ஆகவே மொழியினை வைத்து சிங்களவர், தமிழர் அடையாளப்படுத்தப் படவேண்டியவர்கள் தவிர முஸ்லிம்கள் அல்ல என்பது தெட்டத்தெளிவான சங்கதி.

"நீண்ட காலம்தொட்டே இலங்கையில் அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் வேறுபட்ட இனப்பிரிவினர்களாக கருதப்பட்டு வருகின்றனர். முஸ்லிம்மக்களுக்கென பிரித்தானியா ஆட்சிக்காலத்தில் அரச சபையில் தனியான பிரதிநிதித்துவங்கள் கூட ஒதுக்கப்பட்டுள்ளன." **(மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர∴ப், வீரகேசரி – 07.02.1987)**

எது எவ்வாறு இருந்தாலும் தமிழ் மக்கள் தமது இனத்தை நிறுவுவதற்காக எந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டாலும் அது அவர்களின் சுதந்திரத்திற்கு உரியதாகும். அதே பொறிமுறையை முஸ்லிம் மக்களும் ஏற்றாக வேண்டுமென்ற ஒரு மறைமுக திணிப்பை முன்னெடுப்பது சமூக நல்லிணக்கத்திற்கு ஆரோக்கியமான பக்கமல்ல. ஆகையினால் இவ்விடத்தில் தமிழ் மொழியை தாய்மொழியாக முஸ்லிம்கள் கொண்டிருப்பதோ, பொதுவான இனத்துவ வரையறைக்குள் முஸ்லிம்களை உள்ளடக்கிப்பார்த்து முஸ்லிம்களும் தமிழர்கள்தான் என ஒருவட்டத்தை போட்டுக்கொள்வதும் ஒரு நேர்மையான இயங்குதளமல்ல என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்வதற்கு பின்வரும் அம்சங்களில் நமது கவனத்திரட்சியை நகர்த்த வேண்டியிருக்கின்றது.

இலங்கை முஸ்லிம்களை தனியானதொரு இனமென கொள்ள முடியாது. ஏனெனில் முஸ்லிம் சமூகத்தை ஒரு தேசிய இனமாக கொள்வதற்கு இனம் பற்றிய ஆய்வாளர்களினால் முன்வைக்கப்படுகின்ற கோட்பாடுகளுக்குள் முஸ்லிம்களை முழுமையாக உள்ளடக்கிக்கொள்ள முடியாதவர்களாக இருப்பதி னாலாகுமென்ற காரணம் மேலோட்டமாக கூறப்பட்டு வருகின்றவையாகும்.

இலங்கை முஸ்லிம்களை ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரித்துக்கொள்ள முடியாது என்கின்ற சிந்தனை ஏறத்தாழ நூற்று ஐம்பது வருடங்களாக இங்கு இருந்து வருகின்றது. இக்கருத்தினை நமது அண்டைய நாடான இந்தியாவின் தமிழ்நாடு வரை பரப்பியும் வைத்துள்ளனர். இக்கருத்தினை இலங்கை தமிழ் அரசியல்வாதிகளில் பெரும் பகுதியினரும் சில சிங்கள அரசியல்வாதிகளும் விரல் விட்டு எண்ணக்கூடிய முஸ்லிம் அரசியல் வதிகளும் கொண்டிருப்பது துலம்பரமானது.

இலங்கை முஸ்லிம்கள் தனியானதொரு தேசிய இனமல்லவென்ற கருத்தை முன்வைக்கின்ற ஒவ்வொரு சந்தர்பத்தையும் முன்வைப்போரின் பின்னணியையும் நாம் கூர்ந்து நோக்கின் அந்த சூழலும், அவர்களும் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கமின்றி வேறெதுவும் இருக்காமையை புரிந்துகொள்வதில் சிரமம் இருக்காது.

சேர். ராசிக்பரீட் "எனது உடலில் சிங்கள இரத்தம் ஓடுகிறது என்பதில் நான் பெருமிதப்படுகின்றேன்" என்ற கருத்து தொணிக்க தெரிவித்திருந்தமை முன்னாள் யாழ் உதவிமேயர் "எனது உடலில் தமிழ் இரத்தம் ஓடுகிறது, நான் பெருமைப்படுகிறேன்" என்ற கருத்துப்பட உரைத்தமை.

1885இல் சேர்.பொன் இராமநாதன் "இலங்கை முஸ்லிம்கள் இனத்தால் தமிழர்கள்" என்ற கருத்துப்பட கூறியமை, 1977 தேர்தல் காலத்தில் டாக்டர் இல்யாஸ் "தமிழர்களும் முஸ்லிம்களும் இரத்தக்கலப்பு உள்ளவர்கள்" என்று பிரசாரம் செய்தமை "இலங்கையில் வாழும் அத்தனை முஸ்லிம்களும் தமிழர்களே, அவர்களின் தாய்மொழியும் தமிழே, அவர்களின் சமயம் மட்டும் இஸ்லாம்" என தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த ராணி சஞ்சிகை 1987இல் வெளிப்படுத்தியமை.

"இலங்கை முஸ்லிம்கள் மரக்கலத்தில் வந்து குடியேறிய வந்தேறிகள்" என எஸ்.கே. வடிவேலு வரைந்தமை. "இலங்கையில் இரண்டு பிரதான தேசிய இனங்கள் வாழ்கின்றன" என தினகரன் ஆசிரியர் தலையங்கம் தீட்டியமை. "இலங்கையில் இரு தேசிய இனங்களே உள்ளன, அவை சிங்களவர், தமிழர் ஆகியோரே அந்த இரு இனத்தினராவர்" என தினமுரசு சுட்டிக்காட்டியமை.

"இலங்கை முஸ்லிம்களை ஒரு தேசிய இனமென்று கூற முடியாது. இலங்கையில் சிங்கள தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் ஆகிய இரண்டு தேசிய இனங்களே உள்ளன. இந்த வகையில் முஸ்லிம்களுக்கு அரசியல் சுயநிர்ணய உரிமை இலங்கையில் இல்லை. ஒரு தேசிய இனத்துக்கே சுய நிர்ணய உரிமை இருக்கிறதேயன்றி ஒரு சமூகத்திற்கு அந்த உரிமை கிடையாது." என நவமணி பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் தமிழ் அரசியல் கட்சி பிரமுகர் தெரிவித்தமை.

தமிழ்நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வந்த பேராசிரியை பர்வின் சுல்தான், முஸ்லிம் லீக் பிரமுகர் சேக் தாவூத் ஆகிய இருவரும் தாம் பேசுகின்ற தமிழ்மொழியக்கொண்டு கணிக்கப்படுகின்ற இனத்துவ கோட்பாட்டிலிருந்து "தமிழ் மொழி பேசுகின்ற முஸ்லிம்கள் யாவரும் இனத்தில் தமிழர்கள்" என்ற கருத்தை முன்வைத்திருந்தனர். இவை யாவும் இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனியான இனமல்ல என்பதை கோடிட்டுக்காட்டுவதற்கு பிரயோகிக்கப் பட்டிருப்பதை பார்க்கலாம்.

இப்படியான கருத்துக்கள் வெளிப்படுவதன் பிரதான நோக்கு அரசியல் ஆதாயம் கருதியென்பதை நாம் தெளிவாக அவதானிக்கலாம். ஆதலால் இதுவொரு குறுகிய மனோபாவத்தினதும் பரந்த சிந்தனைகளுக்கு புறம்பானதும் என்பதை ஆழமாக சிந்திக்கும் எவரும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும்.

பொதுவாக இனம் என்ற சொல்லாடல் பிந்தியதாகும். அதற்கு முந்தியதும் இதனை ஒத்ததுமான ஒன்றுதான் சமூகம் என்ற பதமாகும். இதனை பின்வரும் வரைவிலக்கணங்கள் ஊடாக இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். "இனம் - (மொழி, மதம் போன்ற ஏதேனும் ஒரு காரணஅடிப்படையில் அமையும்) மக்கள் பிரிவு". **(நன்றி : க்ரியாவின் தற்கால தமிழ், தமிழ், ஆங்கில அகராதி, பக்கம் - *170.*)**

சமுதாயம் (சமூகம்) என்பதற்கு "பொதுவான பண்புகளையும் நியதிகளையும் கொண்டு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தொகுதி". என வரையறுக்கின்றது. **(நன்றி : க்ரியாவின் தற்கால தமிழ், தமிழ், ஆங்கில அகராதி, பக்கம் - *544*)**

ஒரு தேசிய இனத்தை அளவிடுவதற்கு பின்வரும் பண்புகள் அளவுகோள்களாக பெரும்பாலானவர்களினால் இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1. தேசம் அல்லது அரசியல் அடையாளம்.
2. மொழியியல்
3. கலாசாரம்
4. பௌதீகவியல் (நிறம், தோற்றம் - அமைப்பு, தோல், குருதி, பாரம்பரியம்)
5. மதம்

இனம் பற்றிய சிந்தனைகளில் மானிடவியல், சமூகவிஞ்ஞான அறிஞர்கள் தமக்கிடையே அளவீடு சம்பந்தமான பண்புகளை ஒன்றுக்கொன்று வேறுபாடாக முன்மொழிந்து வெளிப்படுத்தி உள்ளனர். இதனால் பிரதேசத்திற்கு பிரதேசம் நாட்டுக்கு நாடு சமூகத்திற்கு சமூகம் மாறுபாடான அளவீடுகளை பிரயோகித்திருப்பதையும் காணலாம்.

இனம் என்ற சொல் ஆறாம் நூற்றாண்டுகளுக்கு பின்னரே தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது. ஐரோப்பிய மொழிகளில் இனம் (Ethenic) என்ற சொல் ஆறாம் நூற்றாண்டிலிருந்தே கையாளப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

"உடலியல் கூறுகளினால் - பண்புகளினால் ஒரு குழுவினரிடமிருந்து வேறுபடும் இன்னொரு குழுவினரைக் குறிக்கும்." பொருளில் இனம் என்ற சொல் பயன்பட்டது மிக அண்மையில் என்பதும் ஆய்வுகள் தருகின்ற இன்னொரு முடிவாகும்.

இவ்வாறு தேசிய இனம்பற்றி பல வரையறைகள் இருந்த போதிலும் கம்யூனிசிய கோட்பாட்டின் அடிப்படையில் ஸ்டாலினின் கருத்தான "பொதுவான மொழி, வாழ்புலம், பொருளாதார வாழ்வு, பொதுவான கலாசாரம் உடைய வரலாற்றுப் பாரம்பரியம் உடையவர்களுமான மக்கள் குழுவே" ஒரு தேசிய இனமாகும் என்ற கூற்றினை பலர் ஏற்றிருப்பதனை நாம் காணலாம்.

தேசிய இனத்துவம் பற்றிய ஸ்டாலினின் சிந்தனைகள்- கோட்பாடுகள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செயலிழந்தாக அல்லது பொருளற்றதாக மாற்றப்பட்டிருப்பதை வரலாறு நமக்கு விபரிக்கின்றது. இனத்துவ அளவீடுகளில் மதமும் ஒரு சமூகத்தை தனியான இனமாக அடையாளப்படுத்த பயன்பட் டிருப்பதை மானிடவியளாளர்களும் சமூக ஆய்வாளர்களும் தற்காலத்தில் ஏற்றுள்ளனர்.

"இனக்குழு என்பதனால் கருதப்படுவது யாதெனில், வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட சுய உணர்வுள்ள ஒரு சமூகமாகும். அதற்கு பெரும்பாலும் மொழி, சமயம் முக்கிய அம்சங்களாக அமைந்த சிறப்பான வரலாறும் பண்பாடும் உண்டு" என சேனக்க பண்டாரனாயக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

சமய அடிப்படையில் ஒரு தனித்துவமான சமூதாயம் நீண்ட நாட்களாக வாழ்ந்துவருவார்களாயின் அவர்களை மத அடிப்படையிலான சுய அடையாளம் தேசிய இனச் சுயநிர்ணய உரிமை பெற தகுதியுடையவர்களாக கொள்ளலாம். இதற்கு முன்னாள் "யூகோஸ்லாவியாவில் முஸ்லிம், கத்தோலிக்க மரபு சார்ந்த கிறிஸ்தவர் தனித் தேசிய இனங்களாக அடையாளப்படுத்தப்பட்டதை உதாரணங்களாக கொள்ளலாம்.

இந்தியாவின் பஞ்சாபில் மொழியை அடிப்படையாக கொள்ளாது சமயத்தை அடிப்படையாக கொண்டு மாநில அரசு வழங்கப்பட்டமையும் பொது மொழி மட்டும் ஒரு தேசிய இனத்தை உருவாக்கிவிடாது. அதேநேரம் தொடர்ச்சியான பிரதேசம் அவசியமான பண்பாயினும் இதுவும் ஒரு தேசிய இனத்தை நிர்ணயிக்க நிலையான சான்றல்ல என்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

"இலங்கையில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் யாவரும் ஒரே வகையான உடலியற் பண்புகளை கொண்டிருந்த போதிலும் வெவ்வேறான இனக்குழுக்களாகவே உள்ளனர். தனித்தனி இனக்குழுக்களாக இவர்களை வேறுபடுத்துவன சமயம், மொழி ஆகியவையும் ஏனைய பண்பாட்டு தனித்தன்மைகளுமாகும்" என சித்திரலேகா மௌனகுரு குறிப்பிடுவதும் குறிப்பிடத்தக்கதாகும். (நன்றி - இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்)

"இலங்கையில் இனம் கட்டமைக்கப்பட்டுள்ளமை சிங்களவர், தமிழர், முஸ்லிம் மற்றும் வேறு மக்கள் தொகுதியென்ற அடிப்படையிலுமாகும்" என எம்.ஒ.எ.டீ சொய்சா எம்.எ சுட்டிக்காட்டியுள்ளார். ஆயின் இலங்கை முஸ்லிம்களும் ஒரு தேசிய இனமாகவே கொள்ளப்படுகின்றனர். அதேநேரம் இனத்துவ கோட்பாடுகளும்

ஏற்றுக்கொள்கின்ற ஒன்றில் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமல்ல என குறிப்பிடுவது முன்னர் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு அம்சத்தில் புதிய அபிப் பிராயத்தை தோற்றுவிப்பதாகவே அமையும்.

இலங்கை முஸ்லிம்கள் மட்டுமன்றி உலகத்தில் எந்த இடத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் தங்களை அடையாளப்படுத்த மதத்தையே பிரயோகிப்பது முஸ்லிம்களுக்கான ஒரு தனித்துவ அம்சமாகவும் இது நீண்ட பாரம்பரியத்தையும் கொண்டிருக்கின்றது. இதனால் இரத்த உறவு, பாரம்பரியங்கள், கலாசாரம் போன்றவற்றுக்கு அப்பால் சமயத்தினைக்கொண்டு தங்களை அடையாளப் படுத்திக்கொள்கின்றனர். இதற்கு இலங்கை முஸ்லிம்களும் விதிவிலக்கல்ல.

"பிறப்பு, தாய்நாடு, நிறம், தாய்மொழி போன்றவை இயற்கையான அமைப்புக்கள் என்பதால் இவற்றை அடிப்படையாகக்கொண்ட இனம் பற்றிய கோட்பாடுகளை இஸ்லாம் ஏற்கவில்லை. (நன்றி – இஸ்லாம் ஓர் அறிமுகம்)

இலங்கை வாழ் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருப்பதினாலோ அல்லது தமிழ்மொழியினை பேசுவதினாலோ தமிழர்களாக – தமிழினமாக முஸ்லிம்கள் கருதப்பட முடியாது. ஏனெனில் ஈரானில் வாழும் முஸ்லிம்கள் பாரசீக மொழியை பேசுவதினால் பாரசீக முஸ்லிம்கள் என்றோ, பாக்கிஸ்தானில் வாழும் முஸ்லிம்கள் உர்து மொழியை பேசுவதினால் உர்து முஸ்லிம்கள் என்றோ கூறுவதில்லை. மாறாக இஸ்லாம் எனும் அறநெறியை ஏற்றுக்கொண்டவர்கள் எந்த நாட்டில் எந்த மொழியை பேசிக்கொண்டாலும் அவர்கள் முஸ்லிம்கள் என்ற தனித்துவமானதும் தனியானதுமான அடையாளத்தையே பெறுகின்றனர்.

இப்பண்பு நேற்று இன்று தோன்றிய ஒன்றல்ல. இருபதாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே அதாவது மனித உற்பத்தியான நபி ஆதம் (அலை) அவர்கள் இப்புவிக்கு வந்த காலம்தொட்டே முஸ்லிம்கள் மதத்தின் மூலமே தங்களை அடையாளப்படுத்தி வந்துள்ளனர். என்பதே குர்ஆனின் கூற்றாகும்.

ஸ்டாலின் போன்றவர்களுக்கும் மானிட சமூக ஆய்வாளர்களுக்கும் முன்னரே முஸ்லிம்களின் அடையாளம் நிறம், கோத்திரம், மொழி, இரத்தம், பிரதேசம், தோல் போன்ற தன்மைகளினால் அடையாளப்படுத்த முடியாதென்றும் அவர்களின் தனித்துவமான சுயஅடையாளம் மதம் சார்ந்தது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனின், இலங்கை முஸ்லிம்களின் சுயஅடையாளம் மதத்தின் வழிநின்று பெறத்தக்கதாகும்.

"முஸ்லிம்களை பொறுத்தவரை இஸ்லாத்தின் மத அடையாளத்திற்கு முன்னர் அவர்களது வேறுபட்ட இனக்குழுமவ மூலங்கள் முக்கியத்துவமற்றவை ஆகிவிட்டன". (நன்றி - பேராசிரியர் அமீர் அலி - முஸ்லிம் சாகியத்தின் பன்முக அடையாளங்களும் அரசியல் தேர்ந்தெடுப்புக்களும், பக்கம் - 08)

"தமிழ் பேசுபவராக இருந்தார்கள் அல்லது தமிழ் பேசுபவர்கள் ஆனார்கள். அதே வேளை சமூக அடிப்படையில் சிங்களவர்களிடமிருந்தும் தமிழர் களிடமிருந்தும் வேறுபட்ட அவர்களை (முஸ்லிம்களை) இனரீதியாக பிரித்துக்காட்ட இஸ்லாம் உதவியது". **(நன்றி - கலாநிதி தேவநேசன் நேசையா, இனத்துவம், பக்கம் -04)**

"சிங்களவரும் தமிழரும் தத்தம் மொழியை பேசுவது போன்று சோனகரும் தமிழை தங்கள் சொந்த தேசிய மொழியாகக் கருதி பேசுகிறார்களா அல்லது கடன் வாங்கப்பட்ட ஒரு மொழியாகப் பேசுகிறார்களா?..."

"இந்தியாவின் இப்போதைய பாரசீகர்கள் அவர்களின் பேச்சுமொழி குஜாராத்தி ஆகும், பாரசீக மொழி மேலும் அவர்களது மொழியாக இருக்கவில்லை அப்படியாயின் அவர்கள் பாரசீக வழித்தோன்றல்கள் அல்ல என்று தீர்மானிக்க முடியுமா?... **(நன்றி - ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் , இலங்கைச் சோனகர் இன வரலாறு ஒரு திறனாய்வு)**

ஆகவே இலங்கை முஸ்லிம்கள் தமது தாய் மொழி போன்று தமிழை உபயோகிப்பதனால் அவர்கள் தமிழர்கள் என வரையறுத்துக் கொள்வதற்கு சாத்தியமில்லை. இதனை மேற்சுட்டிக்காட்டிய மொழிக்கடன் வாங்குதலினால் தமது ஆரம்ப மொழியை முற்றாக கைவிட்டு விடுகின்ற ஒரு நடைமுறை உலகில் காணப்படுகின்றவற்றுடன் இதனையும் நாம் பார்க்க முற்பட்டால் சரியான முடிவுகளைப் பெற முடியும்.

"இஸ்லாமிய தமிழர், சிங்கள முஸ்லிம்கள்" போன்ற அடைமொழிகளினால் முஸ்லிம்களை அழைப்பதோ, கணிப்பதோ, அடையாளப்படுத்துவதோ அறிவு பூர்வமான நடவடிக்கை அல்ல. உண்மையில் இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய சமூகமாக அடையாளம் காணப்பட்டு அரசியல் சுயநிர்ணய உரிமை உடையவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் என்பதே எதார்த்தமாகும். இதிலிருந்து விலகிச்செல்வதற்கு ஏதுவான எந்தக் காரணங்களும் இல்லை.

இதனால்தான் இரா.சம்பந்தன் அவர்கள் கூட அதிகாரப்பகிர்வு சகல மக்களுக்கும் சமமாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகப் பார்க்க வேண்டுமே தவிர ஏதோ எமக்காக அவர் குரல் கொடுத்தவராகவோ விட்டுத்தந்த வராகவோ இல்லையென்பதுதான் நாம் இன்று உணரவேண்டிய பக்கமாகவும் உரத்துச்சொல்ல வேண்டிய பேசுபொருளாகவும் நமக்கிருக்கின்றது.

*30.03.2016* - நவமணி

## எப்படியும் பெறவேண்டிய முஸ்லிம் மாகாணம்!

முஸ்லிம் மக்களாகிய நமது தனிக்கட்சி ஆதிக்கத்தில் இன்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிலான செயற்பாட்டுத்தளத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகள் முன்னணி வகிக்கின்றன. இவை இரண்டிலும் நமது மக்களின் ஆதரவுத் தளத்தினை வைத்துப் பார்த்தால் முதலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருப்பது மிகவும் தெளிவான ஒன்று.

நமது சமூகத்தினை வழிநடத்தும் பொறுப்புக்கள் மேற்குறித்த இரு கட்சிகளின் தலையான கடமைக்கும் பொறுப்புக்குமுரியது.அப்படியிருந்தும் தேர்தல் காலங்களில் நமது மக்களை விழிப்பூட்டும் செயற்திட்டத்துக்கு வழங்கிய முக்கியத்துவத்தை சமூக நலன் குறித்தும் இனப்பிரச்சனை தீர்வை நாம் அடைந்து கொள்வதில் விழிப்புணர்வினை காட்டாதும் மௌனம் சாதிப்பது பல்வேறு சந்தேகங்களை நாம் எழுப்புவதற்கு வாய்ப்பளிக்கின்றன.

இன்று நமது தேசத்தில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பேசப்படும் ஒரு விடயமாக இனப்பிரச்சனைத் தீர்வு மேற்கிளப்பப்பட்டுள்ளது.இதுகுறித்து நமது தனிக்கட்சிகள் எவ்வித பிரஞ்ஞையுமின்றி காணப்படுவதானது உண்மையில் மக்களாகிய நமக்கு செய்யும் ஒரு வகையான துரோகமாகவும் தூரநோக்கில்லா போக்காகவும் இதனை அடையாளப்படுத்தவேண்டியுள்ளது.

தேசத்தின் அரசியல் தளத்தில் சூடுபிடித்து,விவாத களமாக கருத்தாடல் செய்யப்படும் இனப்பிரச்சனை விடயத்தில் வெறுமனே குடியியல் சமூகத்திடம் முற்றுமுழுதாக ஒப்படைத்துவிட்ட பாணியில் நமது தனியான அரசியல் கட்சிகள் ஓய்வெடுத்துக் கொள்வது இன்றைய சூழலில் பொருத்தமான இயங்கியலாக எம்மால் பார்க்க முடியவில்லை.

நமது மக்களின் இனப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்படல் வேண்டும் என்பது பற்றி நமது மக்களின் கருத்தறிவதற்கும் அதன் சாதக பாதகங்கள் குறித்து விழிப்பூட்டும் வகையிலும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியும் விரைந்தும் செயற்பட வேண்டிய தருணத்தில்,இப்படி தூரத்தில் நின்று கொண்டிருப்பது நமது தனியான அரசியல் கட்சிகளின் ஓர்மத்தின் மீதும் நாம் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை என பொதுவாக சுட்டிக் காட்டிப் பேசப்பட்டாலும் அது வடக்கு,கிழக்கு மாகாணங்களின் பிரச்சனைகளை தீர்ப்பதோடு பெரும் பாலும் சம்பந்தப்பட்டிருக்கின்றது. இவ்விரு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களாகிய நாம் நமது தனியான அரசியல் கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவற்றை பெரும்பாலும் ஆதரித்தும் இருக்கின்றோம்.

இதனடிப்படையில் நமது பிரச்சனைகளுக்கு சரியான தீர்வினை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் இவ்விரு கட்சிகளும் அதிக முக்கியத்துவ மெடுத்து சிறந்த தீர்வை முன்வைத்து அதனை அடைந்துகொள்வதற்கு ஓய்வின்றி செயற்படும் செயற்பாட்டாளர்களாக தம்மை மாற்றியிருக்க வேண்டும்.

தனியான அரசியல் கட்சி என்ற அடிப்படையில் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியிருந்தும் அதனை புறக்கணித்துவிட்ட பாங்குக்குள் அசமந்தமாக இருப்புக்கொண்டிருப்பது நமது மக்களுக்கு ஆரோக்கியமான பங்களிப்பாக இருக்கப்போவதில்லை.இதற்காகத்தான் நமக்கான தனிக் கட்சிகளை ஆதரித்தோமா? என்ற சலிப்புத்தன்மையில் நமது மக்கள் இன்று காணப்படுகின்றனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்வு விடயத்தில் ஒரேயடியாக மௌனத்தை கடைப்பிடிக்கும் வகையில் தமது நகர்ச்சிகளை முன்னெடுத்துள்ளது.பட்டும் படாமலும் இது விடயத்தில் அதன் தலைவர் சில இடங்களில் வீர வசனம் பேசுவதும் பல இடங்களில் செய்வதறியாது மௌனம் சாதிப்பதும் ஒரு தொடர்கதையாக எழுதிக்கொண்டிருக்கின்றார்.

ஆகக் குறைந்தது வடக்கு மாகாணத்தில் வாழும் நமது முஸ்லிம் மக்களுக்கு இப்படித்தான் தீர்வு எட்டப்படவேண்டுமென்கின்ற ஒரு கொள்கைப் பிரகடனத் தையோ அல்லது அறிக்கைத்தெளிவூட்டல்களையோ செய்யாது தமது கவனங் களை வேறு திசையில் திருப்பி செயற்படுவதென்பது அம்மக்களுக்குச் செய்யும் பெரிய துரோகமென்பதையாவது உணர்ந்துகொண்டவராகவும் தெரியவில்லை.

முஸ்லிம் தனியான அரசியல் கட்சியின் முன்னோடி பிதா அல்லது தாய் என மார்புதட்டிக்கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் கூட இவ்விரு மாகாண முஸ்லிம்களின் தீர்வாக எது அமைய வேண்டும் என வாய்திறக்காது வாய் மூடியாக இருப்பது நமது சமூகத்தினை அதள பாதாளத் துக்குள் இழுத்துச் செல்வதாக அமையும் என்பதை உணர்ந்து கொண்டவர் களாகவும் பார்க்க முடியவில்லை.

தமது கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரீ.எம் ஹஸனலி, தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகிய இருவருக்கும் கட்சியில் தற்போதைய காலகட்டத்தில் பெரிய இடம் வழங்காது அவர்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து ஓரம் கட்டிவைத்திருப்பது போன்ற

பாங்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூ.்.ப் ஹக்கீம் அண்மையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை நமது மக்களிடம் தெளிவாக காண்பித்துமிருக்கின்றார். இவ்விருவரும் தலைமைத்துவத்துடன் நெருக்கமாக தாங்கள் இருப்பதாக வாக்குமூலம் அளித்தாலும் அது உண்மையில்லை என்பதை நிருபிக்கும் வகையில் அங்குமிங்குமாக தலைவர் ரவூப் ஹக்கீம் உட்கிடையாக தமது கட்சி ஆதரவாளர்களிடையே ஒரு பரப்புரையை சத்தமின்றி செயல் படுத்தியும் வருகின்றார்.

இந்நிலையில் இவ்விருவர்களும் நமது மக்களின் இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் மிகவும் மும்முரமாகவும் அக்கறையெடுத்தும் பேசுவதற்கு மிகுந்த பிரயத்தனங்களை மேற்கொண்டும் வருகின்றனர். இதன் அடையாளங்களாக அவர்களின் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கைகள் நமக்கு சாட்சியமாக இருக்கின்றன.

இருந்தாலும் இவர்கள் குறிப்பிடும் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை என்பதுதான் நமது மக்களுக்கு சிறந்த தீர்வாக இருக்க முடியும் என்பதும் இதனைத்தான் ஸ்ரீரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் வலியுறுத்திய வகை என்பதும் எவ்வளவு யதார்த்தமாக இருந்தாலும் அது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைவருடாக முன்வைக்கப்படும்பொழுதுதான் வலிமைப்படும்.

போதைக்கு அடிமையாக்கி காரியங்களை சாதிக்கும் கைங்கரியத்தின் அடிப்படையில் நமது மக்களிடம் தனிக் கட்சியின் தேவை எனும் போதையை ஊட்டி அதற்கு ஒரே கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் ஒரே தலைவர் ரவூப் ஹக்கீம் தன் என்ற பதிவை இலாவகமாக பதித்துக்கொண்டார்.இதனால் நமது மக்களின் பகுத்தறிவும் பல சந்தர்ப்பங்களில் இயங்க மறுத்தும் விடுகின்றன.

நமக்கான தனிக்கட்சி ஏன் தேவைப்படுகின்றது, அதனூடாக கிட்டவேண்டிய பலன்களை நாம் எய்திக்கொண்டோமா என்ற தெளிவுகள் நமது மக்களிடம் இல்லாமை நமது பக்க பலவீனமாகும். இதனை நமது அரசியல் செயற் பாட்டாளர்கள் அவர்களின் பலமாக உபயோகித்துக்கொள்ளத் தவறாது கடைப் பிடித்துக்கொள்கின்றனர்.இந்நிலையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் அதுதான் நமக்கு ஏற்றமானதாகும்.

எது எப்படியிருந்தாலும் தீர்வு விடயத்தில் எது நமக்கு உகந்ததென்று நமது தனிக்கட்சியின் முதன்மைக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழிகாட்ட வேண்டும்.ஆகையால் அதன் அதிகாரத்துவத்தில் எல்லாமாக இருப்புக் கொண்டுள்ள தலைவர் ரவூப் ஹக்கீம் வாய்திறக்கவேண்டும்.அது தெளிவான குரலாக ஒலிக்க வேண்டும்.

மாறாக, உள்ளொன்றும் புறமொன்றாகவோ. அப்படியும் இப்படியும் என கருத்து எடுத்துக்கொள்ளும் வகையிலான சொல்லாடலினூடாக தப்பித்துக் கொள்ளும் தந்திரோபாயத்தை இதுவிடயத்தில் காட்ட முன்வரக்கூடாது.எதுவானாலும் சொல்வதை தெளிவாக சொல்ல வேண்டும் என்பதற்கிணங்க தலைவர் ரவூப் ஹக்கீம் மாறவேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்வின் கண்டுபிடிப்பாக இல்லாத முஸ்லிம் மாகாண சபை கோரிக்கையினை மக்கள் மயப்படுத்தி,அரசியல் அரங்கில் ஓங்கி பேசப்பட வேண்டிய பொருளாக்கிய பெருமையும் ஓர்மத்தனமும் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.பையே சாரும். அவர்களின் ஆளுமையில் முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை என்பது எந்த சந்தர்ப்பத்திலும் கைவிடாத நிலையில் அதனை வலியுறுத்தத் தவறவில்லை.

நிலத்தொடர்பற்ற என்ற சர்ச்சை இன்று எழுப்பப்பட்ட ஒன்றல்ல. என்று முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை குறித்து பெரிதாக பேசத் தொடங்கினார்களோ, அந்தக்காலகட்டத்திலேயே இவ்வாறான கேள்விக் குறுக்கீடுகள் முன்னிறுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் சரியான பதில்களை இறுப்பதிலிருந்து சற்றும் விலகிவிடாது தமது பணியை சரியாகவும் செய்துமுடித்தவர்தான் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் ஆவார்.

அவர் வகித்த தலைமைப்பதவியில் இன்றிருக்கும் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த வழிகாட்டலில் அல்லது தீர்வில் திருப்தியுற்றுள்ளாரா இல்லையா என்பது ஒரு விடயம்.இல்லை, இதற்கு மாறான இதனைவிடவும் முஸ்லிம் மக்களுக்கு அனுகூலங்களை தரக்கூடிய மாதிரியைக் கொண்ட ஒரு தீர்வை கண்டுபிடித்து வைத்துள்ளாரா என்பதும் இதன் இன்னொரு முக்கிய விடயமாகும்.

இன்று இலங்கையின் அரசியல் களம் இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து பல்வேறு கோணங்களில் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. இவற்றுள் போதிய அக்கறையும் பிரஞ்சையுமற்ற ஒரு சமூகமாக முஸ்லிம்கள் காணப்படுவது நமது அரசியல் களம் வெறுமையாக இருப்பதை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

சிலர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தீர்வுகளைப் பற்றி பரப்புரை மேற்கொண்ட போதிலும் அவைகள் அனைத்தும் ஒரு மையத்தை முன்னிறுத்தி சரியான முறையில் கட்டமைக்கப்பட்டு பேசப்படாது இருப்பது நமது கையறு நிலையை இன்னும் நிரூபிப்பதாகவே அமைகின்றது.

நமது நாட்டின் இனப்பிரச்சனை தோன்றுவதற்கு வித்திட்ட சிங்கள-பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகளின் பக்கமிருந்து மிக தெளிவாக பின்வரும் இரண்டு விடயங்களை ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றனர். இதில் அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாலும் சிவில் அமைப்புக்களும் புத்திஜீவிகள் வட்டங்களும் ஒருமித்துமுள்ளனர்.

அதாவது வடக்கு,கிழக்கு ஆகிய இரு மாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டு தீர்வுகாணப்படக்கூடாதென்றும் மற்றும் ஒற்றையாட்சிக்கு புறம்பாக சமஷ்டி முறையிலான தீர்வாகவும் அமைந்துவிடக்கூடாது என்பதிலும் மிகவும் அணுங்குப் பிடியாக தங்களது கருத்துக்களை பறைசாற்றிவருகின்றனர்.

இவ்வாறு சிங்கள சமூகம் சார்ந்த ஆதிக்க சக்திகளின் கருத்துக்கள் முன்வைக் கப்பட்டிருந்த போதிலும் இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் ஒன்றான தமிழர்கள் அவர்களின் தீர்வு குறித்து மிகவும் தெளிவாக இருக்கின்றனர்.அதன் வெளிப்பாடாக அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாலும் புத்திஜீவிகளின் கருத்து முரண்பாடுகளுக்கு அப்பாலும் சிவில் சமூகத்தின் மாறுபட்ட கருத்து நிலைக்கு மத்தியிலும் வடக்கு.கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்ட தமிழர்களின் தாயகம் என்ற அடிப்படை யையும் மற்றும் சமஷ்டி முறைமையின் கீழான அதிகாரப்பகிர்வு என்பனவாகும்.

இவ்விரு கோரிக்கைகளை ஏனைய சமூகங்களின் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளாததன் வெளிப்பாடாக தமது நிலையில் மிகவும் உறுதியோடு இவற்றின் அடிப்படையை முன்னிறுத்தியே ஏனைய தமது தீர்வுத்திட்டங்களை பல்வேறு தளங்களில் இருந்துகொண்டு வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்கள் எவ்வாறு சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திகளின் கொடுமைக்குள் உள்ளாகி சீரழிக்கப்பட்டார்களோ அதேவிதத்தில் சிங்களவர்களாலும் தமிழர் களாலும் பாதிக்கப்பட்டு காணப்படுகின்ற முஸ்லிம்களின் நிலை குறித்து தமிழர்கள் தரப்பிலிருந்து வெளிப்படும் கருத்துக்களில் சரியான முறையில் உள்வாங்கப்படாத ஒரு நிலைப்பாடு மிகவும் வேரூன்றிஉள்ளது.

இது மிதவாத தமிழ் அரசியல் தலைமைகள் தொட்டு இடையில் உருவான ஆயுதம் ஏந்திய தலைமைத்துவங்கள் வரை இதேநிலையை முஸ்லிம்கள் மீது தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர்.முஸ்லிம் மக்களை ஒரு உப குழுவாக அதாவது தனித்த ஒரு சமூகமாக அல்லது ஒரு இனமாக அறிவிப்பு செய்யாது இருட்டடிப்பு செய்துவருவதை வரலாறு நெடுகிலும் நாம் பார்த்துவருகின்றோம்.

அண்மையில் கூட வடக்கு முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியர சருமான விக்னேஸ்வரன் அவர்களை இணைத்தலைவராக கொண்டியங்கும் தமிழர் பேரவை வெளியிட்டிருக்கும் இனப்பிரச்சனைக்கான தீர்வு முன்மொழி வுகளில் கூட 1-3 தமிழ் தேசத்தின் பாரம்பரிய தாயகம் வடக்கு கிழக்கு என்பதை சுட்டிக்காட்டியதோடு 5வது அம்சமான ஆட்சி முறைமை என்பதில் குறிப்பு இடப்பட்டு (அ) பின்வருமாறு தெரிவிக்கின்றது.

“வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தனித்துவத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். முஸ்லிம் சமூகத்தால் இணைந்த வடக்கு கிழக்கில்

தமது குழு சார் உரிமைகளை நிறுவன ரீதியாக பாதுகாப்பதற்கு எடுக்கும் முன்வைப்பு எதுவாயினும் அது தொடர்பில் அவர்களுடன் கலந்தாய்வு செய்யத் தயாராக இருக்கின்றோம் என பற்றுதியுடன் கூறிக்கொள்கின்றோம்''

இந்த வாசகத்தினூடாக இதுகாலவரை முஸ்லிம் தரப்பிலிருந்து அவர்களின் தீர்வின் முதன்மையாக சொல்லப்பட்டுவந்த முஸ்லிம்களைபெரும்பான்மையாகக் கொண்ட மாகாணம் ஒன்றை உருவாக்குதல் என்பதில் கூட எந்தவிதமான நல்லெண்ணத்தையும் செலுத்தாது அதனை ஒரு பொருட்டாகக் கொள்ளாது தங்களின் அதிகாரத்துக்குள் ஒரு உப குழுவாகவும் உப அலகாகவும் முஸ்லிம் சமூகத்தை பிரயோகிப்பதற்கான நீண்ட காலத்திட்டத்தின் முன்னெச்சரிக்கையான முன்வைப்புக்களாகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

முஸ்லிம்களின் தீர்வுகளில் முதன்மையாகவும் முன்னுரிமையாகவும் மிக வலிதாக வலியுறுத்தப்பட வேண்டிய அம்சம் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணம் உருவாக்கப்படல் வேண்டும் என்பதேயாகும். அதற்கு தென்கிழக்கு மாகாணம் என பெயரிட்டுக்கொள்ள முடியும்.அல்லது இதற்கு பொருத்தமான வேறொரு பெயரை வைத்துக்கொள்ள முடியும்.

இன்றிருக்கும் அரசியலமைப்பின் பிரகாரம் கூறப்பட்டுள்ள ஒன்பது மாகாணங் களுக்குள் அடக்கமாகவோ அல்லது பத்தாவது மாகாணமாக புதிதாக உருவாக்கியோ இது நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் முஸ்லிம் சமூகம் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும்.

ஏனெனில் சமஷ்டி என்றாலும் சரி ஒற்றையாட்சி என்றாலும் சரி இவ்விரு முறைமைகளில் எந்த முறைமையின் கீழ் அதிகார அலகுகள் பகிரப்பட்டாலும் அது முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணம் இருந்தால் தான் அந்த அதிகாரப்பகிர்வில் சமாந்தரமாக பங்குபெற முடியும் என்பதில் நமது மக்களும் நம்மை வழிநடத்தும் எந்தவகையான பொறுப்புள்ளவர்களிடமும் விட்டுக்கொடுப்பின்றி இருக்கவேண்டிய விடயமாகும்.

இன்றைய கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளை முழுமையாக உட்படுத்தியும் மட்டக்களப்பு, திருகோணமலை,மற்றும் வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், யாழ் மாவட்டங்களிலும் உள்ள முஸ்லிம் மக்களை பெரும் பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக இந்த முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

இதற்கு தேவையான வகையில் உரிய இடங்களில் பிரதேச செயலகங்களையும் உள்ளூராட்சி சபைகளையும் புதிதாக அமைத்துக்கொள்ளக்கூடிய பொறி முறைகளையும் இந்த மாகாணம் கொண்டமைந்ததாக தோற்றம் பெறுதல் முக்கியமாகும்.

கடந்த பல வருடங்களாக முஸ்லிம்களினால் முன்மொழியப்பட்டு, வலியுறுத்தப்பட்டுவந்த முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் என்பது பின்னர் தென்கிழக்கு அலகு என பெயர் மாற்றம் பெற்றதும் ஒரே கோரிக்கை என்பதும் மேற்குறித்த எல்லைகளை உள்ளடக்கியதுமாகும்.ஆகவே அது இன்று மீளவும் வலிமைப்படுத்தப்படவும் முன்னிறுத்தப்படவும் உறுதிப்படுத்தப்படவும் மிக பொருத்தமான ஒரு சந்தர்ப்பம் என்பதையும் முஸ்லிம் சமூகம் மறந்துவிடக்கூடாது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணம் ஒன்று தோற்றுவிக்கப்படவேண்டும் என்கின்ற கோரிக்கையின் பிறப்பிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுடையதல்ல.இதனை பின்வரும் ஆதாரங்கள் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன.

முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் அலகு கிழக்கு மாகாணத்தில் அமைய வேண்டும் என்கின்ற அவா 1986களில் தோற்றம் பெற்றவை அல்ல. மாறாக அது நீண்ட காலத்து எதிர்பார்ப்பாகும் என்பதை மர்ஹூம் அல்ஹாஜ் எம்.இஸட். மஷூர் மௌலானா அவரது பாணியில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு புறம்பான ஒரு பகுதி ஒதுக்கப்படுவதை தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த எஸ்.ஜே.பி செல்வநாயகம் அங்கீகரித்திருக்கிறார். பண்டா-செல்வா ஒப்பந்தமும் இதனை கூறியிருக்கின்றது. இந்நிலையில் முஸ்லிம்கள் தம் பகுதியை உட்படுத்தி தனியான மாகாண சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுப்பது புதிய விடயம் ஒன்றல்ல.”
***(நன்றி : தினகரன் - 02.08.1986)***

“தமிழர்களின் அபிலாசைகளை தீர்த்துவைக்கக்கூடிய ஒரு நியாயமான தீர்வை காணும் முயற்சி தோல்வியடையாமலிருப்பதற்கு இன்று முஸ்லிம் சமூகம் முன்வைத்துள்ள முஸ்லிம்களுக்கான தனியான மாகாண சபை என்னும் யோசனை பெரிதும் உதவுமென நாம் நம்புகிறோம்.”
***(மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் - தினகரன் - 03.08.1986)***

“முஸ்லிம் லீக் முன்வைத்த பெரும்பான்மை முஸ்லிம் மாகாண யோசனைக்கு பல்வேறு இயக்கங்களும் கிழக்கு மாகாண முஸ்லிம் இயக்கங்களும் ஆதரவு தெரிவித்திருப்பது குறித்து முஸ்லிம் லீக் செயற்குழு பாராட்டு தெரிவித்துள்ளது.”
***(நன்றி : தினகரன் 2.10.1986)***

குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் அமைப்புக்களும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களும் மேல் மாகாணத்தை தலைமையமாக கொண்டியங்கும் முஸ்லிம் அமைப்புக்களில் பலதும் பெரும்பான்மையான முஸ்லிம்களின் ஏகோபித்த யோசனையாக முஸ்லிம் மாகாண சபை கோரிக்கை வளர்ச்சி கண்டதென்பது நமது கவனத்துக்குரியது.

முஸ்லிம்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த கோரிக்கையினை பௌத்த பேரினவாத அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கவில்லை என்பது ஆச்சரியமான சங்கதி அல்ல.ஆனால் சிங்களவர்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களே இவ்வாறு முஸ்லிம்களின் கோரிக்கையை நலிவடையச் செய்யும் வகையில் தமது கருத்தாடல்களை முன்னிறுத்தி வருவதுதான் ஆச்சரியத்துக்கும் வேதனைக்குமுரியதாகும்.

இக்கோரிக்கை, பின்னாளில் முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்ட தனி முஸ்லிம் கட்சிகளில் முதன்மைக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடையதல்ல என்பதனால் இக்கட்சிக்குப் பின்னர் தோன்றிய முஸ்லிம் கட்சிகளும் கூட்டு மொத்தமாக இணைந்து முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட மாகாண உருவாக் கத்தில் கைகோர்த்து திடமாக செயற்படுவதில் தயக்கம் காட்ட வேண்டிய எந்த தேவையும் இல்லை என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களிடமிருந்து முஸ்லிம் மாகாண சபை கோரிக்கையின் பின்னணி என ஆரம்பத்தில் கருதப்பட்ட மூன்று காரணங்களை எம்.வை.எம் சித்தீக் (MPA) அவர்கள் **“முஸ்லிம் பெரும்பபான்மை மாகாண சபை இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கையாகும்”** எனும் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அவற்றை இங்கு சுருக்கித்தருகின்றேன்.

அ) “கிழக்கில் அம்பாறை தொகுதி நீங்கலாக அல்லது அம்பாறை தொகுதி உட்பட ஒரு மாகாண சபை உருவாகுமானால் அது தமிழ் பேசும் மக்களுக்கிடையிலான முடிவில்லாத மோதல்களுக்கு இட்டுச்செல்லக்கூடும் என்ற ஒரு பயம்தான் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாகாண சபையினை கோருவதற்கு அடிப்படைக் காரணமாகும்”.

ஆ) தற்போதுள்ள எல்லைகளை அடிப்படையாக வைத்து ஒன்பது மாகாண சபைகள் உருவாகுமனால் தமிழ் மக்களை பெரும்பான்மையாக கொண்ட இரண்டு தமிழ் மாகான சபைகளும் சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட 7 மாகாண சபைகளும் காணப்படும். இந்நிலையானது இலங்கையில் முஸ்லிம்கள் என்ற இனமொன்று இல்லையென்ற ஓர் உணர்வை வெளியுலகிற்கு ஏற்படுத்தக் கூடும்.

இ) இந்தியாவில் அதிகாரப்பரவலாக்கள் செய்யப்பட்ட போது அல்லது மாநில சபைகள் உருவாக்கப்பட்ட போது தனிப்பட்ட இனங்களின் பாரம்பரிய கலாசார தனித்துவங்கள் மதிக்கப்படவில்லை.இதனாலேயே நாகலாந்து, மிசாரம், அஸ்ஸாம், பஞ்சாப், குஜராத் ஆகிய மாநிலங்களில் மொழி,இன,மத,கலாசார பிரச்சனைகள் அடிக்கடி எழுகின்றன.இந்த அனுபவம் இலங்கையில் ஏற்படக் கூடாது என்பதற்காகவாவது முஸ்லிம்கள் தனியான மாகாண சபையினை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகின்றது”.

இவ்வாறான காரணங்களுடன் இன்னும் சில சம்பவங்களும் சேர்ந்து முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபையின் அவசியத்தை இன்று மிகவும் தீவிரமாக்கியுள்ளது. இதனை நடுநிலையாக சிந்திக்கும் எந்த சமூகம் சார்ந்த மக்களும் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும்.இதற்கு பின்வரும் விடயங்களை இணைத்து வாசிப்பதனூடாக இன்னும் தெளிவுகளை அடைந்துகொள்ள முடியும்.

உத்தேச முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணம் ஒன்றின் உருவாக்கத்தில் காணப்படும் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கிற்கு சொற்ப குறைவாக குறைவான பிரதேசங்களில் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் அமைந்திருப்பதனால் பூகோள ரீதியாக நிலத்தொடர்பின்றி காணப்படும்.இதனால் இந்த முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்தினை தோற்றுவித்தல் சாத்தியமில்லை என்று சிலர் வாதிக்க முனையக்கூடும்.

மூன்றில் இரண்டு பங்கிற்கு சற்று குறைவான நிலப்பரப்பில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்பதற்காக முஸ்லிம்களுக்கான பெரும்பான்மை மாகாணத்தின் உருவாக்கம் சாத்தியமில்லை எனில்,அதே நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியினராக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதனால் தமிழர்களுக்கும் இவ்விரு மாகாணங்களில் நிலத்தொடர்பு இல்லையென்பது எளிதில் புரியக்கூடியது.

நிலத்தொடர்பற்ற அதிகாரப்பகிர்வுகள் உலக அரங்கில் இல்லாமலில்லை.நமக்கு அண்மைய நாடான இந்தியாவின் பாண்டிச்சேரி இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக பேசப்படுவதையும் இது விடயத்தில் ஏற்றி வாசித்தல் வேண்டும்.

இங்கு மக்களின் எண்ணிக்கையை விட சமூகங்களின் எண்ணங்கள் உணர்வுகள், தனித்துவங்கள்,உரிமைகள் என்பனவற்றின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அதுமட்டுமன்றி முஸ்லிம்கள் இந்த நாட்டின் ஒரு பழமையான வரலாற்றையும் தொன்மையையும் கொண்ட மக்கள் என்ற வகையிலும் அவர்களுக்கென்றும் ஒரு தீர்வு கிட்ட வேண்டும்.

சமய அடிப்படையில் ஒரு தனித்துவமான சமூதாயம் நீண்டகாலமாக வாழ்ந்து வருவார்களாயின் அவர்களை மத அடிப்படையிலான சுய அடையாளம்,தேசிய இனச் சுயநிர்ணய உரிமை பெற தகுதியுடையவர்களாகக் கொள்ளலாம்.இதற்கு முன்னாள் யூகோஸ்லாவியாவில் முஸ்லிம் கத்தோலிக்க மரபு சார்ந்த கிறிஸ்தவர் தனித் தேசிய இனங்களாக அடையாளப்படுத்தப்பட்டதை உதாரணமாகக் கொள்ளலாம்.

இந்தியாவின் பஞ்சாப்பில் மொழியை அடிப்படையாகக் கொள்ளாது சமயத்தை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு வழங்கப்பட்டமையும் பொது மொழி மட்டும் ஒரு தேசிய இனத்தை உருவாக்கிவிடாது. அதேநேரம் தொடர்ச்சியான பிரதேசம் அவசியமான பண்பாயினும் இதுவும் ஒரு தேசிய இனத்தை நிர்ணயிக்க நிலையான சான்றல்ல என்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

ஆகவே முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாகாணம் உருவாக்கப்படுவதுடன் அதிகாரப்பகிர்வு தீர்வுக்கு மிகவும் அவசியத் தளமாகத் தேவையுமாகும். இதனை முன்னிறுத்தியே தீர்வுத்திட்டங்கள் கட்டமைத்து அதனை நமது மக்களின் பிரச்சனைக்கான தீர்வாக பெறுவதற்கு உறுதியான செயற்பாட்டில் நமது எல்லா தரப்பு புலமைகளும் ஆளுமைகளும் ஒன்றுபடு வதும் தீர்வு மேடையில் நமக்கென்று ஒரு அடைவை அடையாளப்படுத்திக் கொள்வதும் இன்றியமையாததாகும்.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப் அவர்கள் முஸ்லிம்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு என இறுதிவரை முன்வைத்து முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாண சபை முறைமைதான் இன்றும் பொருத்தமானதாக இருக்க முடியும். இதனை தமிழ் மக்களின் அரசியல் களம் தொடர்ந்தும் உறுதியாக பேசிவருகின்ற வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பு கதையாடல் இன்னும் வலிமைப்படுத்துவதாகவே கொள்ளவேண்டியிருக்கின்றது.

அதுமாத்திரமன்றி நாமும் இனப்பிரச்சனையில் பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில் தீர்வாக வரக்கூடியதென நம்பப்படும் மாகாண சபை முறைமையினை நாமும் அடைந்துகொள்வதாயின் அதற்கென்றதொரு தளம் அவசியப்படுகின்றது. அந்த வகையில் நோக்கும்போதும் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண தீர்வைத் தவிர வேறு வழியில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான காரணங்களின் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் எம்.ரீ.எம் ஹஸனலி, தவிசாளர் பஷீர் ஷேகுதாவூத் ஆகியோர் களினால் வலியுறுத்தப்படுகின்ற முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை அவர் களின் தனிப்பட்ட அரசியல் வாழ்வின் தொய்வை சரி செய்வதன் வெளிப்பாடு அல்ல.

மாறாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் வாய்மூடி மௌனித் திருப்பதை உடைத் தெறிவதற்கும் நமது சமூகம் பின்னடைவையும் கைசேதத் தையும் எதிர்காலத்தில் பெற்றுவிடக்கூடாது என்பதின் உண்மையான ஆதங்கத் தினதும் சரியான தீர்வினதும் உந்துதல் என்ற நம்பிக்கையே நமக்கு நலன்களை விளைவிக்கும்.

*04.03.2016 - விடிவெள்ளி*

# தேசிய மாநாடு என்பது கோடிகளால் ஆகக்கூடாது கொள்கைகளால் ஆகவேண்டும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்தொன்பதாவது தேசிய மாநாடு எதிர்வரும் 19.03.2016 இல் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பாலமுனையில் நடைபெற இருப்பது நாம் அறிந்ததே. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களின் மரணத்தை அடுத்து கட்சியின் தலைமைத்துவத்துக்கு வந்த சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் காலத்தில் நடைபெறும் மூன்றாவது தேசிய மாநாடு இதுவாகும்.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் கடந்த 1986 இல் கொழும்பு பாச விலாவில் துவங்கி கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் கடந்த 1999 வரை சில தேசிய மாநாடுகளை நடத்தியிருந்தார். அவை ஒவ்வொன்றும் சில குறிக்கோள்களை மையப்படுத்தியே நடந்தேறியிருக்கின்றது. குறிப்பாக கட்சியை பதிவதை முன்னிறுத்தியும், ஜனாதிபதித் தேர்தல்களை கருத்திற்கொண்டும் தேசிய மாநாடுகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் 2005, 2008 ஆகிய காலங்களில் இரண்டு தேசிய மாநாடுகளை கூட்டியிருந்தார். அதன் இன்னொரு செயலுருவமாக 2016 இல் தேசிய மாநாட்டுக்கான அழைப்பை விடுத்திருக்கின்றார். இது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19வது மாநாடு என பதிவு செய்யப்படுகின்றது. இவரது காலத்தில் இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தேசிய மாநாடுகள் முறையே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக போட்டியிட்ட தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏன் ஆதரிக்கின்றது என்பதை எடுத்துச் சொல்வதற்கும் அதன் பக்கம் நமது மக்களை திரட்சி கொள்ளச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

அதேநேரம் 2008 இல் காத்தான்குடியில் கூட்டப்பட்ட தேசிய மாநாடு கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் களமிறங்கும் கோணத்தை நமது மக்களுக்கு வெளிப்படுத்தி அதன்பால் வெகுவாக ஈர்ப்புகொள்ளச் செய்வதற்கும் ஒரு பொறியாக பிரயோகித்துக் கொண்டது.

தமது கட்சியின் வழமைக்கு மாறாக தேர்தல் பரபரப்பு இல்லாத இன்றைய சூழலிலும் அம்பாறை மாவட்ட மக்கள் வரலாறு காணாத அளவில் வாக்களிப்பு களின் ஊடாக கட்சியை வசீகரித்திருக்கும் இன்றைய சந்தர்ப்பத்திலும் ஏன்

இந்த தேசிய மாநாடு நடைபெறுகின்றது என்பது குறித்து நாம் ஆழமாக பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் நமக்கு ஏற்படுத்தி இருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்திற்கு சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் பதவிக்கு வந்து பதினைந்து வருடங்கள் கடந்து சென்றுள்ளது. அதற்குள் நாளை நடைபெறும் தேசிய மாநாட்டையும் சேர்த்து மூன்று தேசிய மாநாடுகள் நடைபெற்றிருப்பதும் அதற்கு முன்னர் பத்தொன்பது வருடங்கள் இக்கட்சியின் தலைமைத்துவத்தை சரியாக வழிநடத்திய மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களின் காலத்தில் பதினாறு தேசிய மாநாடுகளும் நடைபெற்றுள்ளன. தொடந்தேர்ச்சியான மாநாடுகளை இக்கட்சி நடத்தவில்லை என்பதை இது குறித்துக்காட்டுகின்றது.

இதன் மூலம் இக்கட்சிக்கான தேசிய மாநாடுகளை எவ்வெப்போது நடத்தப்பட வேண்டுமென்ற எந்த வரையறைகளையும் கொண்டில்லை என்பதையும் புலப்படுத்துகின்றது. தேவையானபோது தேசிய மாநாடுகளை நடத்திக்கொள்ள முடியும் என்கின்ற ஓர் அனுமதியை இக்கட்சி விரிவான தளத்திற்கு இட்டுச்சென்றிருப்பதை மட்டும் உறுதியாக நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

எது எப்படியிருந்தாலும் குறித்ததொரு கட்சியின் தேசிய மாநாடுகள் பின்வரும் மூன்று செய்திகளை பகிரங்கமாக சொல்வதற்காக நடைபெறுவதை ஒரு வழக்கமாக பின்பற்றி வருகின்றன.

(1). கட்சியின் தொன்மைக் காலத்தை அறிவிப்புச் செய்தல், (2). எதிர்காலத்தில் குறித்த கட்சி முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்களை முன்வைத்தல், (3). குறித்த கட்சியின் மீதான மக்கள் செல்வாக்கும் அபிமானமும் அதிகரித்து இருக்கின்றது என்பதை உரத்து உரைத்தல்.

இவற்றில் கட்சிகளின் தன்மையைப் பொறுத்து அதாவது அது ஒரு ஆளும் அரசாங்கமாக இருப்பதாயின் நாடு தழுவிய கொள்கைகளையும் அபிவிருத்திகளையும் ஒரு கொள்கைப் பிரகடனமாக முன்வைத்துக் கொள்ளும். ஆட்சிக்கு வரக்கூடிய பெரிய கட்சியாயின் தாங்கள் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் எவ்வாறான ஆட்சியைப் புரிவோம் என்பதை முன்வைத்து மக்களை அதன் பால் வசப்படுத்துவதற்கு பயன்படுத்தும்.

அதேநேரம் சிறிய கட்சிகள் மற்றும் சமூகம் சார்ந்த கட்சிகளாயின் அவற்றின் எதிர்கால இலட்சியங்களை மக்கள் மயப்படுத்துவதற்கும் அதன் வழிநின்று அடைந்து கொள்வதற்கான நகர்வுகளை செயற்படுத்துவதற்கும் வழியாக்கி கொள்கின்றன.

முஸ்லிங்களின் அதிகரித்த ஆதரவைப்பெற்ற தனிக்கட்சி என்ற அந்தஸ்துக்குரிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பொறுத்தவரை அதன் தேசிய மாநாடு

மற்றும் பேராளர் மாநாடு என்பன வெறுமென கூடினோம், கலைந்தோம் என்றிராது குறிக்கோளுடன் நடைபெற்று நிறைவடைந்த பாங்கைப் பெறுவது முக்கியமான ஒன்றாகும்.

1975ஆம் ஆண்டு நடந்த ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மாநாட்டில், ‘ஜனநாயகத்தை பேணிக்காப்பதற்கும் வளர்ச்சியடைந்த பொருளாதாரம் நிலைப்படுவதற்கும் ஸ்திரமான அரசாங்கம் ஒன்று அமைவது அவசியமான தெனவும் அதற்கு மிக நெருக்கமான முறைமை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி அமைவதுதான்’ என்ற கொள்கையை பிரகடனப்படுத்தியது. அதற்கேற்ப ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் 1977 இல் ஆட்சிக்கு வந்த போது அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியது.

கடந்த 1976களில் தமிழ் மக்கள் சார்பில் அதன் அரசியல் கட்சி வட்டுக் கோட் டையில் ஒரு தேசிய மாநாட்டை நடத்தியது. அங்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தாயகக் கோட்பாட்டை முன்வைத்தது. அதனால் ஏற்பட்ட எத்தனையோ அழிவுகளை சந்தித்து இருந்தும் அதனை வட்டுக்கோட்டை தீர்மானம் என அச்சமூக மக்களின் மனங்களிலிருந்து சற்றும் விலகாத வகையில் இன்றுவரை பேசப்படும் ஒரு திடமான தீர்வாக சுயநிர்ணய உரிமை கடைபிடிக் கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நமது கட்சியாக காலூன்றியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19ஆவது மாநாடு நமது வரலாற்றிலும் தடம் கொண்டதாக அமைய வேண்டும். ஏனெனில் இம்மாநாடு நடைபெறும் இத்தருணம் நமக்கு சில சங்கடங்களை நிலைப்பேறாக்கிவிடும் ஓர் அபாய சூழலில் நாம் இருக்கின்றோம். ஆதலால் நாம் கூட்டுகின்ற மாநாட்டுக்கான அர்த்தத்தைக் கொடுக்கும் வகையில் நமது பிரச்சினைகளுக்கு காணப்பட வேண்டிய தீர்வின் மையங்கள் பகிரங்கப் படுத்தப்பட வேண்டும். அது பேசுபொருளாக்கப்பட்டு மாநாட்டின் பயனாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்று நமது நாட்டில் பரபரப்பாக பேசப்படும் அரசியலமைப்பு மாற்றம் அல்லது திருத்தம் என்பதும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படல் என்கின்ற முக்கிய காலகட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19ஆவது தேசிய மாநாடு நடைபெறுவதினால், இது விடயத்தில் கட்சியின் நிலைப்பாட்டினை மிக உறுதியாகவும் தெளிவாகவும் பறைசாற்றுவதற்கான ஒரு தளமாக பாவிக்க வேண்டும். இது காலத்தின் அவசியமாகும்.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து கடந்த இரு தினங்களாக பல்வேறு ஊடகங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் ஐந்து விடயங்களை வலியுறுத்தி அறிக்கையை வெளிபடுத்தியிருந்தார். இவ்வாறு இம்மாநாடு நிறைவேற்றுவதுதான் நமது கட்சியின் பலத்தை நிரூபிக்கவும் அதன் தோற்றத்தின் இலக்கை அடைவதற்கான வழியும் என்பதை நடுநிலையாகச் சிந்திக்கும் எவரும் மறுக்கமுடியாது.

ஆனால் நமது அரசியல் களத்தின் இன்றைய துரதிர்ஷ்டம் என்னவென்றால் ஆரோக்கியமான கருத்தை வெளிப்படுத்திய ஆளைவைத்து எடைபோட துணிகின்றோம். உண்மையில் நபரை வைத்து ஒரு கருத்தை நிராகரிப்பதை விடவும் அக்கருத்தினை விடவும் மேலான பயன்களைத் தரக்கூடிய வேறொரு திட்டத்தை, கருத்தை முன்வைத்து மறுப்பதுதான் நலன் சார்ந்த பண்பாகும்.

ஒரு சிலர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் எம்.ரி.எம். ஹஸன் அலி, தவிசாளர் பசீர் சேகுதாவூத் அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்ற நமது மக்களின் உரிமைப்போராட்டத்தின் அடைவை முன்நிறுத்தி செயற்பட வேண்டுமென முன்வைக்கின்ற பொறிமுறைகளை, அவர்களுக்கு வழங்கப்படாத தேசிய பட்டியல் விவகாரத்துடன் தொடர்புபடுத்தி கட்சிக்கெதிரான போராட்ட மென அடையாளப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்த முனைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சில முக்கியஸ்தர்களும் ஊடக பத்தி அரசியல் விமர்சகர்களும் சித்திரிப்பதில் கூட்டுச் சேர்ந்திருப்பதினால் நமது மக்களிடமும் தெளிவின்மையும் குழப்பங்களும் பெருகியுள்ளன. மேற்சுட்டிக் காட்டிய செயலாளர், தவிசாளர் அறிக்கைகளை தலைமைத்துவத்துக்கு எதிரானதாகவும் கட்சியை உடைத்தெறிவதற்குமான எத்தனங்கள் எனப்பார்க்காது கருத்தியல் ரீதியான மாற்றுவாசிப்பு என நோக்குவதுதான் நமது மக்களுக்கான ஆரோக்கியதளமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு புறம்பாக இயங்குகின்ற ஏனைய முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒரே கூட்டமைப்புக்குள் இணைந்தாலும் முஸ்லிங் களுக்கான பிரதிநிதிகளை தக்கவைத்துக் கொள்ளும் கணக்கு அதற்குள் இல்லை. மேலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கின்ற நமது மக்களின் ஆதரவுத்தளம் ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்தாலும் பெறப் போவதில்லை. இந்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருப்பவர்கள் அதற்கு எதிரான சதித்திட்டங்களில் ஈடுபடுதவதினால் எந்த பயனையும் அடையப்போவதுமில்லை.

இவ்வாறான எதார்த்த நிலைகள் இருக்கத்தக்கதான அரசியல் அனுபவமும் கணக்குத் தெளிவுகளும் கருத்தியல் சார்ந்த அரசியல் இயல்புகளும் அதிகமுள்ள செயலாளரும் தவிசாளரும் இப்படி கட்சிக்கு எதிராக சதியாடுவதாக காட்ட முனைவது அவர்களின் அரசியல் ஆளுமையை குறைத்து மதிப்பிடுவதாகவே அமையும். அந்த அளவுக்கு மதிப்பிடுவது நம்மை நாம் ஏமாற்றுவதாகவே இருக்கும்.

ஒரு கட்சியின் தேசிய மாநாட்டின் ஊடாக என்ன அடைவுமட்டத்தை நாம் பெறவேண்டும் என்கின்ற ஒரு நேரிய சிந்தனைப்புரட்சியாக இதனை உகந்தெடுத்துக்கொண்டால், நமது அரசியல் அரங்கு இன்னும் வலிமைப்படும் இலக்கில் பயணிக்கும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்தொன்பதாவது தேசிய மாநாட்டினை முன்னிறுத்தி கடந்த 12.03.2016 இல் நடைபெற்ற வைபவத்திலும் பத்திரிகையாளர் மாநாட்டிலும் அதன் தலைவர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவற்றில் பின்வரும் கருத்தாடல்கள் குறித்து நாம் அலசிப்பார்ப்பதை கட்டாயப்படுத்துகின்றது.

ஏனெனில் அவைகள் தேசிய மாநாட்டின் கோணத்தை வேறொரு பார்வைக்கு திருப்பி தேசிய மாநாட்டில் எந்த குறிக்கோளையும் திட்டமிடாதும் அடையாளப் படுத்தாதும் புஷ்வானமாக்குவதற்கு எடுக்கப்படும் தந்திரோபாயமா? என்கின்ற கேள்வியும் நம்முன் நீட்டிக்கொண்டிருக்கின்றது.

'அடுத்த பரம்பரையினருக்கு இந்தக்கட்சியை இயக்கத்தை நாங்கள் பொறுப்புச்சாட்டுவதாக இருந்தால் அவர்களுக்கு இந்த இயக்கத்திலே படியேறி வந்து உரிய இடத்தில் வந்து அமர்கின்ற அந்தஸ்து இருக்கவேண்டும். அதற்கான பின்புலத்தை உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் திடசங்கற்பம் பூணவேண்டும்'.

தலைவர் ரவூப் ஹக்கீமின் இந்தக் கூற்றானது நமது எதிர்கால சந்ததியிடம் இக்கட்சியை ஒப்படைக்கும் முடிவை எடுத்திருப்பதாகவும் அரசியல் அரங்கி லிருந்து தான் விடைபெறப்போவதாக உட்கிடையாக வெளிப்படுத்துகின்ற ஒரு பிரமையை கட்டமைக்க முனைந்துள்ளாரா என்ற நமது நியாயபூர்வமான சந்தேகத்தை இன்னும் வலுக்கச்செய்கிறது.

ஏனென்றால் கடந்த பேராளர் மாநாட்டில் தனது தலைமைத்துவ பகுதியை மிகவும் உறுதிப்படுத்திய கட்டமைப்பபை ஏற்படுத்திக்கொண்ட நிகழ்வின் நிழல் இன்னும் மறையாத நிலையிலும் அரசியல் அதிகாரத்துவத்தை கைமாற்ற பொருத்தமான புதிய தலைமுறையினரை கட்சியின் பதவி வழியில் உள்வாங்காத நிலையிலும் மேற்படி கூற்று யாரை ஏமாற்றுவதற்கானது?

'மேட்டுக்குடி அரசியல் மாற்றங்காண எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் விரும்பியிருந்தார்'. என்பது உண்மைதான். சாதாரண குடும்ப பின்னணியைக்கொண்ட பலரை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கிக் காட்டி அதன் தடத்தை ஒரு வரலாறாக பதிவுசெய்திருக்கிறார். இதனை முற்றிலும் மாற்றியமைத்து பண அரசியலை மையப்படுத்தி அதற்கு இசைவான வேட்பாளர்களையும் தேர்தல் காலங்களில் போட்டு கட்சித் தியாகத்தொண்டர்களைக் கூட கூலித்தொண்டர்களாக மாற்றி கட்சியின் பிரசுரங்களை சுவரொட்டிகளை, பதாதைகளை பகிர்வதற்கு உந்தச் செய்த தலைமைத்துவ காலத்தை வைத்துக் கொண்டு, இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் மேட்டுக்குடி அரசியலை பற்றிப் பேசுவது முரண் நகைக்குரியது.

'சதாகாலமும் தாங்கள்தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டு மென்று நினைக்கின்றவர்கள் சதாகாலமும் எங்களுக்குத்தான் நியமனம் கிடைக்க வேண்டுமென்ற நிலைவரம் மாற வேண்டும்'.

கேட்பதற்கு இது இனிப்பான செய்திதான். இதில் கசப்பான செய்தி என்ன தெரியுமா? தலைவர் இந்தத் தொப்பியை இன்னும் அணிவதற்கு தயாராக இல்லை. அடுத்தவர்களை குற்றவாளிகள் என சுட்டிக்காட்டும் சட்டத்தரணிகளின் இரண்டு விரல்கள் போக, மூன்று விரல்கள் அவர்களை குற்றவாளி என சுட்டிக்காட்டும் கதையைத்தான் இது நமக்கு ஞாபகப்படுத்தி வைக்கின்றது.

'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் வாரிசுரிமை அரசியலுக்கு ஒருபோதும் இடம் கிடையாது. அந்த வாரிசுரிமை அரசியலுக்கான இடத்தினை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்'. மற்றும் 'இந்த அரசியல் இயக்கத்தில் எங்காவது ஒரு இடத்தில் எனக்கு பிறகு இவர் அல்லது அவர் என்று சொல்லப்படவில்லை. குடும்ப ரீதியான வாரிசுரிமைகளையும் இந்தக் கட்சியில் நுழைக்கமுடியாது'. இவ்வாறு திடமாக ரவூப் ஹக்கீம் குறிப்பிடத் தவறவில்லை.

இது அவரது தலைமைத்துவத்திற்கு அடுத்து வரக்கூடியவர் யார் என்பதை இனங்காட்டமாட்டேன் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு தமது கட்சியின் ஏனைய மக்கள் பிரதிநிதிகளை மாத்திரம் மாற்றப்பட வேண்டுமென இடித்துரைக் கின்றார். இது அவலை நினைத்து உரலை இடித்த கதைதான். பேரியல் அஷ்ரஃப் அவரது மகன் அமான் அஷ்ரஃப் போன்றோரை மனதில் இருத்தியும் அதாவுல்லாவை மறைமுகமாக நினைவுபடுத்தியும் இப்படிப் பேசியிருக்கிறார்.

ஆனால் அவர் தனக்கு வசதியாக இங்கொரு விடயத்தை மறைத்திருக்கின்றார். அது வேறொன்றுமில்லை அவரது மனைவியின் தந்தையான மாமனார் குத்துஸையும், தலைவரின் உடன்பிறந்த சகோதரரான வைத்திய கலாநிதி ஹாபீஸையும் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தது நமது தலைவர் ரவூப் ஹக்கீமின் அகராதிப்படியும் வரைவிலக்கணப்படியும் வாரிசு குடும்ப அரசியலைக் குறிக்காதா?.

எனவே ஒரு தேசிய மாநாட்டுக்கு எவ்வளவு மக்கள் வந்தனர். எவ்வளவு செலவில் நடத்தினோம் என்பனவற்றினைப்பார்க்கினும் தேசிய மாநாட்டினை எமது இலக்குகளை எய்திக்கொள்வதற்கு எப்படி உபயோகித்துக்கொண்டோம் என்பதைப் பொறுத்துத்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

*18.03.2016* - விடிவெள்ளி

# இலங்கையர் என்ற அடையாளத்திற்கு இனக்குழுமத்துவம் ஒரு தடையா?

நமது நாட்டில் வாழும் அனைத்துச்சமூகங்களும் தமது மதம், இனம், மொழி வேறுபாடுகளுக்கு அப்பால், "நாம் இலங்கையர்" என்ற அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையில் நாமெல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பை இன்றைய நல்லாட்சி அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கின்றது.

இது விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் அதிகரித்த கவனக்குவிப்பை கொண்டிருக்கின்றது. இதனால்தான் இலங்கையர் என்ற அடையாளத்தை மேலும் உறுதிசெய்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பாக திட்டங்களை தயாரிக்க அமைச்சரவை உப குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம், ராஜித சேனாரத்ன, டி.எம் சுவாமிநாதன், வஜிர அபேவர்தன, மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் எ.எச்.எம் பௌசி, பிரதி அமைச்சர் கருனாரத்ன பரணவிதான மற்றும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயாகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி காலத்திலும் அதனை அடுத்து வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி காலத்திலும் "ஒரே நாடு, ஒரே மக்கள்" என்ற கோஷ முன்னெடுப்பு மிகவும் பரபரப்பாக பரப்புரை செய்யப்பட்டு பேசுபொருளாகி இருந்தன.

அதுமட்டுமன்றி மஹிந்தவின் ஆட்சி காலத்தில் இதற்கு ஒருபடி மேல் சென்று சிறுபான்மையினர் என்று நமது நாட்டில் ஒருவருமில்லை. எல்லோரும் நம் நாட்டுமக்களே என்றும் முழங்கப்பட்டன. இவைகள் யாவும் நாம் எல்லோரும் இலங்கையர் என்ற விசுவாசத்தையும் உணர்வையும் கொண்டவர்களாக மாறி வாழவேண்டும் என்பதை வலியுறுத்தும் கோணத்தைக்கொண்ட இயங்கு தளத்துக்கான பொறிமுறையின் கோஷங்களாகவே வெளிப்பட்டன.

இவ்வாறான கோஷங்களின் முன்னெடுப்பின் பின்னால் நல்லெண்ணம் அன்று இருந்ததா? என்று நோக்கினால், இல்லை என்ற பதில் தவிர வேறில்லாத

ஒரு வெற்றிடத்தைத்தான் நாம் பார்க்க முடிந்திருக்கின்றது. வெளிப்படையில் முனைப்பாக காட்டிய பக்கத்திற்கு முற்றிலும் நேரெதிரான சிந்தனையும் செயற்பாடுகளும்தான் அதற்குள் புதையுண்டு கிடந்தன.

சிங்கள-பௌத்த பேரினவாத ஆதிக்க மேலாண்மையை நிலை நாட்டுவதற்கு இதனை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளும் இயங்கியலை முன்னிறுத்திப் பேசப்பட்டவைகளாகவே இதனை பார்க்க முடிகின்றது. ஏனெனில் அவ்வரசாங்கங்களின் முன்னகர்ச்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது மாற்றான் தாய் பாங்கினை பிரயோகித்த பல கசப்பான சம்பவங்கள்தான் தொடர்ந் தேர்ச்சியாக நடந்தேறி இருக்கின்றன.

முன்னைய அரசாங்கங்களின் போலித்தனமான முன்வைப்பு போன்றல்லாது உண்மைக்கு உண்மையாக இன்றைய நல்லாட்சி அரசாங்கம், நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை நோக்கி நெறிப்படுத்த முனைந்தால் அது நமது நாட்டுக்கும் மக்களுக்கும் பேருதவிகளை புரியத்தக்கது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அந்தவகையில் இது ஆரோக்கியமான சமூகங்களின் நல்லிணக்கத்திற்கும் நாட்டின் அமைதிக்கும் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் உந்து சக்தியாக அமையவல்லதாகும். இதனை முன்னெடுத்து கட்டமைப்பதற்கு உருவாக்கப்பட வேண்டிய பொறிமுறைகள் சரியாக திட்டமிடப்படுவதோடு, அது மிகவும் ஆழமாக மக்களிடையே பதியவைக்கப்படுவதிலும்தான் நாம் இலங்கையர் என்ற அடையாளம் வெற்றிபெறுவது இருப்பு கொண்டிருக்கின்றது.

நாம் இலங்கையர் என்ற அடையாளம் நல்ல எண்ணக்கருவை கொண்டது என்பதினால் முஸ்லிம் மக்கள் உடனடியாக இதன்பால் ஈர்க்கப்படுவதும் ஏற்று போற்றிக்கொள்வதும் நல்வினையாற்றாது. மாறாக இம்மாற்றம் நிகழ்வதற்கு எங்கிருந்து அல்லது எந்தத் தரப்பினர் விட்டுக்கொடுப்புக்களிலும் உளத்தூய் மையையும் வெளிப்படுத்த வேண்டுமோ அங்கிருந்து அவைகள் சரியாக முனைப்புப்பெறுவதை பொறுத்துத்தான் இக்கோஷம் வெற்றி நகர்ச்சியை பெறும். இவ்வாறான சூழல் தோன்றினால்தான் நாமும் இதில் இணைந்து செயற்பட முடியும். அதுதான் ஆரோக்கியமான மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

பொதுவாக எந்த சமயமானாலும் வன்முறைகளை போதிப்பதில்லை. சமூக நல்லிணக்கத்தை மறுப்பதில்லை. மனித நேயத்தை புறக்கணிக்கச் சொல்வ தில்லை. நீதி, நியாயங்களை அனுசரித்தும் அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தியும், பரஸ்பர உறவை பேணவும் வழிகாட்டுகின்றது. ஆயின் அவரவர்களின் மதங்களின் வழியில் முழுமையாக வாழ்ந்தால் எந்த பிரச்சி னையும் தோன்றாது என திட்டவட்டமாக நாம் நம்பலாம்.

மதங்களின் அறப்போதனைகளில் சில விடயங்களில் ஒன்றித்த போக்குகள் காணப்பட்டாலும் மத வழிப்பாட்டு முறைமைகளில், கோட்பாடுகளில் வேறுபாடுகள்

இருக்கவே செய்யும். இதனால் மதங்களுக்கிடையில் சமரசம் என்பது அறவே சாத்தியமற்ற ஒன்றாகும். இருந்தாலும் மதச் சகிப்பு தத்துவத்தை எந்த மதங்களும் மறுக்கவில்லை. அவரவர் சமயத்தை சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் பின்பற்றுவதை சகித்துக்கொள்ளும் மனோபாவம் நமது நாட்டு மக்களிடையே விதைக்கப்பட்டு பேணப்பட்டாலே நாம் இலங்கையர் என்ற அடையாளம் உணர்வுபூர்வமாகவே வந்துவிடும்.

இன, மத, மொழி வேறுபாடுகள் ஒருபோதும் ஒழிக்கப்பட முடியாத பண்பு களாகும். உலகத்தில் எங்குமே இது மறுக்கப்படாது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அம்சமாகவும் திகழ்கின்றது. இந்த யதார்த்த நிலையினை மறுதலிக்காத வகையில் நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை நோக்கி பயணிக்க திட்டங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும். அப்போதுதான் இந்த நோக்கத்தை நாமடைந்து கொள்ளமுடியும்.

பன்மைத்துவ மத, கலாசார, நாகரிக வேறுபாடுகளைக்கொண்ட மக்கள் ஒன்றித்து வாழும் நாடுகள் பல உள்ளன. அப்படித்தான் நமது நாடும். இங்கு நல்லிணக்கம் குலையாத வாழ்வுமுறைமையை விதைப்பது கஷ்டமான காரியம் அல்ல. விட்டுக்கொடுக்க முடிந்தவைகளை விட்டுக்கொடுத்து வாழப்பழகும் போது நாம் இலங்கையர் என்ற அடையாளம் தானாகவே குடிகொண்டுவிடும்.

நமது நாட்டுமக்கள் இன ரீதியாகவும் மத ரீதியாகவும் வாழ்ந்து பழக்கப் பட்டவர்கள். இதற்கேற்பதான் நமது குடிசன மதீப்பிட்டு முறைமையும் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன. இவைகளை முற்றாக கட்டுடைப்பு செய்துவிட முடியாது. ஒவ்வொரு சமூகத்திற்கென்றும் சில மத வழிபாடுகளும் ஆடைக் கலாசாரங்களும் சம்பிரதாய வழக்கங்களும் சடங்குகளும் உள்ளன. இந்த வேற்றுமைகளை அங்கீகரித்து ஒற்றுமைப்பட்டு வாழும் நிலைக்கும் நமது மக்கள் திரும்பும்போது நாம் இலங்கையர் என்ற அடையாளக் கூறு மிகவும் பலமாக நம்மத்தியில் காலூன்றிக்கொள்ள முடியும்.

முதலில் நமது நாட்டு அரசியல் அமைப்பு கொண்டிருக்கும் பௌத்த மதத்தை காப்பதும் போஷிப்பதும் அரசின் கடமை என்ற கோட்பாடு மாற்றி எழுதப்படல் வேண்டும். எல்லா மதங்களையும் சமனாக அரசு கையாளும் போக்கினை அறிமுகம் செய்துவைக்க முன்வரவேண்டும். மற்றும் நமது நாடு ஒரு சமூகத்திற்கு மட்டும் பூர்வீகமானது என்ற மனோப்பதிவை அகற்றுவதற்கும் தேவையான முன்னெடுப்புக்களை எடுக்க வேண்டும்.

இவ்வாறான மத சகிப்புத்தன்மை இந்நாடு எல்லோருக்கும் பூர்வீகமானது எங்கின்ற நோக்கினை சரியாக பதிப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் சிறந்த இடமாக நமது பாடசாலைகளை கையாளும் வகையில் நமது திட்டங்கள் முன்னெடுப்பதன் ஊடாக நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை விரைவா கவும் சரியாகவும் அடைந்து கொள்ள முடியும்.

நமது இன்றைய கல்வித்திட்டமிடலில் சமாதானக் கல்வி என்றொரு அம்சம் இருக்கிறது. இதனை சற்று விரிவுபடுத்தி, அதாவது நாம் அடைந்து கொள்ள விரும்பும் நாம் இலங்கையர் என்ற அடையாளத்திற்கு தேவையான திட்டங்களை முறையாக பயிற்றுவிக்கும் வகையில் பாடத்திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டு அதனை ஒரு கட்டாய பாடமாக முன்மொழிதல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் எனும்போது கட்டுக்கோப்புடனும் கட்டமைப்போடும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் காலப்பகுதிகளை உள்ளடக்கிய பருவங்களை கொண்டதாகும். இங்கு கற்கப்படுபவைகள் ஆணித்தரமாக மனதில் பதிந்து கொள்ளவும் நினைவில் நிறுத்தி காரியம் ஆற்றவும் உதவும். இங்கிருந்து நாம் இலங்கையர் என்ற அடையாள விதையை விதைப்பதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல அறுவடைகளை நாம் அடைந்து கொள்வதை உறுதி செய்துகொள்ளவும் முடியும்.

மனோபாவம் மாற்றத்தின் முதல்படி என்பர். தொழிமுறைமையை மையமாக கொண்ட கல்வியுடன் மத சகிப்புத்தன்மை, நாம் எல்லோரும் இலங்கையர் என்ற உணர்வு என்பனவற்றை படிப்படியாக விதைக்கும் வகையில் படிமுறையாக புகட்டப்படுவதன் ஊடாக மாற்றி அமைக்க முடியும். சில மத வைபவங்களை எல்லோருக்கும் பொதுவான ஒரு மதத்தின் விழாவினை கைக்கொள்வதன் மூலம் நல்லிணக்கம் உடன் மலர்ந்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாது.

அதேபோன்று ஒன்றித்த சூழலில் பல சமயத்தவர்கள் வாழ்வதன் ஊடாகவும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழும் மனோநிலை வளரக்கூடியதாக இருந்தாலும் அது பரீட்சாத்தமாக நமது நாட்டிலும் நமது மக்களிடமும் தோல்வி கண்டிருக்கின்றது. இதனால் புதிய பரீட்சாத்த முறைமைகள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய ஒரு தருணத்தை நமக்கு ஞாபகப்படுத்தி வைக்கின்றது.

மதங்களில் நெறிமுறை எவற்றிலும் விட்டுக்கொடுப்பு நிகழமுடியாது. ஏன் அவ்வாறு பேணவேண்டி இருக்கின்றது என்பதை ஒவ்வொரு சமயத்தவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் கற்ப்பிக்கப்படல் வேண்டும். எப்படி மத சகிப்புத் தன்மையை அனுஷ்டிக்க வேண்டும் என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டும் வகையில் பாடம் புகட்டப்பட வேண்டும்.

இங்கு வாழும் அனைத்து சமூக மக்களுக்கும் இந்நாடு பூர்வீகமானது என்பதை வலியுறுத்தும் வகையில் நமது வரலாறு பாடஅலகு திருத்தப்படல் வேண்டும். அல்லது மத சகிப்புத்தன்மையை புகட்டும் புதிய பாடம் ஒன்றுக்குள் இதனையும் சரியாக உள்வாங்கி கற்பிக்கப்படுவதினால் மனோபாவம் மாறும் சந்தர்பத்தை எட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கின்றது.

மதம், இனம், மொழி, நிற வேறுபாடெல்லாம் இயற்கையானது. அவை பேதங்களை உருவாக்கும் கட்டமைப்புக்களை உள்வாங்கும் போதுதான்

வேண்டத்தகாத விளைவுகளையும் முரண்பாடுகளையும் பகைமையையும் நிரந்தரப்படுத்தி விடுகின்றது. அவ்வாறில்லாது இந்த இயற்கையான இயல்பை நாம் ஏற்றுத்தான் நமக்குள் ஒற்றுமை காணப்பட வேண்டும் என்பது அறிவுபூர்வமாகவும் சினேகபூர்வமாகவும் உணர்த்தப்படும் போதுதான் நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை எய்த முடியும்.

மாறாக தோல்வி கண்ட வழிமுறைகளில் இன்னும் தரித்து நின்று கொண்டு மாற்றத்தை அடைவதற்கு வழி தேடுவது ஒருபோதும் முன்னேற்றத்தை தராது. அதேபோன்று மாற்றம் நிகழவேண்டிய இரு பக்கங்கள் இருக்கும் போது ஒரு பக்கம் மட்டும் மாறுவதினாலும் உரிய இலக்கை நோக்கி பயணிக்க முடியாத முடக்கத்தையே நாம் அடைய வேண்டி இருக்கும்.

மாணவப்பருவத்தில் புகட்ட எடுக்கப்படும் அதே முயற்சி அளவில் அரசாங்க மட்டத்தில் காணப்படவேண்டிய மாற்றங்களுக்கு இடையிலான பாகுபாட்டு குறியீட்டை அகற்றி மாணவர்களிடையே போதிக்க எடுக்கும் வடிவத்திற்கு ஏற்ப அரசாங்கமும் சில திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் சில தீர்வுகளை முன்மொழிந்து மத, இன, மொழி நல்லிணக்கத்தை சரியாக கடைப்பிடிக்கும் நிர்வாக கட்டமைப்புகளை உருவாக்குதலும் வேண்டும்.

இவ்வாறான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் சில அதிகாரிகள் முட்டுக்கட்டைவகிக்கலாம். அவ்வாறான சந்தர்பங்களில் அவர்களுக்கு தேவையான மனவெழுச்சி வழிகாட்டலுடன் கூடிய தண்டனை பயிற்சிகளை வழங்கி அவர்களின் மனோ இயல்பை மாற்றுவதற்கும் ஏதுவான திட்டங்கள் நம் மத்தியில் இருக்க வேண்டும்.

இங்கு குறிப்பிடப்படாத வேறு வழிகளில் கூட நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை அடையக்கூடியதாக இருப்பின் அவ்வழிமுறைமைகளின் தேடல் களும் உள்வாங்கப்படல் வேண்டும். இக்கட்டுரை மதம், இன, மொழி வேறுபாடுகள் இருக்கத்தக்கதான நிலையில், வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமை என்ற இலக்கினை மையப்படுத்தியதாகும். இந்த வழிமுறைமையும் உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நெறியாகவும் உள்ளது.

இதனாலும் பன்மைத்துவ மத, இன, மொழி, கலாசாரங்களையுடைய மக்களை கொண்ட நமது நாடு என்பதையும் கவனத்தில் எடுத்து எனது சில பதிவுகளை இங்கு பதிவாக்கி வைக்கின்றேன். அதற்காக இதுவே முடிந்த முடிவு என்பது எனது முன்வைப்பு அல்ல. இருந்தாலும் எனது நோக்கை மீண்டும் ஒரு தடவை பின்வருமாறு வலியுறுத்த விரும்புகின்றேன்.

அவரவர் மதங்களின் வழியில் முழுமையாகவும் சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் ஈடுபடுவதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் மனோ நிலைதான் நாம் இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தி வலிமைபெறச்செய்ய ஏதுவானதாகும்.

*18.12.2015 - விடிவெள்ளி*

# வடக்கு, கிழக்கு இணைப்பு தொடங்கும் மற்றொரு பிணக்கு

இன்றைய நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருப்போரில் பெரும்பாலான வர்கள் கடந்த 2010 பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர் களாவர்.இவர்களுள் இனவாத செயற்பாட்டை முன்னிறுத்தி செயற்பட்ட பலர் இன்றைய 2015 பாராளுமன்றத்திலும் இருப்புக் கொண்டுள்ளனர். அன்று இப்பிரிவினர் பிரதானமாக ஐக்கிய தேசியக் கட்சியில் சிலரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பலருமாக இருந்தனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் மகிந்த அணியாகச் செயற்பட்ட இனவாதச் சிந்தனையாளர்கள் இன்று பாராளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த அணியினர் என்ற அடையாளத்துள்ளும்,பாராளுமன்றத்தினுள் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற வகைக்குள்ளும்,இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் என்றும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் என்றும் இவர்கள் கைகோர்த்துள்ளனர்.மற்றும் ஏலவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்களான சில இனவாத கருத்துடையோர்களின் பங்குபற்றுதலுடனும் தான் இன்றைய நமது நாடாளுமன்றம் நிலைகொண்டுள்ளது.

இனவாதத்தினை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் மனப்பாங்குடைய வர்களை உள்ளடக்கிய இன்றைய நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டுதான் இன,மத,கட்சி வாதங்களுக்குப் புறம்பான நல்லாட்சியை நடைமுறைப்படுத்து வதற்கு நல்லாட்சி தேசிய அரசாங்கம் இறங்கியுள்ளது .உண்மையான மனமாற்றத்துடன் முன்னைய இனவாதமேலீட்டாளர்கள் தங்களை மாற்றிக் கொண்டார்களேயானால்,இந்த நல்லெண்ணம் ஆரோக்கிய விளைவுகளை நமக்கு தந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

எது எவ்வாறிருந்தாலும் தேசிய அரசாங்கத்தின் உருவாக்கத்துக்கான அடிப்படை என முன்மொழியப்பட்ட அடைவுகளை நோக்கி நகர்வதற்கான முதற்கட்ட வேலைத்திட்டத்தினை முன்னிறுத்தியதாக இந்த ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு கடந்த 9.1.2016 இல் நடந்தேறியது.

இப்பாராளுமன்ற அமர்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எல்லா கட்சிகளைச் சார்ந்த மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அரசியலமைப் புக்கான நிர்ணய சபையாக பாராளுமன்றத்தை மாற்றும் பிரேரணையை முன்வைத்து

உரையாற்றினார். அவரது உரையில் பின்வரும் கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன.

“நாட்டின் நலனையும் மக்களின் எதிர்காலத்தையும் இலக்காகக் கொண்டு எமது நாட்டுக்கான புதியதொரு அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை வரைவதற்கு சிறந்த சந்தர்ப்பம் கூடிவந்துள்ளது.”

“புதியதொரு” அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு என்ற சொற்றொடரிலேயே ஆட்சேபனைகளும் திருத்தங்கள் வேண்டும் என்கின்ற கோஷங்களும் எழத் தொடங்கிவிட்டன.இதன் அர்த்தம் அரசியலமைப்பினை முழுமையாக மாற்றுவது என்றாகிவிடக்கூடாது.மாறாக திருத்தம் என்ற கோணத்தையே பெற வேண்டும் என்கின்ற எண்ணப்பாட்டினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அணியினர் உட்பட கொண்டிருக்கின்றனர் என்பதற்கு பின்வரும் கூற்று நிரூபிக்கப் போதுமானது.

“புதிதாக திருத்தம் செய்யப்படவுள்ள அரசியலமைப்பு புதிதாக உருவாக்கப் படுவதோ அல்லது 1972 ஆம் அரசியலமைப்பை பின்பற்றிய ஒன்றாகவோ அமையப்போவதில்லை.மாறாக 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பை பின்பற்றியே திருத்தம் மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியலமைப்பாகவே மாற்றப் படும்.” என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்ந்த ஊடக மாநாட்டில்(11.01.2016 இல்)அமைச்சர் பைஸர் முஸ்தபா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஷேட உரையினை ஆற்றியிருந்தது நாமறிந்ததே.உண்மையில் அந்த உரையில் காணப்படும் பின்வரும் கூற்றுக்கள் மிக முக்கியமானதும் நமது கவனங்களுக்குமுரியதுமாகும்.

“ஒரு இனத்தை, மதத்தை, அரசியல் கட்சியை முதன்மைப்படுத்தி ஒரு நாட்டின் அரசியலமைப்பு ஏற்படுத்தப்படக் கூடாது.அமெரிக்கா,பிரான்ஸ்,இந்தியா போன்ற பல்வேறு நாடுகளிலும் அனைத்து இன,மத குழுக்களையும் உள்ளடக்கி பொதுவான அரசியலமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு என்பது கல்லில் செதுக்கிய கல்வெட்டாக இருத்தலாகாது.அது யுகத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைவதாக இருக்க வேண்டும்.தெற்கு மக்களுக்கு சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டால் பயம்.வடக்கு மக்களுக்கு ஒற்றையாட்சி என்ற வார்த்தையைக் கேட்டால் கசப்பு.இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.”

நமது நாடாளுமன்றத்தினுள் இருப்புக் கொண்டுள்ள இனவாதச் செயற் பாட்டாளர்களுக்கும் தமது பிரதிநிதித்துவ வெற்றியை மட்டும் குறியாகக் கொண்டுள்ளவர்களுக்கும் மேற்படி ஜனாதிபதியின் வெளிப்படுத்துகையில்

இருக்கும் சமத்துவமான நல்லிணக்கத்தின் தாற்பரியம் புரியவில்லை என்பதை சான்றுப்படுத்த பல கூற்றுக்களை முன்வைக்க முடியும்.

இருந்தாலும் நமது நோக்குக்காக பின்வரும் கூற்றுக்கள் இங்கு பதிவாக்கப் படுகின்றது.இதற்கப்பாலும் இது போன்ற கருத்தாடல்கள் பரப்புரை செய்யப் பட்டுக்கொண்டே இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

"அரசியலமைப்புத் திருத்தம் ஒற்றையாட்சிக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக இல்லை.அரசியலமைப்பு திருத்தமானது பௌத்த-சிங்கள கொள்கையை எந்த விதத்திலும் பாதிக்காத வகையிலும் ஏனைய இன மதத்தவர்களின் உரிமைகளை பலப்படுத்தும் வகையிலும் அமையும்.அதிகாரப் பகிர்வின் மூலம் வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைக்கும் எந்தவொரு சாத்தியமும் இல்லை" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

"புதிய அரசியலமைப்பினால் இலங்கையில் பௌத்த தர்மத்துக்கு வழங்கப் பட்டுள்ள முதலிடமோ ஒற்றையாட்சிக்கோ எதுவிதமான பாதிப்பும் ஏற்படாது" என நாடாளுமன்றத்தின் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடமிருந்து வெளிப்பட்ட உன்னதமான எண்ணங்களின் ஆழத்தை பார்க்காதும் அதனுடன் முரண்பட்டுக்கொள்ளும் கோனங்களிலும் இக்கூற்றுக்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.அவ்வாறாயின் எப்படி நல்லாட்சி நடைமுறைமை செயலுருவில் செயற்படுத்துவதென்ற ஒரு கேள்வியை இவ்விடத்தில் எழுப்பாதிருக்க முடியுமா?

அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதி மீதும் அவரின் உரையில் காணப்பட்ட நல்லெண்ணத்தின் பேரிலும் பிரதமரின் புதிய அரசியல மைப்பினூடான இனப்பிரச்சனை தீர்வு முயற்சி என்பதில் இருந்த ஈடுபாட்டின் காரணமாகவும் தேசிய அரசாங்கத்தின் மீதான தமது பலத்த நம்பிக்கையினாலும் நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவது தொடர்பான விவாதத்தை தொடங்கிவைக்கும்போது பின்வருமாறு கோடிட்டுக் காட்டினார்.

"இன்று எவரும் தனி நாடு கேட்கவில்லை.தனித் தமிழீழ கோரிக்கையும் இன்று இல்லை.பிரிக்கப்படாத இலங்கைக்குள் ஐக்கிய இலங்கைக்குள் புதிய அரசியலமைப்பின் மூலம் தேசிய இனப்பிரச்சனைக்கு ஸ்திரமான தீர்வினைக் காண முடியும்.சிறுபான்மை மக்கள் இலங்கையர் என்ற பெருமையுடன் வாழும் சூழல் புதிய அரசியலமைப்பினால் உருவாக்கப்பட வேண்டும்."

இவ்வாறான நம்பிக்கைகளை இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தினை நம்பி முன்வைப்பது எவ்வளவு ஆபத்தானது என்று ஐயுற வைத்துவிடக் கூடிய ஒரு

நிலைப்பாட்டினையும் தோற்றப்பாட்டினையும் இன்றைய நாடாளுமன்றத்தில் காணப்படும் இனவாதச் செயற்பாட்டாளர்களினூடாக வரவேண்டிய நிர்ப்பந்த்த்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பினல் எதிர்பார்க்கப்படும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முறைமையின் மீதான மாற்றத்தில் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிக அக்கறை இருந்தாலும் இதில் போதிய பிடிப்பை அதாவது தொகுதிவாரியான தேர்தல் முறைமையின் மீது பிரதமருக்கு இல்லை. இதனால்தான் கடந்த 100 நாள் ஆட்சிக் காலத்திலும் இம்முறைமை மாற்றம் இருபதாவது திருத்தமாக கொண்டுவர உத்தேசித்திருந்தும் முடியாது காலம் கடந்து சென்றது.

இப்படி தேசிய அரசாங்கத்தின் முக்கியமான புள்ளிகளிடமும் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன.அதேநேரம் இதற்கப்பாலான விடயங்களிலும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு பகுதியினரிடம் மாறான கருத்துக்கள் குடிகொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய பரப்புரைக்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வினை அரசியலமைப்பினூடாக முன்கொண்டுவருவதில் பாரிய சர்ச்சைகளும் சவால்களும் இடையூறுகளும் நிறைந்து சூழ்ந்துகொள்ளும் என்கின்ற சந்தேகத்திலிருந்து நாம் விலகியிருக்க முடியாத வலிமைப்படுதலையே நம் முன் நிறுத்துகின்றது.

ஏனெனில் இனப்பிரச்சனை தீர்வு என்பதில் ஒற்றையாட்சி அதிகாரப்பரவலாக்களாக முன்வைக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தினூடாக தோற்றுவிக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை சரியாகப் பிரயோகிக்க அனுமதிக்காத நிலைதான் இருந்துவருகின்றது.குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களைக் குறிப்பிடலாம்.

உண்மையில் மாகாண சபை செல்நெறி தவறிச் செல்லுமாயின் அதனை கலைத்துவிடும் அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு இருக்கும் நிலையில், பொலிஸ், காணி அதிகாரங்களை கொடுத்து அதன்மூலம் என்ன பாதகங்கள் வந்துவிடும் என்பதை அனுபவரீதியாக பார்க்கக்கூட தயக்கம் காட்டும் அரசியல் சூழல்தான் இன்றுவரை நிலவுகின்றது.

இப்படியான சாத்தியப்பாடானவைகளைக் கூட பரீட்சார்த்தமாக செய்துபார்க்க அனுமதிக்காத அரசியல் நெருக்கடிக்குள் பழக்கப்பட்ட பெரும்பாலான இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு புதிய முறைமையை தேடுவதும் நடைமுறைப்படுத்துவதும் எவ்வளவு தூரம் வலுவானது என்பதும் ஒரு கேள்வியாகவே குறுக்கீடு செய்கின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வில் வடக்கு,கிழக்கு இணைப்பு என்பது தமிழ்த் தரப்பினர்களிடம் ஒரு முக்கியமான குறியீடாகவே இருந்துவருகிறது. இது சிங்களவர்களோடும்

முஸ்லிம்களோடும் சம்பந்தப்படுகின்ற ஒரு விடயமாகவும் அமைகின்றது. இவ்விரு மாகாணங்களின் இணைப்புக்கு சிங்களவர்களின் எதிர்ப்பு என்பது வெறும் இனத்துவேஷத்தின் அடிப்படையில் எழுவதாகும்.ஆனால் முஸ்லிம் களின் மாற்றுக்கருத்தென்பது அவர்களது பிரச்சனையோடு தொடர்புபட்டு, அதற்கான ஒரு தீர்வாக அமைய வேண்டும் என்பதை நோக்காகக் கொண்ட துமாகும்.

கடந்த 2011 இல் எடுக்கப்பட்ட அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான குடிசன மதிப்பீட்டு தொகையின்படி கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 36.68 வீதமாக வாழ்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணையும் போது முஸ்லிம்கள் 23.04 வீதமாக குறைவடைகின்றனர். இது முஸ்லிம்களிடையே பல துறைகளிலும் தாக்கம் செலுத்தி, பலத்த இழப்புக்களை சுமக்க வழிவிடுவனவாக அமையும்.

கிழக்கு மாகாணத்தில் தனித்து தமிழர்களின் ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்ற பலவீனத்தைப் பலப்படுத்துவதற்கும் முஸ்லிம்களுக்கென்று ஒரு தனியலகு அல்லது தனி மாகாணம் அமைந்துவிடக் கூடாது என்பதன் கவனக்குவிப்பின் அக்கறைக்கு உரமூட்டுவதற்காகவும் முன்னெடுக்கப்படும் ஒரு கோரிக்கையா கவும் வடக்குடன் கிழக்கு இணைய வேண்டும் என்ற முன்வைப்பை நோக்கவும் முடியும்.

ஆழ்ந்து நோக்க வேண்டிய இன்னொரு அம்சமும் வடக்கு, கிழக்கு இணைப்புக் கோரிக்கையினுள் மறைந்துகிடக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் பொருளாதார வளம் என்பது முழு இலங்கையின் மூன்றிலொருபகுதியாகும். இதனை சிங்கள மக்களோ, அவர்கள் சார்ந்த ஆட்சியாளர்களோ இழக்க விரும்பமாட்டார்கள்.

மறுபுறும் வடக்குடன் கிழக்கின் பொருளாதார வளத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் வடக்கு மாகாணம் குறைந்த வளங்களைக் கொண்டதாகும். வடக்கு மாகாணம் பாலைவனம் என்றால், கிழக்கு மாகாணம் சோலைவனமாகும். இதன்படி தனியான ஆட்சிக்கு பொருளாதார வளம் முக்கியமான ஓர் அம்சமாகும். இதனாலும் இக்கோரிக்கையின் பின்னால் விடாப்பிடியாக தமிழர்கள் இருப்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல.

இன்றிருக்கும் ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டுள்ள மாகாண சபைகளின் அரசியல் அதிகாரங்களில் ஏழு மாகாணங்களை சிங்கள மக்களின் அரசியலதி காரத்தை கொண்டதாக கட்டமைப்பதற்கு வாய்ப்புள்ளது.வடக்கு மாகாணம் தமிழர் தரப்பு அரசியல் அதிகாரத்தைக் கொண்டு இயங்கும் வல்லமையைக் கொண்டதாகும். ஆனால் கிழக்கு மாகாண சபை எந்தவொரு தனி சமூகத்தின் அரசியல் அதிகாரத்தைக் கொண்டும் செயற்பட முடியாத ஒருகோணத்தைக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை,அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் மொத்த சனத்தொகை 1551381 பேர் ஆகும்.இவற்றில் சிங்களவர் 359136 பேர்,இலங்கைத் தமிழர்கள் 609584 பேர்,

இந்தியத் தமிழர் 7711 பேர்,இலங்கைச் சோனகர் 569182 பேர்,மலாயர் 556 பேர், பறங்கியர் 4458 பேர், ஏனையோர் 754 பேர் ஆகும். இப்புள்ளிவிபரம் 2011 ஆம் ஆண்டைய குடிசன மதிப்பீட்டின்படியான தகவலாகும்.

இந்த மக்களின் இருப்பு, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தோடு கைகோர்க்கின்ற போதுதான் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்ளக்கூடியதாக இருப்பதை வலியுறுத்துகின்றது.இந்நிலையில் இலகுவாக தனித்து முஸ்லிம் அரசியல் அதிகாரத்தைக் கொண்ட ஒரு மாகாண ஆட்சியைப் பிடிப்பது சாத்தியமில்லை. இன்று கிழக்கு மாகாணத்தின் அரசியல் அதிகாரம் முஸ்லிம்களின் கைகளில் இருப்பதென்பதும் ஏனைய சமூகங்களின் தயவிலேயாகும்.

இந்தத் தொடர் நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளியாகவும் காணப்படவுள்ள இனப்பிரச்சனைத் தீர்வில் முஸ்லிம் சமூகத்திற்கான ஒரு காப்பீடாக அல்லது அரணாக முஸ்லிம் சமூகத்தினாலேயே தனித்து அரசியல் அதிகாரத்தை செலுத்தும் வகையிலான ஒரு சபையின் அவசியம் பற்றியும் நீண்டகாலமாக முஸ்லிம் சமூகத்தின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

ஒரு சமூகத்துக்கென்று பாரம்பரிய இருப்புப் பிரதேசம் அல்லது தாயகம் என உரிமை பாராட்டக்கூடிய நிலத்தினைக் கொண்டிருப்பது இன்றியமையாதவை. இந்நிலைதான் அந்த சமூகத்தின் இருப்பை அடையாளப்படுத்தி உரிமைகளையும் தனித்துவங்களையும் பேணிக்கொள்வதற்கும் பெறுமதிகளை உலகறியச் செய்வதற்கும் ஓர் ஊன்றுகோலாக அமையவல்லது.

இந்தியாவில் வாழும் சுமார் பத்துகோடி முஸ்லிம்கள் ஒரு தனி சக்தியாக விளங்க முடியாமைக்கு அங்குள்ள முஸ்லிம்கள் சிதறுண்டு வாழ்வதே காரணமாகும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.இலங்கையிலும் முஸ்லிம்களின் நிலை அவ்வாறு அமைந்துவிடக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படு கின்றன.இதனைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் அதிகாரப்பரவலாக்கத் தீர்வு நடைமுறைக்கு வருமாயின் இலங்கை முஸ்லிம்களுக்கான அடையாளத்தையும் அதிகாரங்களையும் கொண்ட ஒரு சபையினை கிழக்கு மாகாணத்தில்தான் உருவாக்க முடியும்.

இந்த பொறிமுறையை கட்சி பேதங்களுக்கு அப்பால் இன்றைய நாடாளு மன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் பிரதிநிதிகள் அனைவரும் கூட்டுமொத்தமாக உள்வாங்கி, முஸ்லிம்களுக்கென்று ஒரு சபை வரும்படியான எல்லைப் பிரிப்புக்களை திருத்தியமைத்து தோற்றுவிப்பதற்கான கட்டமைப்புத் தொடர்பில் கவனக்குவிப்பை செலுத்த வேண்டிய முக்கியமான ஒரு காலகட்டத்தில் இருக்கின்றோம் என்பதனை உணர்ந்து நமது பிரதிநிதிகளுக்கு உணர்த்து பவர்களாக மக்களாகிய நாம் மாற வேண்டும்.

*15.01.2016 - விடிவெள்ளி*

# கல்முனை கரையோர மாவட்டம் இலங்கையின் நிர்வாகத்திற்கு உட்பட்டதே!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இருபத்து ஆறாவது பேராளர் மாநாடு கடந்த 07-11-2015 இல் கண்டியில் நடைபெற்றது. இங்கு எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடைந்துகொள்ளவேண்டிய சில திட்டங்களை முன்மொழிந்திருந்தன. அதிலொன்றாக கல்முனை கரையோர மாவட்டம் உள்வாங்கப்பட்டிருந்தது நாம் அறிந்ததே.

கல்முனை கரையோர மாவட்டத்திட்டத்தினை பெறக்கூடிய உரிய தருணத்தில் அடக்கியும், அடைவதற்கு தருணமில்லாத நேரத்தில் உரத்துப் பேசும் இயங்கு தளத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கடைபிடித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டு அக்கட்சியின் மீது நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்நிலையை மீண்டும் ஒரு தடவை இம்மாவட்ட கோரிக்கை வலியுறுத்தி இருக்கின்றது.

கல்முனை கரையோர மாவட்ட கோரிக்கையின் பின்னணியையும் அது கடந்து வந்த பாதையையும் அலசுவதுடன், இதனை ஈடேற்றிக்கொள்ளும் முயற்சியில் காணப்படும்தடைகளை அகற்றி வெற்றி கொள்வதற்கான வழி என்ன ? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய இலக்காகும்.

கல்முனை கரையோர மாவட்ட எதிர்பார்ப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முதல் முதலாக முன்னிறுத்திய ஒன்றல்ல. அது இக்கட்சி தோற்றம் பெறுவதற்கு முன்னர்என்பதே அதன் வரலாறு. 1970 களுக்கும் 1980 களுக்குமிடையில் கேட்கப்பட்ட ஓர் அம்சமாகும். அதனை உறுதிபடுத்தும் ஆதாரச்சான்றுகள் பல இருந்தாலும் அவற்றுக்கு பின்வரும்இரு செய்திகளை இங்கு பார்க்கலாம்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தீர்மானம் ஒன்றின் படி "நில அமைப்பு மற்றும் ஏனைய காரணங்கள் குறித்து கல்முனைதான் அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இடமாகஇருக்கவேண்டும்" என்ற முடிவுக்கு வந்து அது 12-06-1977 யில் ஐக்கிய தேசியக் கட்சி தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

**(நன்றி – முஸ்லிம் டைம்ஸ் 1980 செப்டம்பர் முதலாம்வெளியீடு )**

முஸ்லிம்கள் மிகவும் பெரும்பான்மையாக வாழும் மாவட்டம் அம்பாறை. இதனை நாம் முஸ்லிம் மாவட்டம் என்றே அழைக்க வேண்டும். எனவே, அம்பாறை மாவட்டத்தைஅரசு எவ்வாறு நோக்குகின்றதோ அதனை அடிப்படையாக வைத்தே இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரையும் கவனிக்கும் பாங்கினை நாம் புரிந்து கொள்ளலாம்.

அம்பாறை மாவட்டத்தின் பெயரை அங்குள்ள பெரும்பான்மையினராக வதிகின்ற முஸ்லிம்களின் அபிலாசைகளையும் உணர்வுகளையும் மதித்து கல்முனை மாவட்டம் எனபெயரிட வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் லீக் பல ஆண்டுகளாக குரல் எழுப்பி வந்துள்ளது" என எஸ்.எல்.எம். ஷாபி மரிக்கார் தெரிவித்தார். (நன்றி – உதயம் 04 -17 டிசம்பர் 1981)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலமான 1978 இல் மாவட்டங்களை பரவலாக்கும் மொறகொட கமிஷன் அறிக்கையில் கூட கல்முனை(கரையோர) மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம் என இரண்டு மாவட்டங்கள் விதந்துரைக்கப்பட்டிருந்தன.

"எதிர்வரும் ஜூலை மாதம் முதல் கல்முனை ஒரு தனி மாவட்டமாக உதயமாகும். உத்தேச கல்முனை மாவட்டத்துக்கு மேலதிக அரசாங்க அதிபராக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப்.மஹ்பூல் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (நன்றி – தினகரன் 03-05-1985)

கடந்த 1985களில் கல்முனை கரையோர மாவட்டத்திட்டம் மிகுந்த கூர்மை அடைந்து நிறைவேறும் முனைப்புக்கு சாதக நிலை காணப்பட்டது. என்றாலும் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் அதிகரித்த செல்வாக்கினை கொண்டுள்ள அமைச்சர்களான கே.டபிள்யு. தேவநாயகம், பீ தயாரத்ன ஆகியோரின் கடும் எதிர்ப்பினால் இக்கோரிக்கை பின்னடைவைப்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை சார்ந்த முஸ்லிம் அமைச்சர்களான ஏ.ஸீ.எஸ். ஹமீத் முயற்சித்தும், எம்.எச். முஹம்மத் உறுதியளித்தும் கல்முனை கரையோர மாவட்ட முனைப்பு கைகூடாத பெறுபேற்றைத்தான் அடைந்தது. பொதுவாக இம் மாவட்ட கோரிக்கையின் ஆரம்பகர்த்தாக்கள் என்றவகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்தசெயற்பாட்டாளர்கள் இல்லை என்பதை ஆணித் தரமாக இவை புலப்படுத்துகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இடமாக கல்முனை மாற்றப்படல் வேண்டும். கல்முனை கரையோர மாவட்டம் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்கின்ற கோரிக் கைகள் எழுந்ததன்பின்னணிகள் என்று பார்ப்பின் பின்வரும் காரணங்களை அவதானிக்க முடியும்.

அம்பாறை கச்சேரியில் தமிழ் மொழி பேசுவோர்கள் எதிர்கொள்ளும் மொழிப்பிரச்சினை, சமூக ரீதியான புறக்கணிப்பு, அதிகாரிகளின் அலைக்கழிக்கும்

மனோபாவம் போன்றநிலைதான் இக்கோரிக்கையை தீவிரப்படுத்தியவற்றுள் பிரதான இடத்தினை வகிக்கின்றது. தமிழ் பேசுவோர்களிலிருந்து அம்பாறை கச்சேரிக்கு – மாவட்டச் செயலகத்துக்கு மேலதிகஅரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட அவர்களும் அம்பாறை கச்சேரியில் கடமையாற்றுவதற்கு முடியாத நெருக்கடிகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உட்பட்டதோடு அவர்களுக்கான இடம், தளபாட வசதிகள் சரியாக ஒழுங்குபடுத்தப்படாத நிலையும் உருவாக்கப்பட்டிருந்த வரலாற்றையும் கொண்டிருக்கிறது.

## அம்பாறை மாவட்ட குடிசனத் தொகை
## *1963, 1971, 1981, 2011*

| சமூகங்கள் | *1963* | *1971* | *1981* | *2011* |
|---|---|---|---|---|
| முஸ்லிம்கள் | 98 270 | 12 6033 | 16 1481 | 28 2660 |
| வீதம் | 46.3 | 46.2 | 41.5 | 43.61 |
| சிங்களவர்கள் | 62 160 | 81 762 | 14 6371 | 25 1018 |
| வீதம் | 29.3 | 30.7 | 37.7 | 38.73 |
| தமிழர்கள் | 50 480 | 69 971 | 79 725 | 11 2915 |
| வீதம் | 23.8 | 23.8 | 20.5 | 17.42 |

முஸ்லிம்களை ஓரளவு பெரும்பான்மையாக கொண்டிருந்த அம்பாறையை முழு சிங்களமயமாக மாற்றுவதற்கு பௌத்த - சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திகள் பல முயற்சிகளைமேற்கொண்டே வருகின்றன. அதன் முன்னெடுப்பாக பிற மாவட்டங்களில் வாழும் சிங்களவர்களை குடியேற்றுதல், பிரதேச இணைப்புக்களை மேற்கொள்ளுதல் போன்றநடவடிக்கைகள் நடந்தேறியுள்ளன. இதனை மேற்காணும் அட்டவணையை அவதானித்தால் சிங்கள மக்களின் அதிகரிப்பு இம் மாவட்டத்தில் இயற்கையானது அல்ல என்பதனை மிக எளிதில் புரிய முடியும்.

கல்முனை கரையோர மாவட்ட கோரிக்கை சுமார் முப்பத்து ஏழு வருடங்களுக்கு முந்தியது ஆகும். அம்பாறை மாவட்டத்தின் மொத்த குடிசனத் தொகையில் தமிழ் பேசும்மக்களின் தொகை சிங்களவர்களை பார்க்கிலும் அதிகமானது. இதனையும் மேற்படி அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

"இலங்கையில் இதுவரை நடந்த மாவட்ட உருவாக்கம், எல்லை மாற்றம், ஒன்றிணைப்பு என்பன சிங்கள மயமாக்குதலுக்காக செய்யப்பட்டதன்றி, நிர்வாக வசதிகளைஇலகுபடுத்துவதற்காகச் செய்யப்படவில்லை" என்பதை நாம் ஊன்றி நோக்கின் தெளிவடைய முடியும். முஸ்லிம்களின் மேலாண்மையை நசுக்கு வதிலும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டினை சிதைப்பதிலும் இதன் பாத்திரம் – பங்கு தனியானது.

கல்முனை கரையோர மாவட்ட உருவாக்கத்தில் எந்த கட்சிகளுக்கு அக்கறை யின்றி காணப்பட்டாலும் அது ஒரு பொருட்டாக பார்க்க தேவையில்லை. ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸுக்கு அப்படி இருக்க முடியாது. ஏனெனில் பின்வரும் மூன்று காரணங்களினால் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

1. அம்பாறையில் கல்முனையை தலைநகராகக் கொண்டு கரையோர மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும். என்ற பிரேரணையை கல்முனை பிரதேச சபை (1994இல்) ஏகமானதாக நிறைவேற்றியது. இப்பிரதேச சபையின் அரசியல் அதிகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடையதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

2. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த ஸ்தாபகத் தலைவர் எம.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் பெரும்பாலும் வெளிப்படையாக கல்முனை கரையோர மாவட்டம் பற்றிப்பிரசாரங்களை முன்னெடுக்கவில்லை. என்றாலும் கல்முனை கரையோர நிர்வாக, தேர்தல் மாவட்டமாக பெறுவதில் 1988களில் பிற்பகுதியில் இருந்து கரிசனைகொண்டவர்களாக இருந்தார்கள். இதனை தனக்கு நெருக்கமானவர்களுடன் கலைந்துரையாடும்போது வெளிப்படுத் துபவர்களாகவும் இருந்தார்கள். இதற்கு இன்றும் பலர் சாட்சியாக இருப் பார்கள் என நாம் நம்பலாம்.

3. கடந்த 1988 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஆர். பிரேமதாசாவுடன் மறைந்த தலைவர் அஷ்ரஃப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது தெரிந்ததே. அதில் கல்முனை கரையோர மாவட்டம் எனும் அம்சமும் முன்வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமகவே ஆர். பிரேமதாசாவை ஆதரித்தது. இதுஒரு எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லா விட்டாலும்கூட அந்த நேரத்தில் பிரபல்யமான ஒன்றாகும்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் தனது அரசியல் அதிகார காலத்துள் கல்முனை கரையோர மாவட்டத்திட்டத்தை முழுமூச்சாக முன்னெடுக்காமை அவரது பலவீனமல்ல. ஏனெனில் ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கி அதனை நமது அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்வதாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட நாடாளுமன்றத்தினால்தான் சாத்தியப்படுத்த முடியும்.

கடந்த 1833 இல் இருந்து நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க நிர்வாக மாவட்டச் சட்டம் தோற்றுவிக்கப்பட்டு முதலில் 20 நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் ஒரு அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டது. இந்த இருபது மாவட்டங்களுக்குப் புறம்பாக 1959இல் மொனராகாலை, 1961 இல் அம்பாறை, 1976 இல் முல்லைத் தீவு, 1978 இல் கம்பஹா ஆகிய நான்கு நிர்வாக மாவட்டங்களும் அமுலுக்கு வந்தன.

நமது இன்றைய நடைமுறை அரசியல் அமைப்பு (1978) அத்தியாயம் ஒன்றில் ஐந்தாவது உறுப்புரிமை 'குடியரசின் ஆள்புலம்' என்ற சிறிய தலைப்பில் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

'இலங்கைக் குடியரசின் ஆள்புலமானது இருபத்துநான்கு நிர்வாக மாவட்டங்களையும் (அவற்றின் பெயர்கள் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன) அதன் ஆள்புல நீர்பரப்புகளையும் கொண்டிருக்கும்' என்கின்றது.

முதலாம் அட்டவணையில் இருபத்துநான்கு நிர்வாக மாவட்டங்களும் பின்வரும் எண் வரிசையில் தரப்பட்டுள்ளது. 1.கொழும்பு 2.கம்பஹா 3.களுத்துறை 4.கண்டி 5.மாத்தளை 6.நுவரெலியா 7.காலி 8.மாத்தறை 9.ஹம்பாந்தோட்டை 10.யாழ்ப்பாணம் 11.மன்னார் 12.வவுனியா 13.முல்லைத்தீவு 14.மட்டக்களப்பு 15.அம்பாறை 16. திருகோணமலை 17.குருநாகல் 18. புத்தளம் 19. அனுராதபுரம் 20. பொலனறுவை 21.பதுளை 22.மொனராகாலை 23. இரத்தினபுரி 24.கேகாலை.

ஆகவே நமது அரசியலமைப்பின் நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கையையும் அதன் பெயர்களையும் உட்படுத்துவதும் குறிப்பிடுவதும் யாப்பின் ஓர் அங்கமாக இருப்பதை இது நிரூபிக்கின்றது. இதனை மேலும் அத்தாட்சிப்படுத்தும் வகையில் 1984 இல் உருவான கிளிநொச்சி மாவட்டம் இலங்கை அரசியலமைப்பின் ஏழாவது திருத்தமாக அமையப் பெற்றிருப்பதைக் காணலாம்.

அதாவது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் அத்தியாயம் ஒன்றில் ஐந்தாம் உறுப்புரைக்கு 1983.10.04 ஆந் திகதி ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஏழாவது திருத்தத்தின்படி பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) இருபத்துநான்கு எனும் சொற்களுக்குப் பதிலாக இருபத்தைந்து எனும் சொற்களை இடுவதன் மூலம்.அத்துடன் (ஆ) ஆள்புல நீர் பரப்புக்களையும் கொண்டிருக்கும் எனும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுக :- ஆள்புல நீர்பரப்புக்களையும் கொண்டிருக்கும் ஆயின் பாராளுமன்றம் தீர்மானத்தினால் தீர்மானிக்க கூடியவாறாக வெவ்வேறான நிர்வாக மாவட்டங்களை அமைக்கும் வகையில் அத்தகைய நிர்வாக மாவட்டங்கள் உட்பிரிவாக பிரிக்கப்படலாம் அல்லது ஒன்றிணைக்கப்படலாம்.

அரசியலமைப்பின் முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. (அ) அவ்வட்டவணையில் 10-யாழ்ப்பாணம் என்னும் விடயத்தை உடனடுத்து 11.கிளிநொச்சி என்னும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலம்: அத்துடன் (ஆ) அவ்வட்டவணையில் 1-24 என்னும் விடயங்களை அவ்வட்டணையின் முறையே 1-25என்னும் விடயங்களாக மீள் இலக்கமிடுவதன் மூலம்.

ஆகவே நாடாளுமன்றத்தின் தீர்மானத்தினால் தீர்மானிப்பதன் ஊடாக ஒரு புதிய நிர்வாக மாவட்டத்தை தோற்றுவிக்க முடியும் என்பதை இது எடுத்துக் காட்டுவதுடன் இருபத்தைந்து நிர்வாக மாவட்டங்களுக்குப் புறம்பாக உருவாக் கப்படும் இன்னுமொரு நிர்வாக மாவட்டத்தின் தொகையையும், பெயரையும் அரசியலமைப்புக்கு கொண்டுவரும் புதிய திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்தி அத்தாட்சிப்படுத்திக் கொள்ளும் தேவை இருப்பதையும் நமக்கு இது சுட்டிக்காட்டுகின்றது.

நமது நடைமுறை அரசியலமைப்புக்கு திருத்தம் கொண்டுவருவதற்கு இரண்டுவிதமான முறைமைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இது தொடர்பாக அரசியலமைப்பின் பனிரெண்டாம் அத்தியாயத்தின் 82ஆம்,83ஆம் உறுப்புரைகள் பேசுகின்றது. அவைகள் பின்வருமாறு காணப்படுகின்றது.

*82: (5) அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம், அதற்கு சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை, உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்கு குறையாததாக இருப்பதுடன்...*

*82: (7) இந்த அத்தியாயத்தில் திருத்தம் என்பது நீக்கம்,மாற்றம் அத்துடன் சேர்ப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்.*

இதன்படி புதிய கல்முனை-கரையோர மாவட்டமாகினும் மஹியங்கனை மாவட்டமாகினும் அவற்றை உருவாக்கி அரசியலமைப்பில் சேர்ப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும் என்பதை மேற்படி உறுப்புரைகள் மிகவும் தெளிவாக முன்வைக்கின்றது.

ஆயின் புதிய நிர்வாக மாவட்டங்களை பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் ஊடாக கொண்டுவருவதற்கு மூன்றில் இரண்டு பலமுள்ள அரசாங்கத்தினால்தான் சாத்தியமாக்கக் கூடிய ஒரு செயற்பாடாகவும் இது அமைந்துள்ளது. மாறாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் தத்துணிவின் அடிப்படையில் புதிய நிர்வாக மாவட்டம் எதனையும் கொண்டுவர முடியாது என்பது திட்ட வட்டமானது.

நமது அரசியலமைப்பில் காணப்படும் 1ஆம், 2ஆம், 3ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம்உறுப்புரைகளும் 30ஆம் உறுப்புரையின் இரண்டாம் பிரிவும் 62ஆம் உறுப்புரையின் 2ஆம் பிரிவுகளினதும் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பலத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு – மக்கள் தீர்ப்பினாலும் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதை அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையின் அ,ஆ பிரிவுகள் இன்னும் உறுதிபடத் தெரிவிக்கின்றது.

இதுவரை நடைமுறை அரசியலமைப்புக்கு 19 திருத்தங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. இவற்றில் 16 வரையான திருத்தங்கள் 1977 நவம்பர் 20ஆம் திகதி தொடக்கம் 1988 டிசம்பர் 17ஆம் திகதி வரை அத்தாட்சிப்படுத்தப்பட்டவை களாகும். இக்காலத்துக்குரிய பாராளுமன்றத்தின் அரசாங்கத்தின் பலம் என்பது ஆறில் ஐந்தாகும். இது 168 மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 140 ஆசனங்களை கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியாகும். இதில் மூன்றில் இரண்டு பலம் உள்ளடங்கி இருப்பது வெளிப்படையானது.

17வது அரசியலமைப்புத் திருத்தம் 2001.10.03ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டதாகும். இக்காலப் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பாராளு மன்றப் பலம் என்பது 114 ஆகும். இது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாதது. இதனால் 17வது திருத்தம் நாடாளுமன்றத்தில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது. இதற்குள் மூன்றில் இரண்டு பலம் உள்ளடங்கிவிடுகிறது என்பதும் தெளிவாகிறது. இச்சட்டம் பல்வேறு காரணிகளினால் நடைமுறைக்கு வராது இருந்ததும் ஆகும். பின்னர் இது 18வது திருத்தத்தின் ஊடாக முற்றாக நீக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

18வது அரசியலமைப்புத்திருத்தம் 2010.09.09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது. இப்பாராளுமன்றத்திற்குரிய அரசாங்கத்திடம் 144 ஆசனங்களே இருந்ததன. இதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப் பினர்கள் 8 பேர் அரசாங்கத்துடன் இணைத்து எடுக்கப்பட்டுத்தான் 18வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

19 வது திருத்தம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது. இக்காலத்தின் ஆட்சி நூறு நாள் வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் பேணப்பட்ட அரசாங்க காலம் என்பதினால் நாடாளுமன்றத்தின் சுமார் 223 உறுப்பினர்களால் ஆதரித்து நிறைவேற்றப்பட்டதாகும்.

ஆகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இன்றி நமது இன்றைய அரசியலமைப்பில் எந்தத் திருத்தத்தையும் கொண்டுவர முடியாது என்பதை இவைகள் இன்னும் உறுதியாக வலுப்படுத்துகின்றது.

இதன்படி மூன்றில் இரண்டு பலம் இல்லாத ஓர் அரசாங்கத்தினால் புதிதாக எந்த நிர்வாக மாவட்டங்களையும் உருவாக்கவே முடியாது.ஏனெனில் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் நிர்வாக மாவட்டத்தின் எண்ணிக்கை பெயர் என்பவைகள் அரசியல் அமைப்பில்

சேர்க்கப்படவேண்டிய தேவையுடைய விடயமாகும். இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினாலேயே நிறைவேற்ற முடியும்.

எனவே, மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர∴பின் பாராளுமன்ற அதிகார காலமான 1989-2000 வரையான காலப்பகுதியில் மூன்றில் இரண்டு எனும் பலமான நிலை காணப்படாமையினால் இது குறித்து தொடர்ந்தும் அடக்கி வாசிக்கும் பொறிமுறைக்குள்ளானார். ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைவரான அமைச்சர் ரஊப் ஹக்கீமிற்கு மூன்று சந்தர்ப்பங்கள்வாய்த்திருந்தன.

1. கடந்த 2010இல் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து கொண்டபோது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட நாடாளுமன்றமாக மாறியது. தமது ஆதரவினை அரசாங்கத்திற்கு வழங்கும் அந்த சந்தர்ப்பத்தில் கல்முனை கரையோர மாவட்டத்தை நிபந்தனையாக முன்வைத்துஇதனை பெற்றிருக்க முடியும்.

2. நல்லாட்சியை முன்னிறுத்தி 2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுடனும் அவரது வெற்றிக்கானபிரதான பங்காற்றிய ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடனும் கல்முனை கரையோர மாவட்டத்தை நிபந்தனையாகக் கொண்டு தமது ஆதரவைவெளிப்படுத்தியிருக்கலாம். அவ்வாறு நிகழ்ந்திருப்பின் 100 நாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்த காலப்பகுதியில் காணப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தின் போது அடைந்திருக்க முடியும்.

3. இதன் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்காக கூட்டிணைந்தபோதாவது கல்முனை கரையோர மாவட்டம் குறித்து நிபந்தனையை முன்வைத் திருப்பின் இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்பத்தில் இக்கோரிக்கை வெற்றி கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்க முடியும். இன்றைய தலைவர் ரஊப் ஹக்கீம் இவ்வாறான சந்தர்பங்களை தவறவிட்டிருப்பது அரவது பலவீனத்தின் பக்கத்தையே காட்டுகின்றது.

அமைச்சர் ரஊப் ஹக்கீமின் தலைமைத்துவ காலத்தை எடுத்துக்கொண்டால், ஒரு கட்சிக்கு வழங்கிய ஆதரவில் இருந்து வெளியேறுவதற்கு இக்கோரிக் கையை உபயோகித்த பொறிமுறையே காணக்கூடியதாக உள்ளது. இது சமூக நலன் சார்ந்த இயங்கு தளத்தைவிட்டு தடம் புரளும் இன்னொரு பக்கத்தை பதிவு செய்திருக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து கல்முனை கரையோர மாவட்ட உருவாக்கம் நீர் பிரச்சினையை ஒருபோதும் ஏற்படுத்தாது. இலங்கையின் அரசியல் அமைப்புஇதற்கு இடம் தராது. நடைமுறையில் இவ்வாறான நிகழ்வுகள் சில சந்தர்ப்பங்களில் நடந்திருக்கிறது. எனில் அது இணைந்திருக்கும்போது கூட

ஏற்பட்ட ஒன்றாகும்பிரிந்து நின்று இத்தகைய தடைகளை வலிமையான சட்டத்து ணையோடு தட்டிக்கேட்கலாம். அதுமட்டுமன்றி அம்பாறை மாவட்டத்துக்கு நீர் வழங்கும் சமுத்திரம் ஊவா மாகாணத்தின் எல்லையில் அமைந்திருக்கிறது.

ஒரு மாவட்டத்தில் வாழும் மக்களுடைய அசையாத சொத்துக்கள் இன்னொரு மாவட்டத்தில் வைத்திருக்க கூடாதென்ற சட்டம் நமது நாட்டில் இல்லை. உத்தேசகல்முனை கரையோர மாவட்டம் ஏற்படுத்தபட்டால் இன்றைய அம்பாறை தேர்தல் தொகுதியே அம்பாறை மாவட்டமாக மாறும். அதற்குள் நமது காணி, நிலம்போன்றவற்றின் சில பகுதிகள் அடங்குவது ஒரு பிரச்சினையான விடயம் அல்ல. என்றாலும் இணைந்திருக்கும்போதே நமது சில சொத்துக்கள் புனித பூமி என்ற அடிப்படையில் கபளீகரம் செய்யப் பட்டதினால் முஸ்லிம்கள் இழப்புக்களை சந்தித்திருக்கின்றனர்.

ஆகவே நீர், காணி, நிலம் மின்சாரம் போன்றவற்றில் பிணக்குகள் தோன்று மென்ற பயப்பீதியை ஏற்படுத்தி அர்த்தமுள்ளதும் மிக அவசியமானதுமான ஒருகோரிக்கையை அர்த்தமற்றதாக காட்ட எடுக்கும் நடவடிக்கை மூலம் இதனை மறுக்கும் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறான உள்நோக்கங்கள் திரட்சி பெற்று குவிந்துகாணப்படுவது நமக்கு மறைவன்று.

தனியான கல்முனை கரையோர மாவட்ட தேவை என்பது இங்குள்ள முஸ்லிம் களுக்கு மாத்திரம் பிரயோசனப்படக்கூடியது என்ற மனோபாவத்திலிருந்து விடுபட்டு, இது இலங்கை முஸ்லிம்களுக்கு பொதுவான எதிர்காலத்தை உறுதி செய்யும் என்ற உணர்தலில்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

கட்சி பேதங்களுக்குஅப்பாலும் பிரதேச வேறுபாட்டுக்கு வெளியிலும் நமது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது விடயத்தில் ஒருமித்து கேட்டுப் பெறவேண்டிய ஓர் அம்சம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

*04.12.2015 - விடிவெள்ளி*

# வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் ஓர் இனச்சுத்திகரிப்பே!

வடக்கு மாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு இன்று இருபத்து ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டதை நினைவுகூரும் வகையிலும் அம்மக்களின் எதிர்காலம் குறித்தும் எவ்வாறான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பில் சில நிகழ்வுகளும் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டன.

அந்த வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அவர் அவ்விழாவில் பின்வருமாறு தெரிவித்த கருத்து பலத்த பிரதிவாதங்களையும் எதிர்ப்பலைகளையும் உருவாக்கியிருந்தது.

'வடக்கு மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் ஓர் இனச் சுத்திகரிப்பு செயற் பாடாகும். இதற்காக ஒவ்வொரு தமிழனும் வெட்கி தலைகுனிய வேண்டும்'

சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் வெளிப்படையாகத் தெரிவித்த இனச்சுத்திகரிப்பு என்ற சொல்லாடல் குறித்து பல்வேறு விமர்சனங்களை தமிழ் மக்களின் அரசியல் களத்திலும் தமிழ் ஊடகங்களின் பத்தி எழுத்தாளர்களிடமும் குறிப்பாக தமிழ் சமூகம் சார்ந்த ஊடகவியலாளர்கள் மத்தியிலும் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தியதுடன் பழையதைக் கிளறி தேவையில்லாத பிரச்சனைகளை முன்னகர்த்தக் கூடாது என்பதையே அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

வடபுலத்து முஸ்லிம்கள் தமது தாயகத்திலிருந்து பலவந்தமாக வெளி யேற்றப்பட்டது குறித்து இது ஓர் இனச்சுத்திகரிப்பு செயற்பாடு என பிரகடனம் செய்யவுமில்லை அவ்வாறு கோரவுமில்லை என்பது உண்மைதான். அதற்காக வேண்டி இனச்சுத்திகரிப்பு முனைப்புக் கொண்ட நடவடிக்கையாக இதனைப் பார்க்கக் கூடாது என்று சொல்வது முறையல்ல.

இதனால்தான் சட்டத்தரணி சுமந்திரம் வடபுலத்து முஸ்லிம்களின் வெளியேற்றம் ஓர் இனச்சுத்திகரிப்பு எனும் அம்சத்துக்கான வரைவிலக்கணத்துக்குள் அடங்கக் கூடியது என்பதை மீண்டும் ஒரு தடவை வெளிப்படையாக சுட்டிக்காட்டத் தயங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடபுலத்து முஸ்லிம்களின் வெளியேற்றத்தை நினைவு கூர்ந்ததை கிளறுதல் என வர்ணிக்கத் தொடங்கியிருப்பது சரியல்ல. ஏனெனில் தமிழ் மக்கள் வருடாந்தம் மாவீரர் தின நினைவுகூர்தல் மற்றும் இலங்கை அரசாங்க படையினராலும், ஆதிக்க பௌத்த சிங்கள பேரினவாதிகளினாலும் மேற் கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலை பற்றி நினைவுபடுத்தி பேசிவருவது என்பது வன்மத்தை வளர்ப்பதற்கான கிளறுதல் அல்லவே.

இதனைப் போன்ற ஒன்றாகவே வடபுலத்து முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் பற்றி பேசுவதை நோக்க வேண்டும்.அதுவே நேர்மையான பார்வையாகவும் இருக்கும்.அதுமட்டுமன்றி அவர்களின் மீள்குடியேற்றம் சரியாக அமுலாகாத நிலை காணப்படுவதனால் இதனை உரத்துப் பேசவேண்டிய கட்டாயத்தையும் முஸ்லிம் அரசியல் சூழல் கொண்டிருப்பதும் மறைவன்று.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் இனச்சுத்திகரிப்பு எனும் சொல் கையாளுதலுக்காக கிளர்ந்தெழுந்தவர்கள் அண்மையில் இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சமந்தா பவர் வடபுலத்து முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்து தெரிவித்திருந்த இனச்சுத்திகரிப்பு என்ற கூற்றை மறுக்க முனையாமை இந்த சுட்டுதலுக்கு வடபுலத்து முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் ஏற்புடையதுதான் என்பதை தமது மௌனத்தின் ஊடான சம்மதமாக வெளிப்படுத்தியிருப்பதாக கொள்ள முடியும்.

எது எவ்வாறு இருந்தாலும் கடந்த 1990களில் வடபுலத்து முஸ்லிம்களை அவர்களின் பூர்வீக தாயகத்திலிருந்து முற்றாக தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமாக வெளியேற்றினர் என்கின்ற வடுவிலிருந்து அவர்களை விடுவிக்க முடியாது. அதேநேரம் இந்த செயற்பாட்டினை நியாயப்படுத்தும் வகையில் அவ்வியக்கம் வலுவிலிருந்த காலத்துள் ஒரு நியாயமான காரணத்தைக் கூட முன்வைக்க முடியாத கையறு நிலையில்தான் அது இருந்தது என்பதே நிஜம்.

வடபுலத்து முஸ்லிம்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நேர்மையின்றி வெளியேற்றியமைக்கு உத்தியோகபூர்வமாக எந்த காரணங்களையும் அவ்வமைப்பினர்களால் முன்னிறுத்த முடியவில்லை.இதுவே பலவந்தமாக முஸ்லிம்களை விரட்டியமைக்கு வலுவான காரணங்கள் அவர்களிடம் இல்லை என்பதை வெளிக்கொணர போதுமான சான்றாகும்.என்றாலும் இவ்வமைப்பின் சார்புநிலைக் கருத்தாளர்கள் பின்வரும் நான்கு காரணங்களை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தனர்.

01) தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தையும் அதன் போராளிகளையும் இலங்கை அரச படைகளிடம் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் வடபுலத்து முஸ்லிம்கள் ஈடுபட்டனர்.இதனால்தான் அங்கிருந்து அவர்கள் முழுமையாக விரட்டியடிக்கப்பட்டனர்.

02) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உருவாகிய பின்னர்தான் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவைக் கொண்டுவந்ததென்றும் மற்றும் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததன் விளைவுக்குப் பதிலாகவே முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர்.

03) கிழக்கு மாகாணத்திலிருந்து வடபுலத்துக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள், கிழக்கில் நடைபெற்ற தமிழ்,முஸ்லிம் இனக்கலவரங்களுக்காக வடபுலத்து முஸ்லிம்களை தாக்குவதற்கு தயாரானதை தவிர்ப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும்தான் இங்கிருந்த முஸ்லிம்களை இடம்பெயரச் செய்யப்பட்டனர்.

04) தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமிடையில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றன.இதற்குள் முஸ்லிம்கள் அகப்பட்டு வீணாக இம்சைப்பட நேரிடும். இந்த நிலையிலிருந்து முஸ்லிம்களை விடுவிக்கும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

இவ்வாறு சொல்லப்பட்ட எந்தக் காரணங்களை எடுத்துவைத்து ஆராய்ந்தாலும் அவைகள் அறிவுபூர்வமானதாகவோ நியாயபூர்வமானதாகவோ அமையவில்லை. ஏனெனில் இவை ஒவ்வொன்றுக்கும் எழுகின்ற எதிர்த்தாடல் கேள்விகளும் விளக்கங்களும் நீட்டிக்கொண்டே இருக்கின்றன.

01.

தமிழீழ விடுதலை புலிகளின் போராட்டத்தை வடபுலத்து முஸ்லிம்கள் காட்டிக் கொடுத்தனர் என்றால்,அது அங்கு வாழ்ந்த மொத்த முஸ்லிம்களின் முழுச் செயற்பாடாக இருந்திருக்கமாட்டாது என்பதுமட்டும் மிகவும் உறுதியானது. அவ்வாறான காட்டிக்கொடுத்தல் நடைபெறவில்லை என்பதுதான் உறுதியான சங்கதி.

அவ்வாறு இருந்ததாக ஒரு வாதத்துக்கு ஏற்றுக்கொண்டால் கூட, இவ்வாறான ஈனத்தனத்தில் ஈடுபட்டதாக நம்பப்படுபவர்கள் குறிப்பாக் கப்பட்டு அவர்கள் மீதான தண்டனை விதிக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக மொத்த முஸ்லிம் மக்கள் மீதும் எதிர் நடவடிக்கை மேற்கொண்டது என்பது ஒரு நாகரிகமான செயற்பாடாகவோ, நீதியான நெறியாகவோ நோக்க முடியவில்லை.

உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பலம் கொண்டதும் புத்திகூர்மையானதும் என்ற நிலையில் இருந்தவை. இதனூடாக தவறான எத்தனங்களில் கைகோர்த்தவர்களை அடையாளம் கண்டு அவர்களை மட்டும் தண்டித்து அல்லது வெளியேற்றி ஆரம்ப எச்சரிக்கையை முன்வைத் திருக்க வேண்டும்.

இவ்வாறு எச்சரித்தும் அல்லது தண்டித்தும் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கை நிறுத்தப்படாது தொடர்ந்த வண்ணம் இருந்திருந்தால் வடபுலத்து முஸ்லிம்களிடம் அதனை நேரடியாகத் தெரிவித்து அவர்களைத் தற்காலிகமாகவும் அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையிலும் இடம்பெயர்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவுறுத்தி வழிகாட்டியிருக்க வேண்டும்.

இப்படி நடைபெறாமல் கூட்டுமொத்தமாக முஸ்லிம்களின் பூர்வீக தாயகத்தி லிருந்து விரட்டியடிக்கப்பட்டதனால் இந்த காட்டிக்கொடுப்புக்காகவே இது நடைபெற்றது என்று ஏற்றுக்கொள்வதில் தயக்கங்கள் நிறையவே உள்ளன.

## 02.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம்தான் வடபுலத்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்படுவதற்கு வழிசமைத்தது என்றால்,1990களுக்கு பின்னர் 1994,2000,2001,2004,2010 ஆகிய காலகட்டங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தனியான முஸ்லிம் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வடபுலத்து நாடாளுமன்ற முஸ்லிம் உறுப்பினர் தெரிவாகி வந்திருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி 2010,2015களில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பிலும் வடபுலத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தக்கவைக்கப்பட்டுள்ளது.பொதுவாக முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி என்கின்ற அம்சம் இழக்கப்படாத வகையில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வடபுலத்து முஸ்லிம் மக்களினால் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வந்திருக் கின்றது என்பதையே இவை சுட்டிக்காட்டுகின்றது.

ஆகவே, முஸ்லிம் தனிக்கட்சிகளின் தோற்றம்தான் வடபுலத்து முஸ்லிம்களை கூட்டுமொத்தமாக வெளியேற்றியது என்றால்,தனியான முஸ்லிம் கட்சிகள் என்ற கோட்பாட்டை அம்மக்கள் ஆதரிப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறாமையே இக்கருத்தில் எவ்விதமான உண்மைகளும் இல்லை என்பதை நமக்கு நிரூபிக்கக் கூடியாதாக இருக்கின்றது.

## 03.

கிழக்கு மாகாணத்திலிருந்து வடபுலத்துக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் தாக்குதல்களிலிருந்து வடபுலத்து முஸ்லிம்களை விடுவிப்பதற்காகவே இந்த வெளியேற்றம் நிகழ்ந்தது என்று கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை.

ஏனெனில் வே.பிரபாகரன் தலைமையில் ஒரு கட்டுக்கோப்பான கட்டமைப்பாக வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளை தன்னால் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியவில்லை என்ற வாதம் அவரின் ஆளுமையை கேள்விக்குட் படுத்தும் ஒன்றாகும்.

தமிழ் மக்களிலிருந்து ஆயுதம் தரித்த பல்வேறு அமைப்புக்கள் உருவாகி இருந்த அக்காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும்தான் தமிழ் மக்கள் நலன்சார்ந்த போராட்டத்தை சரியான வழியில் முன்னகர்த்துகின்றது.ஏனைய அமைப்புக்கள் பல தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் அதனால் மக்கள் மத்தியில் செல்வாக்குக் குறைந்தும் விமர்சனங்களை எதிர்கொண்ட ஒரு காலப்பகுதியாகவும் 1990 காணப்பட்டது.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களிலிருந்து ஆயுதம் தரித்த இயக்கங்களுக்கிடையில் மோதல்கள் வலுப்பெற்ற காலமாகவும் இது அமைந்திருந்தது.ஏனைய இயக்க உறுப்பினர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் கண்டித்து தண்டித்த சம்பவங்களும் நடைபெற்றன. இந்நிலையில் வடபுலத்து முஸ்லிம்களை அவர்களின் பூர்வீகத்திலிருந்து விரட்டுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் போராளிகள் திட்டமிட்டதை அதன் தலைவரினால் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது எனச் சொல்வது நம்பக்கூடியதாக இல்லை.

மற்றும் தனது படையணியை அதுவும் தன்னால் கட்டுப்படுத்த திராணி இல்லை என்பது அவர் காணத்துடித்த தனித் தாயகத்தில் வாழும் மக்களுக்கான பொதுவான நீதி, நியாயம், பாதுகாப்பு போன்றவற்றினை எப்படி அவரது ஆட்சி நிருவாகம் பெற்றுக்கொடுக்கும் என்கின்ற சந்தேகத்தையும் இவ்விடத்தில் மேற்கிளம்பச்செய்கின்றது.

*04.*

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையே ஏற்படும் யுத்த சூழழில் வடபுலத்து முஸ்லிம் மக்கள் அகப்பட்டு அழிந்துவிடாது இருப்பதற்காகவே இந்த விரட்டியடிப்பு நிகழ்ந்ததென்றால், அது பகிரங்கமாக முன்னகர்த்தப்பட்டு இது குறித்து முஸ்லிம்களின் கருத்தறியப்பட்டு அவர்கள் விரும்பினால் இங்கு வாழ்வது அல்லது இடப்பெயர்வை மேற்கொள்வதென்று முஸ்லிம்களின் முடிவுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறின்றி மிகவும் வலுக்கட்டாயமாக வடபுல முஸ்லிம்களின் அபிப்பிராயம் பெறப்படாது விடுதலைப் புலிகளினால் வடபுல முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற வேண்டும் என்ற கட்டாயத்திணிப்பை மேற்கொண்டு பகிரங்கமாக அறிவிப்புச் செய்யப்பட்டதிலிருந்து இது ஒரு திட்டமிட்ட வெளியேற்றம்தான் என்பதை உறுதிசெய்கின்றது.

அதுமட்டுமன்றி குறுகிய கால இடைவெளியில் அதாவது இரண்டு மணித்தியாலங்கள் அவகாசத்தில் 500 ரூபாய் பணம் மட்டும் எடுத்துச் செல்லும் அனுமதியில் நிகழ்ந்த இந்த மிலேச்சத்தனத்தை எப்படி நல்லெண்ணத்தின் அடிப்படையில் நிகழ்ந்தது என்று நம்புவது? அவ்வாறு நம்புவதாயின் பின்வரும் கோணங்கள் அந்த வெளியேற்றத்தின் போது பிரதிபலித்திருக்க வேண்டும்.

போதுமான கால அவகாசம் வடபுலத்து முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.அவர்களின் அசையும் சொத்துக்களில் விரும் பியதை அவர்களுடன் எடுத்துச் செல்ல அனுமதித்திருக்க வேண்டும். அசையாத சொத்துக்களுக்கு பாதுகாப்பு பொறுப்பினை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றிருக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ளாத ஒரு சூழலில் கூட்டுமொத்தமாக வடபுலத்து முஸ்லிம்களை அவர்களின் பூர்வீக தாயகத்திலிருந்து வெளி யேற்றியமை அப்பட்டமாக இக்கட்டில் தவிக்கவிட்ட செயலன்றி வெறென்ன? இது ஒரு இன சுத்திகரிப்பின் பண்புகளுக்கு அப்பாலான செயல்வடிவம் எனத்தான் கூற முடியுமா?

ஆயினும் இந்த ஈனச்செயல் தமது அமைப்பினால்தான் மேற்கொள்ளப்பட்டது என்பதை பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றிருந்தனர். இந்த வெளிப்படுத்துகைக்கு அப்பால் அவ்வமைப்பினர் வேறு எதனையும் முன்வைத்திருக்கவில்லை.

01) வடபுலத்து முஸ்லிம்களின் வெளியேற்றம் என்பது ஒரு துன்பவியல் நிகழ்வு என அண்டன் பாலசிங்கம் கூறியமை.

02) கடந்த 2002இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் காணப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது இணக்கப் பாட்டில் முஸ்லிம்கள் மீளக் குடியமர முடியும் எனத் தெரிவித்திருந்தமை.

இந்த சந்தர்ப்பத்தில் அநியாயமாக விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் பேசப்பட்டிருந்தாலும் அது உடன் சாத்தியப்படவில்லை. அதற்கு கூறப்பட்ட காரணங்கள் மிகுந்த அவதானத்துக்குரியவைகள்.

முஸ்லிம்களின் வீடுகளில் சில உடனடியான குடியிருப்புக்கு உகந்ததற்ற சிதை வுகளை அடைந்திருக்கின்றது. (இதுகூடத் திட்டமிட்டு வீட்டின் கூரை, ஜன்னல், கதவு போன்றவைகள் அபகரிக்கப்பட்டிருந்தன.) இது திருத்தி அமைக்கப்படும் வரையிலும் மற்றும் பல முஸ்லிம்களுக்குச் சொந்தமான இல்லங்களில் மாவீரர்களின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கான மாற்றீடு இருப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் வரையிலும் முஸ்லிம்கள் மீளக்குடியேற காத்திருக்க வேண்டும் என்பதாகும்.

இவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவந்து முஸ்லிம்களை மீள்குடியேற்று வதற்கான எந்த முயற்சிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு வலிமை பெற்றிருந்த நிலையிலோ அல்லது வலுவிலிருந்த காலத்திலோ முன்னெடுக்கவில்லை. வெறும் பேச்சளவோடு முஸ்லிம் மீள்குடியேற்ற சமாச்சாரம் நின்று போனதென்பதே வரலாறு.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை மீள்குடியேற அனுமதித் திருந்தது என்பது ஒரு கதையாடல் சம்பவமாகவே இருந்தது.

உண்மையில் அன்று மட்டுமன்றி இன்றுவரை இம்மக்களின் மீள் குடியேற்றம் சரியான முறைமையின் கீழ் திட்டமிட்டு நடபெறாது இருந்துவருவது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் செய்துகொண்ட சந்திரிக்கா-அஷ்ர.்.ப் ஒப்பந்தத்தில் கூட வடபுலத்து முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்து எழுதப்பட்டிருந்தும் அவர்களால் கூட அன்று இந்த மீள்குடியேற்றத்தை வெற்றி கொள்ள முடியவில்லை.

அதற்கான காரணத்தை அவரது பார்வையில் கண்டிருந்த கோணத்தை சரிநிகர் பத்திரிகைக்கு 1999களில் வழங்கிய செவ்வியில் பின்வருமாறு எடுத்துக் காட்டியிருந்தார். அதுதான் உண்மையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டுக்காலம் நிரூபித்துக்காட்டியது.

'விரட்டியடிக்கப்பட்ட வடபுலத்து முஸ்லிம்கள் மீண்டும் அங்கு சென்று குடியேறி வாழ்வதென்பதை அண்டன் பாலசிங்கமோ திலகரோ தீர்மானிக்க முடியாது. அவர்கள் கூறுவதை நம்பி குடியேறக்கூடாது.தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பகிரங்கமாக முஸ்லிம்களை குடியேற அழைப்புவிடுக்க வேண்டும்.அப்போதுதான் மீள்குடியேற்றம் சாத்தியமாகும்'

எது எவ்வாறிருந்தாலும் கடந்த காலங்களை விட்டுவிட்டு, நல்லாட்சி நடை பெறுவதாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ள இந்த அரசாங்கத்திலாவது வடபுலத்து முஸ்லிம்களை அவர்களின் பூர்வீக நிலத்தில் வாழும் உரிமையை நிலை நிறுத்துவதற்கும் சரியான முறையில் மீள குடியேறுவதற்கும் நடவடிக்கைகள் நடைபெறவேண்டும் என்பதே இன்றைய எதிர்பார்ப்பாகும்.

இதனை இன்றைய அரசாங்கம் செய்வதற்கு நமது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவர்களும் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவார்களா? செயற்படுவதுதான் உண்மையில் அவர்களின் முக்கிய பொறுப்பாகும்.தமது பொறுப்பிலிருந்து விடுபடாத பிடிப்பும் துடிப்புமே வடபுல முஸ்லிம்களின் வாழ்வில் எழுச்சிகரமான மாற்றத்தை விதைப்பதாக அமையும்.

*29.12.2015* - விடிவெள்ளி

# முஸ்லிம் தனியார் சட்டம் இஸ்லாத்துக்கு புறம்பானதா?

நமது நாடு பலவகையான சட்டங்களை நடைமுறையில் கொண்டு இருக்கின்றது. அவற்றில் "விஷேட சட்டங்கள்" என்றொரு பகுதியும் உள்ளது. இந்த தனியார் சட்டமானது இங்கு வாழும் மக்களின் சில பகுதிகளுக்கும் அவர்களின் இடம், கலாசாரம், மற்று மதம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு பேணுவதற்கு வழிவகுப்பட்டுள்ளது.

அந்த வகையில் கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் தனியார் சட்டம் என்பன தற்போது விஷேட சட்டங்களில் இடம்பெறுகின்றது. இதில் கண்டியச் சட்டம் என்பது கண்டியில் வாழும் சிங்களவர்களுக்கு மட்டுமானது. வடபுலத்து தமிழர்களுக்கு மட்டும் தேசவழமைச் சட்டம் கைக்கொள்ளப்படும் அதேவேளை நாடு பூராகவும் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்புடையதாக முஸ்லிம் தனியார் சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது.

முஸ்லிம் தனியார் சட்டம் என்பதற்குள் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் சொத்து வழியுரிமைச் சட்டம், முஸ்லிம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைப் பொறுப்புக்கள், அல்லது வக்பு சட்டம் என்பன இந்த முஸ்லிம் தனியார் சட்டத்தில் உபயோகிக்கப்படுகின்றது.

பன்மைத்துவ மத, கலாசார விழுமியங்களைக் கொண்ட நமது நாட்டில் முஸ்லிம்களுக்கென்று அவர்களின் சமய அடிப்படையில் சில விடயங்களை யேனும் பின்பற்றி வாழ்வதற்கு சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது வறவேற்கப்படவேண்டிய விடயம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

முஸ்லிம் தனியார் சட்டம் நமது நாட்டில் நடைமுறைக்கு வருவதற்கு பல வகையான முஸ்தீபுகளையும் ஆக்கபூர்வமான கோரிக்கைகளையும் முன்வைத்து கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அம்சமாகும். இதில் நூறு வீதம் இஸ்லாமிய சட்டம் பிரயோகிக்கும் வகையில் இச்சட்டம் ஆக்கப்படிருக்கின்றதா என்கின்ற ஒரு கேள்வி இருந்து வருவதை நாம் மறுப்பதற்கு இல்லை.

என்றாலும் முஸ்லிம் நாடு என்ற வரையறைக்கு அப்பாலான இலங்கையில் முஸ்லிம்களின் சில நடவடிக்கைகள் அவர்களின் மத வழியில் கடைப்பிடிக்க அனுமதிக்கப்படிருப்பதும் அது நாடுதழுவிய ரீதியில் ஏற்புடையாதாக ஆக்கப்பட்டிருப்பதும்

ஒரு வரப்பிரசாதமாக பார்க்க வேண்டியிருக்கின்றது. அதற்காக வேண்டி இதில் எந்த குறைப்பாடும் இல்லை என்று அர்த்தப்படாது.

முஸ்லிம் தனியார் சட்டத்தின் தோற்றுவாய்க்காலம் சிங்கள மன்னர் காலம் தொட்டு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகும். இருந்தாலும் இன்று நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் சட்டம் தோன்றிய வரலாற்றின் சுருக்கத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம். இது குறித்த வரலாற்று பதிவுகளை ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் பாகம் - 02, இலங்கை பாராளுமன்றத்தில் முஸ்லிம்கள், நடைமுறைக்கேற்ற இஸ்லாம் போன்ற நூல்களிலும் பார்க்க கூடியதாக உள்ளன.

போர்த்துக்கேயர் 1505ஆம் ஆண்டில் இந்நாட்டுக்கு வருகைதந்த போது முஸ்லிம்கள் தமது இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கையாண்ட நீதிமன்ற முறமைகளும் அதற்கான வழிவகைகளையும் முற்றாக அழித்தும் முஸ்லிம்கள் மீதான தமது கோபத்தை பாய்ச்சியதாகவும் வரலாறு பதிவு செய்துள்ளது. போர்த்துக்கேயரை அடுத்து இலங்கையை வந்தடைந்த ஒல்லாந்தர்களும் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர்களின் முஸ்லிம்கள் மீதான அழிப்பு, புறக்கணிப்பு நடவடிக்கைகளை பின்பற்றினர்.

காலம் செல்லச்செல்ல ஒல்லாந்தர்கள் தமது முஸ்லிம் விரோதப்போக்குகளை குறைத்துக்கொள்ளும் நிலைக்கு வந்தனர். இதற்கு முக்கிய காரணம் உள்ளூர் திரவிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு முஸ்லிம்களின் உதவி ஒல்லாந்தர்களுக்கு தேவைப்பட்டதாகும். இதனால் ஒல்லாந்தர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் முஸ்லிம்கள் ஓரளவு இயல்பு வாழ்க்கையை பேணக் கூடியதாக அமைந்தது.

கடந்த 1756 ஆம் ஆண்டில் இருந்து 1785 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆளுனராக இருந்த ஒல்லாந்தரான பல்க் என்பவர் தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் முஸ்லிம் சட்டங்களோ அவற்றை அறிந்தவர்களோ இல்லாமல் இருப்பதை உணர்ந்தார். இதனால் கிழக்கு இந்திய கம்பனியின் தலைமைப்பீடமாக இருந்த பட்டேலியாவிலிருந்த ஆளுனர் நாயகத்திடம் சட்டக்கோவை ஒன்றை அனுப்புமாறு கோரிக்கையை முன்வைத்தார். (பட்டேவியா எனும் இடம் மலேசியாவின் மலாக்கா பிரதேசத்தில் உள்ள ஒரு துறைமுக நகரமாகும்)

இதற்கிணங்க ஆளுனர் நாயகம் அங்குள்ள முகம்மதிய மார்க்க நிபுனர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சட்டக்கோவையை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். இரு நாடுகளும் ஷாபீஈ மத்ஹபை பெரும்பான்மையாக பின்பற்றுவர்களாக இருந்ததினால் இலங்கையர்களும் இந்த சட்டக்கோவையை ஏற்றுக்கொண்டனர்.

1770 ஆம் ஆண்டைய எட்டாம் இலக்க சட்டக்கோவை என்ற பெயரில் சோனகர் அல்லது முகம்மதியர் எனப்படுவோருக்கும் ஏனைய சுதேச இனங்களுக்குமான

விஷேட சட்டங்கள் என்ற பெயரில் இச்சட்டக்கோவையின் சரத்துக்கள் முஸ்லிம்கள் தொடர்பான வழக்குகள் ஒல்லாந்த நீதிமன்றங்களுக்கு வரும்போது அவ்வழக்கின் விசாரணைகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

ஒல்லாந்தரின் ஆட்சியை அடுத்து ஆங்கிலேயரின் வசமாக இலங்கை ஆன போது அலெக்சாண்டர் ஜோன்சன் எனும் பிரதம நீதியரசர் முஸ்லிம்களுக்கான புதிய சட்டக்கோவையொன்றை தயாரித்தார். அது முகம்மதிய சட்டங்களின் கோவை எனும் சட்ட ஆவனம் 1806ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி பிரதம நீதிபதியினால் ஆளுனரிடம் கையளிக்கப்பட்டது. இதன் அமுலாக்கம் ஆரம்பத்தில் கொழுமபு நகரிலும் அதனை அண்டிய பகுதி களுக்குமே பிரயோகிக்கப்பட்டது.

1852ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க சட்டப்பிரகாரம் இது நாடுமுழுவதும் நடைமுறைக்கு வந்தது. 102 பகுதிகளைக்கொண்ட இச்சட்டம் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. 1-63 வரையான பகுதிகள் சொத்து, வாரிசுரிமை களைப்பற்றியும் 64-102 வரையான பகுதிகள் விவாகம், விவாகரத்து என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் இச்சட்டம் காணப்படுகின்றது.

1886ஆம் ஆண்டு முகம்மதிய விவாகப்பதிவுச்சட்டம் அவ் ஆண்டின் 08ஆம் இலக்க சட்டமாக சட்டவாக்க சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் 1888ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க திருத்தமும் இதற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத்தொடர்ந்து இச்சட்டத்துக்கு 1910, 1918, 1922 ஆகிய வருடங்களிலும் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டது.

சட்டவாக்க சபையில் அங்கத்தினராக இருந்த என்.எச்.எம் அப்துல் காதர் முஸ்லிம் திருமன பதிவு, விவாகரத்து தொடர்பான சட்டத்தினை பூரணமான ஷரீஆத் சட்டத்தினுள் உட்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு அப்போது நடைமுறையில் இருந்த சட்டத்தினை மறுபரீசீலனை செய்து உரிய மாற்றங்களை கொண்டு வரவேண்டுமெனும் மசோதாவை கொண்டு வந்தார்.

இதில் முன்மொழியப்பட்ட விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1929ஆம் ஆண்டைய 27ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது. இதற்கும் 1934ஆம் ஆண்டில் 09ஆம் இலக்க சட்டத்தினூடாக சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இந்த சட்டத்திலும் சில மாற்றங்கள் வேண்டுமென முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் 1939ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதன் சிபாரிசுகளுக்கு ஏற்ப 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டமாக முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்புதிய சட்டம் 1954ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வந்தது. இன்று நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின்

பிரதான சட்டம் இதுவாகும். இந்த சட்டத்தில் 1954ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க திருத்த சட்டம் 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க திருத்த சட்டம் 1965ஆம் ஆண்டின் முதலாம் இலக்க திருத்த சட்டம் மற்றும் அதே ஆண்டின் 11ஆம் இலக்க திருத்த சட்டம் 1969ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க திருத்த சட்டம் 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க திருத்த சட்டம் 2005இன் சிறு திருத்தம் ஒன்றும் என இச்சட்டம் காணப்படுகின்றது.

முஸ்லிம் விவாக விவகாரத்து சட்டம் 1962ஆம் ஆண்டு பாரிய பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கியது. சைனுலாப்தீன் எதிர் டனினா உம்மா எனும் வழக்கு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதில் சைனுலாப்தீன் சார்பில் சட்டத்தரணி ஜி.ஜி பொன்னம்பலம் ஆஜராகி தமது வாதங்களை முன்வைத்திருந்தார். இந்த வழக்கில் பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

"காதிமார் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் நீதித்துறையினால் நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் விசாரணைகளை நடத்தி தீர்ப்புக்களை வழங்கி அத்தீர்ப்புக்களை அமுல் நடத்துபவர்களாக இருக்க வேண்டுமாயின் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இக்காரணத்தினால் அவர்களின் தீர்ப்பு செல்லுபடியாகாது".

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பினால் காதி நீதிமன்றங்கள் செயலற்று போயின. மூன்று வருடங்கள் அவை இயங்கவில்லை. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க திருத்த சட்டமும் அதே ஆண்டின் 11ஆம் இலக்க திருத்த சட்டமும் நாடாளுமன்றத்தின் நிறைவேற்றப்பட்டன. முதலாவது திருத்தத்தின் பிரகாரம் காதி நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக் குழுவினால் நியமனம் செய்யப்படும் முறை அமுலுக்கு வந்தது. 2ஆவது திருத்தத்தின் படி ஏற்கனவே பல்லாண்டு காலம் நடைமுறையில் இருந்த காதி நியமனங்களும் அவர்களின் செயற்பாடுகளும் செல்லுபடியாகுமென அனுமதியளிக்கப்பட்டது.

இவ்வாறு பல்வேறு இடர்களை முஸ்லிம் தனியார் சட்டம் குறிப்பாக முஸ்லிம் விவாக விவகாரத்து சட்டம் சந்தித்திருக்கின்றது. அவ்வாறிருந்தும் அதனை கைவிட்டுவிடாத வகையில் இதன் அமுலாக்கத்தை உறுதி செய்வதற்கு முஸ்லிம்கள் தேவையான பொறிமுறைகளை முன்னிறுத்தி இருக்கின்றனர். இதனால் முன்னர் இருந்து பின்னர் வழக்கொழிந்து போன முக்குவர் சட்டம் போன்று இதுவும் ஆகிவிடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி இலங்கையின் நீதிமன்றங்கள் என்ற அடிப்படையில் காதி நீதிமன்றம், காதிச்சபை என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இன்று சுமார் 65 காதி நீதிமன்றங்கள் இலங்கையில் அமைந்துள்ளது. காதி நீதிமன்ற தீர்ப்பில் திருப்தி இல்லையென்றால் அதனை காதிச்சபையில் முறையிடவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றிலும் திருப்தியுறாவிடின் மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் வரை செல்வதற்குரிய கட்டமைப்பும் காணப்படுகின்றது.

இந்நிலைக்கு அப்பால் முஸ்லிம் விவாக, விவகரத்து சட்டத்தில் திருத்தங்கள் வேண்டும் என்கின்ற கோரிக்கை மிக நீண்ட நாட்களாக நம்மத்தியில் இருந்து வருகின்றது. இதன் எதிரொலியாக முஸ்லிம் சமய கலாசார முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி கலாநிதி ஏ.எம்.எம் சஹாப்தீன் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தார்.

இக்குழுவினர் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற மகஜர்களையும் நேரடியாக பல குழுக்களை அழைத்து கலந்துரையாடி பெற்ற கருத்துக்களையும் தமது புலமைசார் அபிப்பிராயங்களையும் எடுத்ததன் பின்னர் இப்போது நடைமுறையில் உள்ள முஸ்லிம் விவாக விவகாரத்து சட்டத்தில் மிகச்சிறிய அளவிலான திருத்தங்கள் வேண்டும் என்ற முடிவு பெறப்பட்டது. ஆயினும் அன்றைய ஆட்சி மாற்றம் காரணமாகவும் இந்த குழுவினை நீதியமைச்சர் நியமித்திருக்க வேண்டும் என்கின்ற சட்ட காரணத்தினாலும் இது நடைமுறைக்கு வராது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் 2ஆம் கட்ட ஆட்சி காலத்தில் நீதியமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் முஸ்லிம் விவாக விவகாரத்து சட்டத்தில் மாற்றங்கள் காணப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிபெற முடியவில்லை. மற்றும் 100 நாள் ஆட்சி காலத்தில் நீதியமைச்சராக வந்த விஜயதாச ராஜபக்ச இதனை முன்னெடுப்பதாக சொல்லியிருந்தும் நடை பெறவில்லை. இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நீதி அமைச்சராக அவரே காணப்படுகின்றார். இவர் அண்மையில் கூட இச்சட்ட திருத்தத்தை நிறைவேற்ற இருப்பதாக அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் விவாக, விவகாரத்து சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. இது இச்சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்பதை உறுதிசெய்கின்றது. அதற்காக எல்லாவற்றிலும் திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கையும், இது ஒரு இஸ்லாமிய சட்டம் இல்லை என்ற காண் பித்தலை முன்னிறுத்தும் வகையிலும் கருத்துக்கள் வெளிப்படுவதையும் நாம் அவதானிக்கின்றோம்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முடிந்தளவில் முஸ்லிம்களுக்கான தனியார் சட்டங்களை பாதுகாப்பதில் நமது மக்கள் கவனம் செலுத்திய அவர்களின் நடவடிக்கைகளை குறைகாண்பதை விடவும் அவர்களின் முயற்சியினால் ஓரள வேனும் நமது இஸ்லாமிய சட்டத்தினை பின்பற்ற இந்த நாட்டில் முடிகின்றதே என்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

இன்று நடைமுறையில் உள்ள இச்சட்டத்தின் குறைபாடுகள் அவஸ்தைக்குரிய தாகவும் பெண்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். அதுமட்டுமன்றி இதனைவிட பொதுச்சட்டத்தின்படியான நடவடிக்கையை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்திலும் ஏற்றுக்கொள்வதினால் அதிக நலன்களை நமது மகளிர்கள் பெறமுடியும் என்ற ஒரு கருத்து நிலை உருவாக்கப்பட்டும் வருகின்றன.

மணப்பெண்ணின் சம்மதம், வலியின் சம்மதம் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லை, திருமணப்பதிவு, மண மகளின் கையொப்பம், திருமணக்கொடை, பலதாரமணம், விவாகரத்து மனைவிக்கான பராமரிப்பு, காதி நீதிமன்றங்கள் என மாற்றங்கள் தேவையென்று பெரியளவில் பேசுபொருளாக மாற்றப்பட்டும் வருகின்றது. இவ்வாறு மாற்றம் கோரப்படும் அனைத்திலும் திருத்தம் வேண்டும் என்று நாம் ஏற்கவேண்டிய தேவை இருக்கின்றது என அங்கீகாரம் செய்ய தேவையில்லை. சிலவற்றில் மாற்றம் தேவையென்பதையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

உலகத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களிலும் பெரும்பகுதியினர் நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்றும் கொள்கையுடையவர்களாகவே காணப்படு கின்றனர். இஸ்லாமிய நாடுயெனவும் பல மார்க்க சீர்திருத்தங்கள் முன்வைக் கப்பட்ட தேசம் என கூறப்படும் சவூதி அரேபியா கூட ஹன்பலி மத்ஹபை ஏற்றுள்ளதை அவதானிக்கலாம். குறிப்பாக இமாம் இப்னுதைமியா கூட இம்மத்ஹபை சார்ந்தவர் என்றே அறியப்படுகின்றார்.

சிறு குழுவினர் மத்ஹபுகள் தேவையில்லை என்றும் அது மார்க்கம் அல்ல என்ற கருத்தை முன்வைத்திருந்தாலும் அதற்கெதிராகவே இஸ்லாமிய நாடுகளும் இஸ்லாம் அல்லாத நாடுகளிலும் வாழும் முஸ்லிம் மக்களின் பெரும்பகுதியினர் மத்ஹபுகளை பின்பற்றுகின்றனர். அந்த வகையில் இலங்கையில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் ஷாபிஈ மத்ஹபை கடைப்பிடிக்கின்றனர். இதனால் நமது முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் வலியின் சம்மதம் முக்கியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதற்காக வேண்டி ஷாபிஈ மத்ஹபை சேர்ந்த முஸ்லிம் பெண்கள் தாம் விரும்புவோர்களை மணந்துகொள்வதை தடை செய்கின்றது என்று கூற முடியாது. வலி என்பது இஸ்லாமிய திருமணத்தில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அந்த வகையில் வலிகாரராக யார் இருப்பது என்பதில்தான் கருத்து வேறுபாடு உள்ளது தவிர வலி முக்கியம் இல்லை என்று கூறப்பட வில்லை.

ஷாபிஈ மத்ஹபை பின்பற்றும் ஒரு பெண்ணின் நியாயபூர்வமான விருப்புக்கு மாறாக தக்க காரணம் இன்றி தனது வலிகாரர் எதிர்ப்பு தெரிவித்தால் அதனை உடைத்தெறிந்து பெண்ணின் சரியான விருப்பை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

வலிகாரரின் மறுப்புக்கு எதிராக காதி நீதிமன்றில் முறையிட முடியும். அல்லது ஹனபி மத்ஹபை பின்பற்றி தனது திருமணத்தை முடித்துக்கொள்ள முடியும்.

ஷாபிஈ மத்ஹபு சட்டம் இஸ்லாத்தையொட்டி இல்லையென்றும் ஹனபி மத்ஹப் இஸ்லாமிய சட்டத்தை அனுசரித்துச் செல்கின்றது போன்ற மாயையை தோற்றுவிக்க முற்படுவது முறையல்ல. முஸ்லிம்களிடம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நான்கு மத்ஹபுகளும் இஸ்லாமிய ஷரீஅத்தை நிலைநாட்டும் சட்டங்களையே முன்வைத்துள்ளன. மாறாக அவை ஒருபோதும் இஸ்லாத்துக்கு புறம்பானது அல்ல.

இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள் என்ற வகையில் குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டு மட்டும் என கொள்வதினால் சில வேறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெறுகின்றது. சட்ட நிலையைப் பொறுத்தவரை இவை இரண்டுடன் இஜ்மா: , கியாஸ், உர்பு போன்ற மூலங்களையும் உள்ளடக்கி பார்க்கப்படல் வேண்டும். அப்படி நோக்கப்பட்டால் சட்டத்தில் காணப்படும் சில மாறுபட்ட அபிப்பிராயங்கள் இஸ்லாத்துக்கு புறம்பானது என்ற எண்ணக்கரு உருவாகாது.

இஸ்லாமிய சட்டம் முஸ்லிம் சட்டம் என்ற பதங்களை வைத்து முஸ்லிம் சட்டம் என்பது இஸ்லாமிய சட்டம் என்பதை குறிக்காது என்ற கருத்தை விதைக்கும் ஒரு முனைப்பும் இதற்குள் உட்கிடையாக முன்வைக்கப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். சட்ட அறிஞர்களின் கூற்று வெறுமென மனிதக்கரங் களினால் உருவாக்கப்படும் சட்டம் என்றும் இது முஸ்லிம் சட்டமாக பார்க்கபடும் தவிர இஸ்லாமிய சட்டமாக நோக்க தேவையில்லை என்ற மாற்று வாசிப்பை முன்னிறுத்துகின்றனர்.

முஸ்லிம் என்பது கூட இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதினால் வருகின்ற பெயர் என்பதை புரிந்து கொள்ள தவறுகின்றோம். இதனால் முஸ்லிம் என்ற சொற் பிரயோகத்திலும் இஸ்லாம் எனும் அம்சமும் பதிந்துள்ளது என்பதை கவனிக்க தவறுகின்றோம்.

முஸ்லிம் விவாக விவகாரத்து சட்டம் முழுமையான இஸ்லாமிய சட்டத்தின் உள்ளடக்கம் என்று கூறமுடியாதளவில் ஓரிரு விடயங்கள் காணப்பட்டாலும் அதன் பெரும்பகுதிகள் இஸ்லாமிய சட்டவியலுக்கு வெளியில் செல்லாது உள்வாங்கப்பட்டிருப்பதையும் கூர்ந்து நோக்கினால் புரிந்து கொள்வதில் சிரமம் இல்லை.

தலாக் கூறுகின்ற ஒரு கனவன் மனைவிக்கு மத்தாஹ் - நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதை இஸ்லாம் வலிமையாக வலியுறுத்துகின்றது. அது தற்காலத்தில் காதி நீதிமன்றங்கள் இதனை அனுசரித்து தீர்ப்புகளை வழங்கிய போதிலும் நடைமுறை நமது சட்டத்தில் சட்டரீதியான அங்கீகாரத்தை கொண் டில்லை. இது கட்டாய திருத்தமாக மேற்கொள்ளப்படவேண்டிய ஓர் அம்சமாகும்.

பலதாரமணம் இஸ்லாத்தில் ஊக்குவிக்கபடாத ஒரு பகுதியாக பேசப்படுவதையும் நாம் காணலாம். ஆனால் இஸ்லாம் அனுமதித்த ஒன்றாக அது இருக்கின்றது. இதனால் இச்செயற்பாடு தவிர்க்கப் படவேண்டும் என யாரும் அபிப்பிராயப்பட முடியாது. கணவனை இழந்த பெண்களையும் தந்தையை இழந்த ஆதரவற்ற பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக பலதாரமணம் அனுமதிக்கப்பட்டது என்று பொருள்கோடல் செய்யப்பட்டு விமர்சிக்கப்படுகின்றது. இந்த இரண்டு காரணங் களுக்கா மட்டுமே பலதாரமணம் அனுமதிக்கப்படுகின்றது என திட்டமாக குறிப்பிடுவது சரியானதல்ல.

இஸ்லாம் அனுமதித்த ஒன்றில் காரணங்களென நாம் கண்டுபிடிப்பவைகளும் நமது காலத்தில் நிலவுகின்ற கருத்துக்கள் மாத்திரம்தான் உரிய காரணங்களாக அமைய முடியும் என சொல்ல முடியாது. உதாரணமாக மேற்சொன்ன இரண்டு காரணங்களுக்கு அப்பால் தாம்பத்திய உடலியல் தேவையும் ஆண்கள் அருகி பெண்கள் அதிகரிக்கும் நிலைகளும் பலதாரமணத்தை அனுமதிப்பதற்கான பின்புலங்களாக அவதானிக்கின்றோம். எதிர்கால சந்ததிகள் இவையல்லாத துணைக்காரணங்களை கூட அறிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

குர்ஆன் வசனங்கள் இறங்கிய சந்தர்ப்பத்தை வைத்து அதற்கு மட்டுமே அந்த வசனம் உரியது என்ற எண்ணப்பாடு சரியானது அல்ல. அந்த சந்தர்ப் பத்தை ஒத்த தன்மைக்குரிய சந்தர்ப்பங்களுக்கும் அது உரித்துடையதாகும். இவற்றினை கருத்தில்கொண்டே குர்ஆன் வசனங்கள் இறங்கிய சந்தர்ப்ப சூழலை நோக்குதலும் அதிலிருந்து சட்டங்களை வகுப்பதும் தங்கி இருக்கின்றது.

பலதாரமணத்தை மேற்கொள்வதற்காக இஸ்லாம் சில தகுதிகளை சுட்டிக்காட்டு கின்றது. இவ்வாறான தகுதி இல்லாதவர்கள் இதனை பிரயோகிப்பதை தடுக்கும் வகையிலான நியாதிக்கங்களை நமது காதி நீதிமன்றங்களுக்கான அதிகாரத்துக்கு உட்படுத்தி இதனை தவிர்க்க முனைவது நல்ல விடயமே. இவ்வாறான திருத்தங்கள் தேவையென கூறலாம். ஆனால், பலதாரமணம் தேவையற்றது எனச் சொல்லக்கூடாது.

இப்படி தேவையானவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு இஸ்லாம் அனுமதித்த வழிமுறைகளை வலிமைப்படுத்தும் வகையில் நமது மாற்று சிந்தனைகள் வெளிப்படுத்தப்படவேண்டும். மாறாக நாம் முன்னுதாரணங்கள் இன்றி சுயமாக பொருள்கோடல்களை எடுத்துக்கொண்டு இஸ்லாமிய சட்டங்களை பேசுவதற்கும் மாற்றுவதற்கும் முயல்வது ஓர் ஆரோக்கியமான நடவடிக்கை அல்ல.

எனவே இன்று நம் மத்தியில் நடைமுறையிலிருக்கும் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் மாற்றம் தேவையென விமர்சிக்கப்படும் எல்லா பகுதிகளிலும் திருத்தம் வேண்டி நிற்பதாக அர்த்தப்படுத்த முடியாது. அதே போன்று சில இடங்களில் இஸ்லாமிய சட்டத்தின் முழுமைத்தன்மையையும் பலனையும் அடைந்து கொள்வதில் திரையாக காணப்படும் சில விடயங்களில் திருத்தம் தேவைப்படுவதையும் நாம் மறுக்காத கோணத்தில் இந்த விடயம் அனுகப்பட வேண்டிய ஒன்றே ஆகும்.

*25.12.2015* - விடிவெள்ளி.

# முஸ்லிம் அரசியலின் இயலாமை

நமது நாட்டு அரசியலில் முஸ்லிம் மக்களாகிய நமது வகிபாகம் சற்று வித்தியாசமானது. குறிப்பாக அரசியல் அதிகாரத்துவத்தை செலுத்தும் ஆதிக்க வரலாற்றில் முன்னோக்கிய சரித்திரத்தை கொண்டவர்களாக நாம் இருக்கவில்லை என்பது யதார்த்தபூர்வமானது.

சிங்கள மக்களின் மன்னர் ஆட்சி தொட்டு தமிழ் மன்னர்களின் ராஜ்ஜியம் என்ற வரலாறு வரை நமது நாடு கொண்டிருக்கின்றது. இதனை ஒத்த தன்மையை முஸ்லிம் மக்களாகிய நாம் கொண்டவர்கள் அல்ல. அதுமட்டுமன்றி இந்த வரலாற்றை மாற்றியெழுதும் எண்ணத்தை துளியளவு கூட வெளிப்படுத்திய சான்றின் நிழல் கூட பதியவில்லை.

நமது நாட்டின் பிரதான சமூகங்களாக சிங்களவர், தமிழர், முஸ்லிம் எனும் அம்சத்தில் நாம் பங்காளர்களாகவும் அந்த அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்பவர்களாகவும் இருப்பதற்கு ஏற்பட்ட எத்தகைய தடைகளையும் உடைத் தெறிவதற்கு உந்தப்பட்டவர்களாக நாம் இருந்திருக்கின்றோம். அதேநேரம் நமது தனித்துவத்தையும் தனியான உரிமைத்துவத்தையும் மத, கலாசார விழுமியங்களை இழக்காத அல்லது விட்டுக்கொடுக்காத ஒரு கோணத்தை நமது வரலாறு நெடுகிலும் தடயமாகக் கொண்டிருக்கின்றோம்.

சிங்கள மக்களோடும் அம்மக்களின் இராஜதானிகளோடும் முரண்படாது நமது விசுவாசத்தை அவர்கள் மீதும் நாட்டின் மீதும் காட்டியும் வந்திருக்கின்றோம். அதன் பிரதிபலனாக நாம் நமக்கு தேவையான வசதிகளை குறைவில்லாது அடைந்திருக்கின்றோம். இதே போன்று தமிழர் ஆட்சியிலும் அப்பகுதியில் வாழ்ந்த நமது மக்கள் அவர்களுடன் இணங்கிச்செயற்பட்டும் வந்திருக்கின்றனர்.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் எந்த சமூக மக்களோடும் நல்லுறவை பேணுவதற்கு குந்தகமாக அமையக்கூடிய எந்த ஈனச்செயல்களிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாது தாம் வாழும் சூழலில் எந்த மக்கள் வாழ்கின்றனர்களோ அந்த மக்களோடு பரஸ்பர உறவையும் இசைவான உணர்வுகளையும் பரிமாறிக்கொண்டவர்களாகவும் சமாதானத்தின் வாழ்வில் மிகுந்த அக்கறை செலுத்திய மக்களாகவே முஸ்லிம்கள் இந்த நாட்டில் இருப்புக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய நிலையில் நாம் வாழ்ந்தோம் என்பதினால் அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தின் போது நமக்கென்று ஓர் தீர்வை நோக்கி நாம் நகரத் தேவையில்லை என்றும் நமது ஆரம்ப கால வரலாற்றைப்போல் எந்த ஆட்சியாளர்களானாலும் அவர்களை மதித்து இன்றும் வாழவேண்டுமென எம்மிற்சிலர் கருத்துரைக்கின்றனர். இந்த பரப்புரை நமக்கு இன்று பொருத்தமாக எடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றல்ல.

ஆண்ட பரம்பரையாக நாம் என்றும் இருக்கவில்லை, அதற்காக நாம் ஆயுதம் ஏந்தி போராடவில்லை என்கின்ற பதிவை நாம் கொண்டிருந்தாலும் அதிகாரப் பங்கீடுகளில் கவனம் செலுத்திய பண்பை நமது பின்னைய நாட்களின் வரலாறு கொண்டிருக்க தவறவில்லை. இதன் செயற்பாடாகவே பின்வருவனவைகளை எடுத்து நோக்க முடியும்.

நமது நாட்டின் சட்ட சபையில் நமது பிரதிநிதித்துவத்திற்காக பலத்த போராட்டங்களையும் பிரயத்தனங்களையும் நாம் முன்னெடுத்த நிகழ்வு நிகழ்ந்திருக்கின்றது.அரசியல் அதிகாரத்துவம் நோக்கியதும் அதிகாரத்தில் அமர்வதும் என்கின்ற இலக்கை நோக்கிய இந்த முயற்சி ஒரு வகையில் அரசியல் அதிகாரம் நம்மிடமும் வரவேண்டும் என்கின்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாக இதனை பார்க்க முடியும். அப்படியல்லாது இது ஒரு கால கட்டத்தின் தாக்கத்தின் பதிவென நாம் புறமொதுக்குவது புத்திசாலித்தனமான நடவடிக்கையல்ல.

கடந்த 1956இல் நமது மக்களாகிய முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சி உருவாக்கப்படவேண்டும் என்கின்ற சிந்தனையை மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்றோர்களினால் சிந்திக்கப்பட்டு இருக்கின்றது. கல்முனையைச் சேர்ந்த மர்ஹூம் எம்.எஸ். காரியப்பர் முஸ்லிம் கட்சியை உருவாக்கியிருக்கிறார். அகில இலங்கை முஸ்லிம் லீக் ஒரு காலகட்டத்தில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு அதற்கான சின்னமாக உதய சூரியன் கூட வழங்கப்பட்டும் இருக்கின்றது.

இப்படி நமது முன்னைய அரசியல்வாதிகளின் புலமைத்துவ ஆளுமைகளினால் முன்னெடுக்கப்பட்ட தனிக்கட்சி அரசியல் சில இடரல்களை சந்தித்திருந்தாலும் பின்னைய நமது வரலாறு மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் தனிக்கட்சி எதிர்பார்ப்பை நிறைவேற்றியது. அதனைத்தொடர்ந்து வேறுசில கட்சிகளும் இன்று உருவாக்கப்பட்டு, நடைமுறையில் இருக்கின்றன.

நமது அரசியல் உரிமைத்துவம் நம்மிடம் இருக்கவேண்டும் என்கின்ற சூழல்களை நாமாக உருவாக்கி தேடிக்கொள்ள முற்பட்டோம் என்பதை விட அதனை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்தில் சிங்கள, தமிழ் சமூகங்களின் அரசியல் போக்குகள் ஏற்படுத்தியது என்பதே முற்றிலும் உண்மையானது.

இத்தகைய மாறுதலை நோக்கிய நமது மக்களின் மாற்றம் தொடங்கப்பட்ட திலிருந்து அது குறித்த சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் இருந்து விலகிச்செல்லாத ஒரு தொடர்ந்தேர்ச்சியை முன்னிறுத்தியவர்களாகவே நாம் செயற்படுகின்றோம். இவ்வாறான பிடிப்புத்தான் நமது நாட்டில் பின்னைய இனவாத அரசியல் ஓட்டத்திற்குள் நம்மையும் நிலைநிறுத்தி வைக்க வழியிட்டு இருக்கின்றது.

நமது நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப நாமும் அரசியல் அதிகாரத்து வத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு சட்ட சபை காலத்திலிருந்து முன்வந்திருக் கின்றோம். எனில் நாம் அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கி சிந்திக்க கூடாதென்ற முன்வைப்பை சமரசம் செய்து கொள்ள முடியவில்லை. இவர்கள் அச்சப்படும் எந்தவிதமான பாதிப்புக்களையும் நாம் அடைந்து கொள்ளப் போவதில்லை.

முஸ்லிம் மக்களாகிய நமது இருப்பியல் ஏனைய சமூகங்களின் உறுதித்தன் மையையும் செறிவான அடர்த்தியையும் கொண்டது போல் அமையவில்லை. இது நமக்கு சில பின்னடைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் அதற்காகவேண்டி நமக்குள் உருவாக வேண்டிய உரிமைகளை பேசாதும் தட்டிக்கேட்காதும் வெறும் ஊமைச்சமூகமாகவும் மண்டியிட்டு வாழும் அடிமைச்சமூகமாகவும் நாம் இங்கு வாழவில்லை.

தேவையான கேள்விகளை முன்னிறுத்தியிருக்கின்றோம். அதனை அடைந்து கொள்ள தேவையான முயற்சிகளில் ஈடுபட்டும் உள்ளோம். இந்நிலை நேற்றைய வரலாறோடு முற்றுப்பெற வெண்டுமென நமது சமூக அரங்கிற்குள் இருந்து சிறியளவிலான அறிவிப்புக்கள் தலைகாட்ட இன்று ஆரம்பித்திருப்பதுதான் ஆரோக்கியமானதாகப் படவில்லை.

நடக்குமா? இல்லையா? என்கின்ற சந்தேகம் ஒருபுறமிருந்தாலும் நடக்கும் என்ற சாயலை பெருவாரியாக பெற்றிருக்கும் ஒரு விடயம்தான் இனப்பிரச்சினை தீர்வு காணப்படல் வேண்டும் எனும் அம்சம் மையம் கொண்டுள்ளது. இதற்கு நாம் வெறுமனே ஆலோசனைகள் என்ற வகையில் ஆளுக்கொரு திட்டங்களை வரைந்து கொண்டு சபைப்படுத்த முனைவதும் முறையல்ல.

இனப்பிரச்சினை தீர்வு என்ற சொல்லாடலில் உள்ளார்ந்தமான நோக்கையும் அதன் பின்புலத்தையும் சரிவர அறிந்துகொள்ளவும் அதற்குள் நமது இலக்கு நோக்கிய பயணம் எப்படி அமைய வேண்டும் என்கின்ற தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படுவதும் இன்றியமையாத ஒரு பக்கம் என்பதையும் நாம் உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் நினைப்பதற்கு வசதியான அல்லது இசைவான சிந்தனையோட்டத்தில் முடிவுகளையெடுத்து இனப்பிரச்சனையை தீர்த்துக்கொள்ள முனைகின்றோம்.

இது நல்ல விளைவுகளை நமது சமூகம் அடைந்து கொள்வதை தூரமாக்கி வைத்துவிடக் கூடும். உண்மையில் இன்றைய சூழலை நன்றாக உள்வாங்கி அதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் வகுக்க வேண்டிய நிர்ப்பந்த சந்தியில் நாம் நிற்கின்றோம்.

நமது நாட்டின் இனப்பிரச்சினை என பொதுவாக குறிப்பிட்டாலும் அது வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியது என்கின்ற யதார்த்தத்தை நம்மிற் சிலர் அவர்களுக்கு வசதியாக மறைத்துவிட்டு அல்லது அதனை மேற்கிளம்ப செய்யாது விட்டுவிட்டு பொதுவாக இலங்கை முஸ்லிம்களுக்குப் பாதகங்கள் இல்லாத தீர்வு வேண்டும் என்கின்ற ஆர்ப்பரிப்பையும் கூப்பாட்டையும் ஓங்கி ஒலித்துக்கொண்டும் இருக்கின்றனர்.

தீர்வு என்பது ஒரே தேசம் என்ற அடிப்படைக்குள்தான் காணப்படப்போகின்றது. அத்தகைய தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் மாகாண சபை முறைமை என்றாலும் அதுவும் இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இயங்கப் போகின்ற அரசியல் இயங்கியலைக் கொண்டது என்பதையும் நமது மக்கள் நிறுத்துப்பார்க்க வேண்டும். இப்படி நிதானமாக நின்று பார்த்தால் அச்சப்படுவதென்பது அர்த்தமற்றது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

நமது முக்கிய பயமென்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் முஸ்லிம்களை காரணமாக முன்வைத்தே கூறப்பட்டு வருகின்றது. அதேநேரம் இனப்பிரச்சினையில் தீர்வை பெற வேண்டிய இன்னொரு சமூகமான தமிழர்களுக்கும் இருக்கின்றது. இங்கு வித்தியாசமென்பது தமிழ் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர் இம்மாகாணங்களுக்கு வெளியே உள்ளனர். இதே எல்லைக்குள் முஸ்லிம்களில் மூன்றில் இரண்டு பங்கினர் என்பதாகும். மாறாக இங்கு காணப்படும் தீர்வு ஏனைய பகுதிகளில் வாழ்வோர்களை நலிவுறச் செய்து விடாது.

நமது நாட்டில் காணப்படும் இன்றைய ஒன்பது மாகாணங்கள் என்றாலும் சரி, அதற்கு மேலதிகமாக இன்னொரு மாகாணம் உருவாக்கப்பட்டாலும் சரி இவ்வாறு அமையும் எல்லா மாகாணங்களிலும் அதிகரித்த ஒரு சமூக மக்கள் இருப்பர். ஏனையோர் குறைந்த தொகையுடைய சமூக மக்களாக இருப்பர். இந்நிலையானது அரசியல் பலத்தை பேணுவதற்கு சமூகரீதியான சமப்படுத்துதலுக்கும் ஒரு உந்துசக்தியாக கருதப்பட முடியும்.

எது எவ்வாறிருந்தாலும் நமது உரிமைத்துவம், தேவை என்று எதுவானாலும் அது நமது தனித்துவ அரசியல் பலத்தினால் பெரும்பாலும் கைகூடிய பகுதிகள் அல்ல. ஆசிரிய கலாசாலை உருவாக்கம், மௌலவி ஆசிரிய நியமனம், முஸ்லிம் பாடசாலைகளின் தோற்றம், வானொலியில் முஸ்லிம் சேவை பிரிவு ஏற்படுத்துதல், முஸ்லிம் கலாசார அமைச்சை நிறுவுதல், தென்கிழக்கு பல்கழைக்கழகம் மற்றும் ஒலுவில் துறைமுகம் உருவாக்கம், இலங்கை

துறைமுக அதிகார சபையில் அதிகளவான வேலைவாய்ப்பு வழங்கியது என சாதித்த பக்கம் நமது தனி அரசியல் பலத்தினால் மட்டும் ஏற்பட்டதல்ல.

உண்மையில் அந்த அந்தக் காலங்களில் நமது நாட்டில் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த கட்சியின் சிங்களத் தலைவர்களுக்கும் நமது பிரதிநிதிகளுக்கும் இடையில் நிலவிய உறவின் சிநேகிதத்தன்மையினால் சாத்தியமாகியிருக்கின்றது. அத்தோடு சில நேரங்களில் நமது பங்களிப்பு குறித்த அரசாங்கத்திற்கு தேவையேற்பட்ட போது இவ்வாறு நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

இப்படியான உறவுகளுக்குள் நம்மால் சாதிக்க முடியாது நமது மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னகர்த்தப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். இந்த பட்டியல் நாம் சாதித்தவை என்பதைபார்க்கிலும் நீண்ட வரிசைகளை கொண்டதாகும். அதற்கு சில உதாரணங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

ஹஜ்ஜுக் கடமைக்குச் செல்வோரின் தொகையில் கட்டுப்பாட்டினைக் கொண்டு வந்தது, குர்ஆன் இறக்குமதியை தடுத்தது, உச்ச வரம்பு சட்டத்தின் ஊடாக நமது காணி - நிலச் சுவந்தர்களை குறைத்தது. பிரஜா உரிமை சட்டத்தின் ஊடாக நமது மக்களை வெளியேற்றியது, தீகவாவி, பொன்னன்வெளி காணிப்பிரச்சனை இன்னும் இருந்து கொண்டிருப்பது, நுரைச்சோலை வீட்டுத்திட்ட விவகாரம் கிடப்பில் போடப்பட்டிருப்பது மற்றும் 2002 காலப்பகுதியில் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தனித்தரப்பு தடுக்கப்பட்டது.

இருந்தாலும் நமது இனப்பிரச்சினை குறித்து சரியான தீர்வுக்கு கொண்டு வரும் சக்திகளாகவும் அதிகாரமுடையவர்களாகவும் இன்று காணப்படுவது நமது நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும்தான் என்பது இதுவிடயத்தில் முக்கியமான ஒரு பகுதியாகும்.

இவ்விரு சக்திகளிடமும் நமது அரசியல் தலைமைகளும் நமது மக்கள் பிரதி நிதிகளும் நமது குடியியல் சமூக புலமைப் பிரதிநிதிகளும் நெருக்கத்தையும் நல்லுறவையும் பெருக்கிக்கொண்டு நமது ஒருமித்த தீர்வாகவும் நியாயமானதுமான அதிகாரப் பகிர்வில் நாமும் பங்குதாரர்களாக சம அந்தஸ்தில் இருப்புக்கொள்ளும் வகையில் அமைந்த முறைமையை சிபாரிசு செய்து அதனை இவ்விரு சக்திகளும் ஏற்கச் செய்வதின் ஊடாகாவே நமக்கான தீர்வு எட்டப்படுவதற்கு அதிக வாய்ப்பிருக்கின்றது என்பதையும் நாம் புறந்தள்ளக் கூடாது.

தீர்வுக்கான தருணத்தை சரியாக உபயோகித்து கொள்வதற்கான செயல் திட்டத்தை நாம் முன்னெடுக்க தவறினால் பாரிய பின்னடைவுகளை நமது சமூகம் சுமக்க தவறமாட்டாது என்பதினாலும் இது குறித்த அக்கறையை நம்மீது அதிகரிக்க செய்கின்றது. அந்தவகையில் நமது முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்டமைகின்ற ஒரு மாகாணத்தின் ஊடாகவே இன்றைய

அரசியல் அதிகார பரவலாக்கத் தீர்வுப்பொதி கட்டமைக்கப்பட்டிருக்கின்றது என்பதும் நமது கவனத்திலிருந்து மாறிவிடக்கூடாது.

தென்கிழக்கு அலகு என்ற பெயரும் அதன் எல்லைகள் எவ்வாறு அமைகின்றது என்பதற்கு அப்பால் இதுவொரு மாகாணம் என்ற அந்தஸ்தில் உருவாக்கப் படுகின்றதா என்பதுதான் இதில் மிக முக்கியமானது. அப்போதுதான் மாகாண ரீதியான தீர்வில் நமது மக்களும் சமாந்திரமான முடிவை எய்தியவர்களாக எம்மை அடையாளப்படுத்தி வைக்கும்.

மாறாக, கிழக்கு மாகாணத்தின் கூடுதலான பகுதிகளை வடக்கு மாகாணத்துடன் இணைத்து அதற்கு கீழ்இயங்கும் வகையில் அல்லது மத்திய அரசின் கீழ் இயங்குகின்ற ஒரு உப அலகுபோன்று இந்த தென்கிழக்கு அலகு என்பது அல்லது கரையோர மாவட்டம் என்பது உட்கிடையாக நிறைவேற்றுப்படுவதற்கு நமது சமூகம் சார்ந்த பொறுப்புடையவர்கள் நமது நாட்டிலோ அல்லது நமது நாட்டுக்கு வெளியிலோ இணக்கம் தெரிவித்திருந்தாலும் அதுவொரு நிரந்தர தீர்வாகவோ நல்லிணக்கமானதாகவோ நீடிக்க முடியாத இடரை சந்திப்பதில் இருந்து தவிர்க்க முடியாது போய்விடும்.

எவ்வாறான எல்லைகளை கொண்டதாக முஸ்லிம் மக்களை மையப்படுத்தி தரப்படுகின்ற அலகு என்பது மாகாண அந்தஸ்தையும் அதிகார பரவலாக்கலை நேரடியாக பெறுவதற்கும் உரித்துடையதாக இருக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை எந்த காரணத்திற்காகவும் நெகிழ்ச்சி தன்மைக்கு உட்படுத்தாது மிகவும் வலிமையுடன் வலியுறுத்தப்பட வேண்டும். இதற்கு மாறான எந்த வழிகளிலும் நமக்கான தீர்வு சரியாக அடையப்பட முடியாதது என்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

நமது அரசியல் இயலாமை குறித்து நாம் அசைபோட்டுப்பார்த்து அதனை பலப்படுத்தும் பக்கம் நமது கவனக்குவிப்பை செலுத்தும் பொறிமுறைக்கு நமது தலைமைகளும் நமது மக்கள் அரசியல் பிரதிநிதிகளும் குடியியல்சமூக புலமைச் சமூகமும் முன்வரவேண்டும். அவ்வாறு இயங்குவதற்கு இவர்களை வடிவமைக்க வேண்டிய கடப்பாட்டை மக்களாகிய நாம் முன்னகர்த்தி கொள்வதில்தான் நமது வெற்றியும் உரிமைத்துவமும் காப்பாற்றப்படுவது தங்கியிருக்கின்றது.

*02.03.2016* - நவமணி

# இலங்கையின் ஆட்சித்துறையில் அமைச்சரவையின் வகிபாகம் என்ன?

நமது நாட்டில் 1978ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பின் எட்டாவது அத்தியாயம் அமைச்சரவை பற்றிப்பேசுகின்றது. இவ்வமைச்சரவை யின் வகிபாகம் குறித்து எமிற்சிலர் பிழையாக விளங்கி வைத்திருப்பதுடன், அதனை அர்த்தம் நிறைந்த கருத்தாடல்களாக வெகுஜன ஊடகங்கள், முகநூல்கள், இணையத்தளங்கள் என எழுதி பரப்புரையும் செய்து வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சரவை குறித்து தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டு,பிழையான பிரசாரதுக்கு உட்பட்டவைகளில் மிகவும் முக்கியமான மூன்று விடயங்களை நாம் இங்கு அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது.

(1) ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட இராஜாங்க அமைச்சர் முறை தற்போதைய தேசிய அரசாங்கத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(2) அரசியலமைப்புக்கான 19வது திருத்தச்சட்டத்தின் படி இராஜாங்க அமைச்சர் என்பவர் அதிகாரத்திலும் கடமையிலும் பிரதி அமைச்சருக்கு அடுத்த படியான நிலையிலேயே செயற்படக்கூடியவர்.

(3) பிரதி அமைச்சர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு பதிலாக நியமிக்கப்படுபவர்.

நமது நடைமுறை அரசியலமைப்பின்படி “குடியரசு அரசாங்கத்துக்கு வழிகாட்டுவதும் அதனை கட்டுப்படுத்துவதும் அமைச்சரவையின் கடமைகளாகும். அது பாராளுமன்றத்திற்கு கூட்டாக இணைந்து பொறுப்புடன் செயற்படு வோதோடு, பாராளுமன்றத்திற்குள் எழும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் வேண்டும்” என்கின்ற நோக்கைக் கொண்டதாகும்.

நமது அரசியலமைப்பு மூன்று வகையான அமைச்சர்களை அறிமுகம் செய்கின்றது. அவையாவன,

(1) அமைச்சரவையின் அமைச்சர்களாக நியமிப்பது உறுப்புரை 44.1 (அ),

(2) அமைச்சரவையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கலாம். உறுப்புரை 45.1(அ),

(3) அமைசரவையின் அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதற்கு அவர்களுக்கு உதவுவதற்கென பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்கள் நியமிக்கலாம்.உறுப்புரை 46.1. இந்த நியமனங்கள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுவதாகும்.

இதில் உறுப்புரை 45.1(அ), குறிப்பிடும் அமைச்சரவை அந்தஸ்து இல்லா அமைச்சர் (non cabined) எனும் பதத்தையே நமது அரசியலமைப்பு 1978இல் குறித்துரைக்கின்றது.மாறாக இராஜாங்க அமைச்சர் எனும் சொல்லை குறிக்கும் பதப்பிரயோகம் இங்கு இடம்பெறவில்லை

1

இன்றைய தேசிய அரசாங்கத்தில் பாவிக்கப்படும் இராஜாங்க அமைச்சர் என்ற பதம் அடிப்படை அரசியலமைப்பில் நேரடியாக காணப்படவில்லை.மற்றும் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 19வது திருத்தத்திலும் இராஜாங்க அமைச்சர் என்ற சொற்பிரயோகமோ,அல்லது ஒரு பிரிவோ எனவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக அமைச்சரவை அந்தஸ்த்தில்லா அமைச்சர் என்றே குறிப்பிடுகின்றது.

நமது அரசியலமைப்புக்கு 2015ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட பத்தொன்பதாம் திருத்தமானது முன்னைய அத்தியாயம் எட்டாவதை முழுமையாக நீக்கம் செய்துவிட்டு, புதிய அத்தியாயமாக எட்டாவதை முன்வைக்கின்றது. இதன் படியும் மேலே விபரிக்கப்பட்ட மூன்று வகையான அமைச்சர்களைப்பற்றியே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இன்று வரை அமைச்சர்கள் மூன்று வகைப்படும் என்பதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை,(இதற்குப்பின்னர் இக்கட்டுரையில் இடம்பெறும் உறுப்புரை இலக்கங்கள் யாவும் 19வது திருத்தத்தின் படியானது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்)

உறுப்புரை 44.1 “பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து. அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கலாம்.” ஆகவே இராஜாங்க அமைச்சர் என்ற சொல்லை நமது அரசியலமைப்பு அறிமுகம் செய்யவில்லை என்பது மிகத்தெளிவான ஒன்று.

அவ்வாறாயின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இராஜாங்க அமைச்சர் முறை என்ற கதையாடல் எப்படி வந்ததென்று நோக்கினால், 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா

அமைத்த அமைச்சரவையின் அமைச்சின் ஒன்றின் பெயர் state ஆகும். இது Minister of state என அழைக்கப்பட்டது.இதுவே அன்றைய இராஜாங்க அமைச்சர் என்ற சொல்லாடல் கையாள்தல் இடம்பெற்றது.

அதாவது அமைச்சரவை அந்தஸ்துள்ள cabined அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட அமைச்சின் பெயரே இந்த state-இராஜாங்கம் ஆகும்.அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களில் ஒரு கல்வியமைச்சு,விவசாய அமைச்சு,காணி அமைச்சு என்றிருப்பது போன்ற ஒன்றே அன்றைய இராஜாங்க அமைச்சு என்பதாகும்.

இன்று இராஜாங்க அமைச்சர் என்று அழைக்கப்படுபவர்கள் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களே ஆகும். இச்சொல்லாடல் நமது அரசியலமைப்பில் கூறப்பட்டது அல்ல மாறாக நடைமுறை ரீதியானதாகும்.

கடந்த 1989இல் ஆர்.பிரேமதாசா ஜனாதிபதியாக வந்து அமைக்கப்பட்ட அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களை இராஜாங்க அமைச்சர்கள் என்ற பெயரால் அழைத்த வரலாற்றைக் காண்கின்றோம். இதுதான் அமைச்சரவை அந்தஸ்தில்லா அமைச்சர்களை இராஜாங்க அமைச்சர்கள் என அழைத்த முதற்தடவையாகும். இதற்கு பின்வருவோர் இராஜாங்க அமைச்சர்களாக இருந்தமை ஆதாரமாகும்.

பெருந்தோட்ட கைத்தொழில் எம்.எல்.எம்.அபுசாலி,வீடமைப்பு இம்தியாஸ் பாகிர் மாக்கார், 1989இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் பின்னர் 1990இல் சுகாதாரம் ஜாபிர் ஏ.காதர்,1990இல்முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் ஏ.எச்.எம்.அஸ்வர்,போக்குவரத்து யூ.எல்.எம்.பாறுக்,துறைமுகங்கள் கப்பல்துறை எம்.ஈ.எச்.மஹ்ருப் போன்றோர் இதற்கு உதாரணமாக நாம் பார்க்கலாம்.

ஆகவே இராஜாங்க அமைச்சர் முறைமை என்பது 1978இல் நடைமுறையில் இருக்கவில்லை.அது அமைச்சரின் ஒரு வகையாக இருக்கவுமில்லை.மாறாக ஓர் அமைச்சின் பெயராகவே அது விளங்கியது.இவற்றை தவறாக புரிந்ததினால் ஏற்பட்ட தடுமாற்றமாகவே இக்கதையாடலைப் பார்க்க முடிகிறது.

**2**

அரசியலமைப்புக்கான 19வது திருத்தச் சட்டத்தின் படி இராஜாங்க அமைச்சர் என்பவர் அதிகாரத்திலும் கடமையிலும் பிரதி அமைச்சர்களுக்கு அடுத்த படியான நிலையிலேயே செயற்படக் கூடியவர் என்ற பரப்புரை வெறும் உளறல் கூற்றாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நமது அரசியலமைப்பு மூன்று விதமாக அமைச்சர்களை வரையறுத்துள்ளது. இவற்றில் எந்த அமைச்சரை விட எந்த அமைச்சர் அந்தஸ்திலும் கடமையிலும்

அதிகாரத்திலும் உயர்ந்தவர் என்ற பாகுபாட்டை வெளிப்படுத்துவதாக இல்லை.மாறாக மூன்று விதமான அமைச்சர்கள் இலங்கை குடியரசின் ஆட்சித்துறையில் பதவி வகிக்கின்றனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

ஆனால் பிரதி அமைச்சருக்கு புறம்பாக அமைச்சர்கள் இரு வகைப்படுவார்கள் என அரசியலமைப்பு முன் வைக்கின்றது.முதலில் அமைச்சரவை அமைச்சர் களையும் இரண்டாவது அமைச்சரவை அந்தஸ்து இல்லா - இராஜாங்க அமைச்சர்களையும் பதிவு செய்துள்ளது இதன் பிற்பாடுதான் மூன்றாவதாக அமைச்சரவை அமைச்சர்களுக்கு உதவி புரிவதற்காக பிரதி அமைச்சர் என்ற வகையினர் பற்றி எடுத்துக் காட்டுகின்றது.இதில் அடுத்த படி என்று பாகுபடுத்துவற்தகு எந்த நேரடி பதப்பிரயோகங்களையும் நமது அரசியல மைப்பில் காணக்கூடியதாக இல்லை.

பொதுவாக அமைச்சர்களின் வகையிரண்டையும் முதலில் குறிப்பிட்ட பின்னர், பிரதி அமைச்சர் பற்றி எடுத்தாள்வதினால் அமைச்சர்களுக்கு அடுத்த படியா கத்தான் பிரதி அமைச்சர்களின் அந்தஸ்ட்டு நோக்கப்பட முடியும் என்பது வெளிப்படையானது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கான அமைச்சுக்களை ஜனாதிபதி குறித்தொதுக்கி வழங்குகின்றார்.உறுப்புரை 43(1)அவ்வாறுதான் அமைச்சரவை அந்தஸ்து இல்லா அமைச்சர்களுக்கும் அவர்கள் பொறுப்பில் இருக்கவேண்டிய அமைச்சுக்களினதும் விடயங்களிலும் மற்றும் பணியினதும் குறித்தொதுக்குதல் நடைபெறுகின்றது. உறுப்புரை.44(2)

பிரதி அமைச்சுக்களின் உதவியின்றி அமைச்சரவை அந்தஸ்து இல்லா அமைச்சர்கள் தமது கடமைகளை செய்யக்கூடியதாக அரசியலமைப்பு இடம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.அதுமட்டுமன்றி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு பதில் கடமையாற்றும் தகுதி இவர்களுக்கும் உண்டு.

இதனை உறுப்புரை 44.(5) முன்மொழிகின்றது இதற்கு ஏற்பதான் தற்போதைய தேசிய அரசாங்கம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு இராஜாங்க அமைச்சர்களை வழங்கினால், அவர்களுக்கு பிரதியமைச்சர்கள் இல்லாதும், பிரதி அமைச்சர்கள் வழங்கப்பட்டால் அவர்களுக்கு இராஜாங்க அமைச்சர்களை நியமிக்காதும் விட்டுள்ளது.

பிரதி அமைச்சர் என்றாலும் கூட அவர் பதில் கடமையாற்றுவதற்குரிய தகுதியை உறுப்புரை 45.(2) முன்வைக்கின்றது. இங்கு பதில் கடமையாற்றுவது என்பது வெறுமென அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரின் பிரதி அமைச்சர் என்ற அடிப்படையில் அல்ல. மாறாக அதிகாரம் கையளிக்கப்பட்டு அது வர்த்த மானியில் அறிவிப்பு செய்யப்பட்டதன் பின்னர் சத்தியப் பிரமாணம் செய்து பதில் கடமையாற்ற முடியும்.

இவ்வாறு பதில் கடமையாற்றுவதற்கு அனுமதிக்கப்படும் போதுதான் கடமையாற்ற முடியும் தவிர நேரடியாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கான பிரதி அமைச்சர் என்பதற்காக வேண்டியோ,அமைச்சரவை அமைச்சுக்குரிய இராஜாங்க அமைச்சர் என்பதற்காகவோ பதில் கடமையாற்ற முடியாது என்பதையும் இது முன்னிறுத்துகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் அதிகாரத்திலும் கடமையிலும் பிரதி அமைச்சரை விட அமைச்சரவை அந்தஸ்து இல்லா அமைச்சர்கள் சற்று உயர்ந்து காணப்படுகின்றனர்.ஆகையால் 19வது திருத்தத்தின் படி இராஜாங்க அமைச்சர் என்பவர் அதிகாரத்திலும் கடமையிலும் பிரதி அமைச்சருக்கு அடுத்தபடியான நிலையுடயவர் என்ற கூற்றில் எவ்விதமான உண்மையுமில்லை.

3.

உண்மையில் பிரதி அமைச்சர்கள் அமைச்சரவை அமைச்சர்களுக்கு பதிலாக கடமையில் ஈடுபடுவதற்கு நியமிக்கப்படும் ஒரு பதவி நிலையல்ல. மாறாக உதவி புரிவதற்குத்தான்.இதனை உறுப்புரை 45.(1) "....அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளை புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்."எனக் குறிப்பிடுகின்றது.

பிரதி அமைச்சர்கள் நேரடியாக பதில் கடமையாற்றுபவர் மற்றும் உதவி புரிபவர்கள் என்ற அடிப்படையில் இராஜாங்க அமைச்சர் என அழைக்கப்படும் அமைச்சரவை அந்தஸ்தில்லா அமைச்சர்களை விட மேலானவர்கள் என்று குறிப்பிடுவது முறையல்ல.ஏனனில் பதில் கடமை என்பது பிரதி அமைச்சராயினும் கையளிக்கப்படும் போதுதான் நிறைவேற்ற முடியும் என்பதை உறுப்புரை 45.(2)எடுத்துக் காட்டுகின்றது.

அமைச்சரவையின் ஓர் உறுப்பினராக ஜானாதிபதி இருப்பதன் ஊடாக அமைச்சரவையின் தலைவராகவும் அவர் உள்ளார். பதில் கடமையாற்றாத அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களை அமைச்சரவை கூட்டத்துக்கு கலந்து கொள்ளும்படி அனுமதிக்க முடியும் இதனால்தான் கடந்த சில அமைச்சரவை கூட்டங்களில்அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்கள் பார்வையாளர்களாகவும் பங்கெடுத்த நிலையும் காணப்படுகின்றது.

*23.10.2015 - தமிழ் மிரர்*

# நாடாளுமன்றப் பணிகளை மறந்து நாணயத்தின் மீது சவாரி செய்யும் நமது பிரதிநிதிகள்

"அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூற்றி இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமொன்று இருத்தல் வேண்டும்". (அரசியலமைப்பு அத்தியாயம் 10, உறுப்புரை 62.1)

நமது நாட்டின் நடைமுறை அரசியலமைப்புக்கு 1988 மே மாதம் 24ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்கான பதினான்காவது திருத்தச்சட்டம் மேற்படி தெரிவிக்கின்றது. இந்த திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் நூற்றுதொன்னுற்றாறு உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும் என்றே குறிப்பிடப்பட்டிருந்தன.

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நமது நாட்டுக்கான முதலாவது குடியரசு அரசியலமைப்பின் படி, சட்ட ஆக்கத்துறையை ஓரங்க சபையாக மாற்றி அதற்கு 'தேசிய அரசு பேரவை' எனப் பெயரிடப்பட்டது. இதுவே அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாக விளங்கியது. இவ் அரசியல் திட்டத்திற்கு முன்னர் நடைமுறையில் இருந்த சோல்பரி யாப்பில் சட்டமியற்றும் துறையான பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை எனும் இரண்டு சபைகளைக் கொண்டிருந்தது.

இதனை நமது நாட்டில் 1978இல் கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு சட்டமியற்றும் சபையாக இருந்த தேசிய அரசுப்பேரவை எனும் பெயரை மாற்றி முன்னர் இருந்ததைப்போன்று பாராளுமன்றம் என பெயரிடப்பட்டது.

இதனூடாக நாடாளுமன்றத்தின் முக்கிய பணிகளில் சட்டமியற்றுதல் முக்கிய பணியும் முதன்மையானதும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. மற்றும் கடந்த காலத்தையும் உள்ளடக்கக் கூடிய வகையில் சட்டங்களை இயற்றும் அதிகாரத் தினை கொண்டுள்ளது. எந்த சட்டத்தையும் இயற்றும் அதிகாரம் நாடாளு மன்றத்துக்கு உண்டு. இதனடிப்படையில் இதன் சட்டவாக்க செயற்பாட்டுக்கு நேரடியாக எந்தத் தடையும் கிடையாது.

'கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன் கொண்ட சட்டங்களை (அரசியல் அமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும், அல்லது அரசியல்

அமைப்புக்கு ஏதேனும் புதிய ஏற்பாட்டை சேர்க்கும் சட்டங்கள் உட்பட்ட சட்டங்களை) ஆக்குவதற்குப் பாராளுமன்றம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்'. (அரசியலமைப்பு அத்தியாயம் 10,உறுப்புரை 75).

இவ்வாறு கடந்த காலத்தையும் உள்ளடக்கி சட்டமியற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு இவ்வுறுப்புரை நல்கிய போதிலும், அதில் விதிவிலக்காக எது குறித்து கடந்த காலத்தை உள்ளடக்கியதாக சட்டமியற்றக் கூடாது என்பது பற்றியும் மேற்படி உறுப்புரையில் பின்வருமாறு விளக்கம் தருகின்றது.

75.1. ஆயின். பாராளுமன்றமானது பின்வரும் சட்டங்களை ஆக்குதல் ஆகாது., அதாவது:-

(அ). அரசியலமைப்பை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இடைநிறுத்தி வைக்கின்ற ஏதேனும் சட்டத்தை, அல்லது

(ஆ). இயற்றப்படுகின்ற சட்டமானது ஏலவே உள்ள அரசியலமைப்பை மாற்றீடு செய்கின்ற ஒரு புதிய அரசியலமைப்பை இயற்றினால் ஒழிய, அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குகின்ற ஏதேனும் சட்டத்தை ஆக்குதலாகாது.

கடந்த காலத்தையும் உள்ளடக்கி சட்டமியற்றும் பண்பைப் பொறுத்தவரை அரசியல் பழிவாங்கலுக்கும் வழிவகுக்க முடியும் என்ற விமர்சனம் இது குறித்த இச்சட்டம் இயற்றிய அன்றைய காலகட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு இசைவாக முன்னர் ஆட்சியில் இருந்தவர்களை பழிவாங்கும் வகையில் சட்டங்களை ஏற்றும் முயற்சிகளில் ஈடுபடும் அபாயம் உள்ளது என அச்சம் கொண்டவாறு சில நகர்வுகள் முன்னெடுக்கப்படும் சாத்தியங்களும் இன்று காணப்படாமலும் இல்லை.

என்றாலும் அரசியலமைப்புடன் தொடர்புடைய மசோதாக்களைப் பொறுத்தவரை அம்மசோதா அரசியலமைப்புக்கு முரணானதா இல்லையா என்பதை ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உண்டு. குறிப்பிட்ட மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட முன்னரே உயர் நீதிமன்றம் அது தொடர்பான தீர்ப்பினை அளித்தல் வேண்டும்.

பாராளுமன்றம் தனது சட்டவாக்கத் தத்துவத்தை துறத்தலோ அல்லது வேறு நிறுவனங்களிடம் கையளித்தலோ கூடாது என்றும் அரசியலமைப்பு திட்டவட்டம் செய்கின்றது. பதிமூன்றாவது திருத்தத்தின் ஊடாக சில சட்டமியற்றும் அதிகாரத்தினை மாகாண சபைக்கு பகிர்ந்தளித்தும் உள்ளது. அதே நேரம் நாடாளுமன்றத்துக்கு புறம்பாக ஜனாதிபதி மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலமும் நாட்டுக்கு தேவையான சட்டங்களை உருவாக்க முடியும் என்ற அனுமதியையும் முன்வைத்துள்ளது.

மக்களின் இறைமை பின்வரும் விதமாகப் பிரயோகிக்கப்படவும் அனுபவிக் கப்படவும் வேண்டும்:-

(அ). மக்களது சட்டமாக்கற்றற்றுவம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். (அரசியலமைப்பு அத்தியாயம் 1, உறுப்புரை 4.அ)

ஆகவே, பாராளுமன்றத்தின் முக்கிய பணிகளில் சட்டமியற்றுதல் முதன்மை இடத்தை வகிக்கின்றது. இதனால் சட்டசபைக்கு நமது பிரதிநிதிகளாக அனுப்பி வைக்கப்படும் உறுப்பினர்களிடம் சட்டம் பற்றி அறிவு அதுகுறித்த விரிவான தேடல்கள் அவசியப்படுகின்றது. இதற்கு இசைவானவர்களை நாம் நமது நாடாளுமன்ற பிரதிநிதிகளாக அனுப்பிவைக்கின்றோமா என்பது மிக முக்கியமான பக்கமாகும்.

இப்படி நாடாளுமன்றத்தில் முக்கியமான பக்கங்களில் நமக்கான குரலாக செயற்படும் நமது பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கும் பொறுப்புடன் முஸ்லிம் மக்களாகிய நாம் செயற்பட வேண்டிய கடமைகளை உதாசீனம் செய்து விடுவோமானால், நாடாளுமன்றத்தின் ஊடான பல சட்டங்கள் நம்மை நசுக்கிவிடும் பரப்புக்கு இட்டுச்சென்று விடும். இதன் ஆட்படுத்துதலில் இருந்து நாம் விடுபடுவதும் பின்னர் கஷ்டமாகிவிடும். இதேபோன்ற பல நிகழ்வுகளையும் நாம் சந்தித்து இருக்கின்றோம்.

கடந்த கால நிகழ்வுகளை முன்னிறுத்தி அல்லது அதனை நமக்கான பாடங்களாக எடுத்துக்கொண்டு மிகவும் வலிமைப்படும் வகையில் நமது சட்டமன்றத்துக்கு நமது பிரதிநிதிகளாக யாரை அனுப்பி வைப்பதன் மூலம் நமது சமூக நலன்கள் வெற்றிகொள்ளப்படல் தங்கியிருக்கின்றது என்கின்ற முன் ஜாக்கிரதை செயற்பாட்டையும் நமக்கு அவசியப்படுத்துகிறது.

உண்மையில் நமக்கும் நாட்டிற்கும் நலன்வகிக்கும் வகையில் நமது நாட்டு அரசாங்கம் உருவாக்கப்படவேண்டும் என்கின்ற கருத்தாடலில் நாம் இன்று பெரும்பாலும் சார்ந்து நின்றாலும் அதனை செயல் வடிவமாக்கி பயன்களை அடைந்து கொள்வதில் குறுக்கீடு செய்யும் காரணிகளின் தோற்றப்பாட்டை சரியாக அடையாளம் கண்டு அதிலிருந்து விடுபடுவதற்கான முன்முயற்சிகளும் இன்று தேவைப்படுவதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

நமது நாட்டில் பெரிய, சிறிய அரசியல் கட்சிகள் என பல இருக்கின்றன. தேர்தல்களில் போட்டியிடுவதற்காக கட்சிகளின் தேவை மறுக்க முடியாது. அந்த வகையில் குறித்த ஒரு வேட்பாளர் தனது தேர்தல் களத்தை சந்திப் பதற்காக கட்சியினுடைய தேவையின் ஈடுபாட்டை கைக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது..

இதற்காக வேண்டி தேர்தல் காலங்களில் வேட்பாளர்களாக நிற்பதற்காக வேண்டி கட்சிகள் நடத்தும் வேட்பாளர் நேர்முக பரீட்சைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது அத்தகைய சூழல்களில் தங்களது திறமைகளை, அனுபவ முதிர்ச்சிகளை, ஆளுமைப்பாங்குகளை வெளிப்படுத்தினாலும் கூட வேட்பாளராக நிறுத்துவதற்கு நமது மக்கள் செல்வாக்குடைய பல கட்சிகள் வேறொரு வகையில் குறித்த வேட்பாளர்களை கையாள்வதற்கு தயாராகுகின்ற நிலைமையும்தான் வெகுவாக நமது நாட்டு அரசியல் அரங்கில் பரவிக் காணப்படுகின்றது.

தேர்தலில் போட்டியிட விரும்பும் அபேட்சகர்களிடம் இருந்து கட்சியின் தேர்தல் செலவுக்காக எவ்வளவு பணம் ஒதுக்க முடியும் என்பதையும் அவரது தேர்தல் வெற்றியை உறுதி செய்வதற்காக எவ்வளவு பணத்தை, பொருளை செலவிடுவார் என்பதையும் உள்வாங்கிக்கொண்ட பின்னர்தான் குறித்த நபரை வேட்பாளராக களமிறக்க கட்சிகள் விரும்புகின்ற ஒரு நகர்வும் நமது நாட்டு அரசியல் களத்தில் காணப்படுகின்றது.

ஒரு கட்சியின் வேட்பாளராக நிற்பதற்கு பணப்பலம் முதல் தகுதியாக இன்று மாற்றம் பெற்றிருக்கின்றது. இதனைச் சுற்றியே அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் செயற்பாடுகள் இயங்குதளத்தை அடைந்திருக்கின்றது. இது மக்கள் நலன் சார்ந்த அரசியல் களத்தை வேறொரு திசையை எய்திக் கொள்வதற்கு வழிவிடுவனவாகவே அமைய முடியும்.

உண்மையில் ஒரு வேட்பாளருக்கு மக்கள் செல்வாக்கினை அதிகரிக்கச் செய் வதற்கு மக்கள் ஆதரவினை கூட்டும் பக்கமான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மனோவியல்புகளைச் செய்வதற்கு பதிலாக, எவ்வளவு பணத்தை செலவளித்து மக்கள் ஆதரவை பெருக்கிக்கொள்ள முடியும் என்கின்ற கணக்கை அசைபோட்டுப்பார்க்கும் திசையில் நமது பிரதிநிதிகளும் திரும்பி விடுகின்றனர்.

அது மாத்திரமன்றி தான் இன்று எதிர்கொள்ளும் தேர்தலில் தனது வேட்பாளர் பதவியை உறுதி செய்வதற்கு கட்சி மற்றும் தேர்தல் களத்தில் மக்களுக்காக செலவிடும் தொகைப்பணத்தை மட்டும் ஆயத்தப்படுத்துகின்றனர் என்றால், அவனது அடுத்த தேர்தலுக்கு இன்று தேவைப்படும் பணத்தை விடவும் அதிகரித்த பணத்தேடல் வேண்டும் என்கின்ற கருத்தினுள் அகப்பட்டு அதனைக் குறியாக வைத்து பணத்தேடலை ஆழமாக வசீகரிக்கும் இயல்புக்குள் தன்னை வசப்படுத்திக்கொள்ளவே முனைவான்.

இதனால் அவனது அரசியல் நகர்வு என்பது மக்கள் நலன் சார்ந்தும் கட்சி கரிசனை சாய்ந்தும் தன்னை உருவகப்படுத்திக்கொள்வதற்கு பதிலாக அடுத்து வரும் தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு பணம் ஒன்றே போதுமானது என்ற எண்ணக்கருவுக்கு உட்பட்டு பணத்தை எந்த வழியிலேனும் திரட்டி குவித்துக்கொள்ளும் மையத்தை நோக்கிச் செல்வதை குறித்த நபரிடம் மேலோங்கச் செய்துவிடும்.

இத்தகைய சூழல்கள் பெருகிக்காணப்படும் இன்றைய அரசியல் அரங்கில் நாம் எதிர்பார்க்கின்ற அல்லது பேசு பெருளாக்கி கருத்தாடல்களை விரித் திருக்கும் மக்கள் நலன்சார்ந்த நீதி, நியாயங்கள், அபிவிருத்தி போன்ற கூறுகளைக் கொண்ட மக்களாட்சி தோன்றுவதை எப்படி சாத்தியமாக்கி வைக்கும்?.

நல்ல திட்டமிடல்கள் செயலுருவாக்கம் பெறுவதற்கு தேவையான பொறிமுறைச் சூழல்கள் நிலவவேண்டும். அவ்வாறு இல்லாது, வெறும் வார்த்தையில் அல்லது எழுத்தில், பேச்சில் இருப்பதனால் மட்டும் நிறைவெய்திவிடாது. மாறாக அதற்கான செல்நெறிகள் வகுக்கப்பட்டு அதற்குள் பயணிக்கும் நிலையை முதலில் அரசியல் கட்சிகள் கடைபிடிக்க முன்வர வேண்டும்.

இப்படியான இசைவுகள் நீட்டப்படுகின்ற போதுதான் அரசியல் களத்தில் வேட்பாளர்களாக தம்மை நிலை நிறுத்துவதற்கு நல்லெண்ணம் கொண்ட வர்களும் மக்கள் சேவை புரியவேண்டும் என்ற திடத்தை கொண்டவர்களின் அரசியல் பிரவேசம் முன் நகர்த்தப்படும். இல்லையேல் கட்சிகளின் பிழையான எடுகோள்களின் பின்னால் அதே துர்க்குணத்தை விரும்புவோர்களினால்தான் நிரப்பப்படும் கைசேதமான நிலைமையே நமக்கு நிலைப்பேறாக்கி வைக்கும்.

நமது இன்றைய நாட்டுச் சூழலில் கையூட்டலுடன் தொடர்பில்லாத அரசியல் வாதிகளும் ஊழல், மோசடிகளில் ஈடுபடாத நமது பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் என்கின்ற எமது நியாயபூர்வமான எதிர்பார்ப்புக்கள் யாவும் வெறும் கதையாடல்களாகவும் கருத்தாடல்களாகவும் காணப்படுவதற்கு முக்கிய காரணியாக நம்மத்தியில் காணப்படும் பல கட்சிகளின் அனுகுமுறைமைகளும் அதற்கு இசைவாக வேட்பாளர்களும் தம்மை நகர்த்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி இருப்பதும் ஆகும்.

அப்படியாயின் நமது நாட்டு அரசியல் சூழலில் மாற்றம் என்பது நமது அரசியல் கட்சிகளின் வேட்பாளர் தெரிவிலும் அபேட்சகர்களை களமிறக்கும் அனுகுமுறை மைகளிலும் மாற்றங்களுக்கான பொறிமுறைகள் திட்டமிடப்படுவதை வரையறுக் கின்றது. இதில் ஏற்படும் தளர்ச்சியும் தொய்வும்தான் நமது மக்கள் மீது சுமர்த்தப்படுகின்ற சுமைகளாகவும் அமைகின்றது. இந்நிலை அகற்றப்படு வதற்கான முன்னகர்ச்சிகள் துரிதமாக கட்டமைக்கப்படுவதை இது வலியுறுத்து கின்றது.

அதேநேரம் நமது நாட்டு மக்களில் குறிப்பிட்ட தொகையினர் தமது வாக்கு ரிமையின் பலத்தையும் அதன் அடிப்படைகளையும் உதாசீனம் செய்துவிட்டு, அந்தத் தருணத்தில் தேவைப்படும் அற்பத் தேவைகளை மட்டும் நிறைவுசெய்து கொள்ளும் வகையில் குறித்த வேட்பாளர்களால் வழங்கப்படும் அன்பளிப்புகளை வாரி எடுத்துக்கொண்டு அதற்கு தமது வாக்குகளை கைமாறாக செலுத்துகின்ற ஈனச்செயற்பாட்டை பெருமிதமாக செயற்படுத்தியும் வருகின்றனர்.

இத்தகைய மக்களினாலும், நாம் நியாயமாக, நீதியாக, நேர்மையான மக்கள் சேவையை குறியாகக்கொண்ட நல்லாட்சி துலங்குவது தூரமாகி விடுகிறது. அதேநேரம் அரசியல் பிரதிநிதிகளாக மாறுவதற்கு களமிறங்க விரும்பும் வேட்பாளர்கள் மக்களை வளைத்துப்பிடிக்கும் பக்கமே தமது கவனங்களை மிகுதியாக செலுத்தவும் முன்வருகின்றனர்.

இப்படியான இழிநிலைகளும் பிழையான அனுகுமுறைமைகளும் எமது அரசியல் கட்சிகளிடமும் நமது வாக்காள மக்களிடமும் பெரிதாக வளர்க்கப்பட்டு வருவதினால் நாம் காணத்துடிக்கும் மாற்றங்கள் எதுவும் அடைவதில் இருந்து பின்னடைவை நோக்கி நகரத்தொடங்குவதன் ஒரு கோணமாகும்.

இதன் இன்னொரு விகார வடிவமாகத்தான் நமது சட்டமன்றமான நாடாளு மன்றத்தில் ஆற்றுப்படுத்த வேண்டிய பணிகள் குறித்த ஆளுமைகளை கொண்டவர்களை நமது பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கும் தெரிவுமுறைமையிலும் ஒரு பின்னோக்கிய நகர்வையே இயலுமாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

எதிர்காலத்தில் தேர்தல் முறைமையில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கும் தொகுதி ரீதியான முறைமையில் கூட கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்துவிடும். ஒரு கட்சி ஒரு தொகுதியில் ஒரு வேட்பாளரை நிறுத்துவதனால் வேட்பாளரைப் பார்க்கினும் கட்சிகளே முக்கியத்துவம் பெறும். இதனால் கட்சிகள் வேட்பாளரிடம் எதிர்பார்க்கும் கட்சித்தேர்தல் செலவுகளிலும் கேள்விகள் அதிகரிக்கும்.

அதிலும் மக்கள் செல்வாக்கு கொண்ட கட்சி என்றால் வேட்பாளரின் வெற்றியும் நிச்சயிக்கப்பட்டதாக இருக்கும். அதனாலும் கட்சிக்கான மதிப்பும் அதற்கான வேட்பாளரின் சன்மானமும் அதிகரிக்கப்பட்டதாகவும் ஆகிவிடும் அபாயமும் இதில் பெருகிவிடுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமாகும்.

எது எவ்வாறிருந்தாலும் நமது நாடாளுமன்றத்தின் முக்கிய பணியான சட்ட மியற்றும் அதிகாரத்தின் ஊடாக மக்களைப் பாதிக்கும் வகையில்கூட சில சந்தர்ப்பங்களில் சட்டமியற்றப்படும் நிலை ஏற்படுவதுண்டு. அதனை தட்டிக் கேட்கவும் அல்லது சில திருத்தங்களை முன்மொழிந்து அதனை ஏற்கச் செய்வதில் நமது மக்கள் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டாத பல சந்தர்ப்பங்களையும் நமது நாடாளுமன்றம் கண்டிருக்கின்றது.

நமது நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் அவரவர் பிரதிநிதிகளாக அங்கம் வகிப்பவர்கள் தமது பொறுப்புக்களை சரியாகவும் செவ்வையாகவும் நிறைவேற்றுவதற்கு தம்மை தயார் படுத்த கூடியவர்களை மக்களாகிய நாம் பாராளுமன்றத்திற்கு தெரிந்தனுப்பும் நிலையினை தோற்றுவிக்காத வரை நாடாளுமன்றத்தின் முக்கிய பணி நிறைவேற்றப்படாதும் நாணயத்தின் மீதான அரசியல் உச்சத்தை அடைந்து அதற்கு இரையாகிப்போகும் கட்சிகளையும் பிரதிநிதிகளையுமே நமது நாடு நிலையாக சுமந்து நிற்கப்போவது மட்டும் உறுதியான சமாச்சாரமேயாகும்.

*16.03.2016 - நவமணி*

## தேசியப்பட்டியல்:

## சட்ட ஒழுங்கும் சாதிக்கும் தலைமைகளும்

நமது நாட்டின் நடைமுறை அரசியல் அமைப்பு 1978இல் கொண்டுவரப்பட்ட தாகும். இவ்வரசியலமைப்பின் ஊடாகவே விகிதாசாரத் தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் நூற்று தொன்னூற்றாறு எனவும் வரையறை செய்யப்பட்டிருந்தது.இவர்களுள் 160 பேர் தேர்தல் தொகுதி ரீதியாகவும் மற்றும் 36 பேர் ஒன்பது மாகாணங்களுக்கும் நான்கு பேர் என்ற ரீதியிலும் பகிர்ந்தளிக்கும் அடிப்படையிலும் இருபத்தி இரண்டு தேர்தல் மாவட்டங்களிலிருந்து தேர்தல் மூலம் தெரிவாகும் வகையில் வகுக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும் இவ்வரசியலமைப்புக்கு 1988ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதினான்காவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதில் ஆரம்பத்தில் காணப்பட்ட 62ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் திருத்தப்பட்டது.

62:(1) "அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூற்று இருபத்து ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும்" என்ற வாசகத்தினூடாக மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்த நூற்று தொன்னூற்றாறு என்பதுடன் மேலும் இருபத்தொன்பது உறுப்பினர்களால் அதிகரிக்கப்பட்டதை இது காட்டுகின்றது.

இந்த இருபத்தொன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் குறிக்கப்பட்டது போன்று மாவட்டத்தினூடாக மக்களின் வாக்கினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வகையில் அமையாது,கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களுக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். இவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுகின்றனர்.இது பற்றி நமது அரசியலமைப்பு பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

"99அ உறுப்புரை 98இல் குறிப்பீடு செய்யப்பட்ட நூற்றித்தொன்னூற்றியாறு உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தல் ஒன்றில்

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆனணயாளர், அத்தகைய பொதுத் தேர்தல்களில் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அத்தகைய பொதுத்தேர்தலில் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையிலான வாக்குகளுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதா சாரத்தில், அத்தகைய பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்குமிடையே எஞ்சியுள்ள இருபத்தொன்பது ஆசனங்களை உடனடியாக பங்கு போடுதல் வேண்டும் என்பதுடன்,.........

ஒரு பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் அத்தகைய தேர்தலுக்கென குறித்துரைக் கப்பட்ட நியமன காலப்பகுதியினுள்,பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களின் நிரல் ஒன்றை ஆணையா ளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் அத்தகைய பங்குபோடுதலின் மேல் அத்தகைய கட்சி அல்லது குழு எந்த ஆசனங்களுக்கு உரித்துடையதாக வருமோ அந்த ஆசனங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிரப்புவதற்கு அந்நிரலில் இருந்து அது ஆட்களைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.தேர்தல்கள் ஆணையாளர் இவ்வுறுப்புரையின் கீழ் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலையும் பெயர் நியமன காலப்பகுதி முடிவுறுவதன் மேல் உடனடியாக கெசட்டில், சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கிலப் புதினத்தாள் ஒன்றிலும் வெளியிடுவித்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பங்குபோடுதலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவொன்று ஆசனம் ஒன்றுக்கு உரித்து டையதாக உள்ளவிடத்து,தேர்தல்கள் ஆணையாளர் ஓர் அறிவித்தல் மூலம், அத்தகைய ஆசனங்களை நிரப்புவதற்கென இவ்வுறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிரலில் அல்லது அத்தேர்தலில் அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நியமனப்பத்திரத்தில்,அவர்களின் பெயர் உள்ளடக் கப்பட்ட ஆட்களாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்குத் தகைமையுள்ள ஆட்களை, அத்தகைய அறிவித்திலிருந்து ஒரு கிழமையினுள் பெயர் குறித்து நியமிக்கும்படி அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேட்சைக் குழுவின் குழுத்தலைவரை தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களை பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் என வெளிப்படுத்துதலும் வேண்டும்....."

இது தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை எவ்வாறு பங்கீடு செய்வது என்பதையும்அதற்கு யாரை நியமிக்கலாம் என்பதையும் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. இம்முறைமையைக் கூட நமது அரசியலமைப்புக்கு

கொண்டுவரப்பட்ட பதினான்காவது திருத்தத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை பின்வருமாறு நமது அரசியலமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

நமது நடைமுறை அரசியலமைப்புக்கு 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதினைந்தாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 99அ எனும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் மூன்றாம் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

“தேர்தல்கள் ஆணையாளர் மேற்கூறப்பட்ட அறிவித்தலை வழங்கும் முன்னர் 98ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், இன ரீதியான அல்லது வேறு வகையான ஏதேனும் சமூகத்தைச் சேர்ந்தவர்களுமான உறுப்பினர்களின் எண்ணிக்கை தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இையைவுள்ளதாவெனத்தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பதில்,செயல்முறைக்குகந்தவரை எல்லாச் சமூகத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தலானது,அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு இயைவுள்ளதென்பதனை உறுதிப்படுத்துமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேட்சைக்குழுவின் குழுத்தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்.”

ஆகவே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் முறைமை என்பது நமது நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் அவரவர்களின் மொத்த சனத்தொகைக்கேற்ப நாடாளுமன்றத்தின் உறுப்புரிமை இருப்பதை உறுதி செய்யும் வகையில் நமது அரசியல் கட்சிகள்,சுயேட்சைக்குழுக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு இருப்பதை இது நமக்கு தெளிவாக்கி வைக்கின்றது.

இதற்கப்பால் நிபுனத்துவ ஆளுமை நிறைந்தவர்களின் அனுகூலங்களை நமது நாடு பெற்றுக்கொள்ளும் நோக்கில், தேர்தல் போட்டிகளுக்குப் புறம்பாக அல்லது வெளியிலிருந்து புத்திஜீவிகளை ஒவ்வொரு கட்சிகளும் அல்லது சுயேட்சைக்குழுக்களும் அவர்களை நாடாளுமன்றினுள் கொண்டுவருவதும் அரசாங்கத்தின் செல்நெறியில் தாக்கத்தைச் செலுத்துவதற்கும் இம்முறைமை உதவக்கூடியது என்றும் இம்முறைமை கொண்டுவரப்பட்ட காலத்தில் அரசியல் விமர்சகர்களினால் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன.

அதேநேரம் நமது நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் அவரவர்களின் தேசிய சனத்தொகைக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்புரிமை போதியளவு இல்லாதவிடத்து, இம்முறைமையினூடாக அதனை சரிசெய்துகொள்ளும்படி தேர்தல்கள் ஆணையாளர் தேசியப்பட்டியல் உறுப்புரிமைக்கு உரித்தான கட்சிகளிடம் மற்றும்

சுயேட்சைக்குழுக்களிடம் வேண்டுகோள் விடுக்கமுடியும் என்பதையும் இச்சட்டம் எடுத்துக்காட்டினாலும் அதன் முழுமைத்தன்மை நிறைவேற்றப்படுவதை தேர்தல்கள் ஆணையாளரால் உறுதிப்படுத்தும் திடமான சட்ட ஏற்பாட்டினை அவர் கொண்டில்லை என்பதையும் இது எடுத்துக்காட்டத் தவறவில்லை.

ஏனெனில் தேர்தல்கள் ஆணையாளர் கட்சிகளிடமும் சுயேட்சைக் குழுக்களிடமும் கோரிக்கை விடுக்கும் அதேநேரம் அதனை நடைமுறைப்படுத்துவது கட்சியிடமும் குழுக்களிடமுமே தங்கியிருக்கின்றது. ஆதலால் அவை விரும்பினால் மட்டுமே இதனை அனுபவிக்கக்கூடியதாக அமைகின்றது. இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் சமூகங்களுக்கான நாடாளுமன்ற உறுப்புரிமை குறைவாகக் காணப்படுகின்ற போது நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை நம்மிடமிருந்து இழக்கச் செய்கின்றது.

தேசியப்பட்டியலில் உறுப்பினர்களாக யாரை நியமிக்க முடியும் என்பதை நாம் மேலே பார்த்த 99அ உறுப்புரிமையில் தேசியப்பட்டியல் உறுப்புரிமைக்கு உரித்துடையதாக உள்ளவிடத்து தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப்பட்டியல் நிரலில் அல்லது அத்தேர்தலின் ஏதேனும் ஒரு தேர்தல் மாவட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட நியமணப்பத்திரத்தில் பெயர் உள்ள வராகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இது பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்ததும் முதல் கட்டமாக வழங்கப்படும் தேசியப்பட்டியலுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரை தேர்ந் தெடுக்கும் நிலையினைச் சுட்டிக்காட்டுகின்றது.இதன் பின்னர் ஏற்படும் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது என்பது தொடர்பில் நமது அரசியல் அமைப்பு தெளிவாக சுட்டிக்காட்டவில்லை.அதேநேரம் இச்சட்டம் அமுலானதிலிருந்து இக்கட்டுரை எழுதும் நாள் வரை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரி மையின் வெற்றிடம் தொடர்பிலான எந்தத் தீர்க்கப்பட்ட வழக்குகளோ மற்றும் பொருள்கோடல்களோ உயர்நீதிமன்றத்தினூடாக வெளிவந்திருக்கவுமில்லை.

மாறாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிடம் ஏற்பட்ட போது மேற்சுட்டிக்காட்டிய இரண்டு வகையான வேட்புமனுக்களுக்குள் அடங்காதவர்கள் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.இதற்கு நல்லதொரு உதாரணம் மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் மரணித்த போது அவரது இடத்திற்கு முன்னால் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நியமித்ததைக் கொள்ளலாம்.

மாவட்ட தேர்தல்மனுப்பட்டியல் என்பது அந்த பாராளுமன்ற காலம்வரை செல்லுபடியானதாகும். அதனால் அதில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அப்பட்டியலே பயன்படுத்தப்படுகின்றது.இதற்கு முக்கிய காரணம் விகிதாசார தேர்தல் முறைமையில் இடைத்தேர்தல் என்பது இல்லாமையாகும். மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வெற்றிடம் வந்தால் அந்த பட்டியலின் ஊடாகவே நிரப்பப்படல் வேண்டும் என்பதை அரசியலமைப்புச் சட்டம்,தேர்தல்

சட்டம் என்பன துல்லியமாக எடுத்து முன்வைக்கின்றன.ஆனால் தேசியப்பட்டியல் நிரல் இவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட நாடாளுமன்றம் கலையும் வரை செல்லு படியாகும் என்று திட்டவட்டமாகச் சொல்லுமளவில் அரசியலமைப்பிலோ பாராளு மன்ற தேர்தல்கள் சட்டத்திலோவெளிப்படையாக வாசகம் காணப்படவில்லை.

இந்நிலையில் தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அவர்கள் தேசியப்பட்டியல் நிரலில் காணப்படுபவர் அல்லது மாவட்ட தேர்தல் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படாதவர்களில் இருந்து தான் எதிர்காலத்தில் தேசியப்பட்டியல் வெற்றிடம் ஏற்பட்டால் நிரப்பப்படும் என்ற கருத்தை பகிரங்கமாக உத்தியோகபூர்வமாக தெரிவிக்காத நிலையில் சிலரிடம் இவ்வாறு தெரிவித்ததாக பேசப்படுகின்றது.இது உண்மையாயின் இதன் எதிரொலியை நாம் இன்றைய தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பு ரிமையில் வெற்றிடமொன்று ஏற்படும்போதுதான் சந்திக்க முடியும். அக்கூற்று பற்றி தீர்க்கமான முடிவும் கிட்டும்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடத்தில் இதுகாலவரை பின்பற்றப்பட்டுவரும் பட்டியல்களுக்கு வெளியிலிருந்து நியமிக்கப்படும் நடைமுறை இருந்துவருகின்றது.இதற்கு என்ன நேரும் என்பதைப் பார்க்கலாம்.மாறாக இன்று நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் மேற்படிய கூற்றுக்களின் பிரகாரமும் இதுகாலவரையான நடைமுறைகளும் பட்டியலுக்கு வெளியிலிருந்து தேசியப்பட்டியல் வெற்றிடம் நிரப்பப்படுவதில் எந்த தடை யையும் கொண்டில்லை என்ற கருத்துத்தான் வலிமை பெற்றுள்ளது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களுக்கு வழங்கக்கூடாது, அப்படி வழங்குவது அவர்களை மக்கள் நிராகரித்தமை அர்த்தமற்றுப்போய்விடுகின்றது என்று எம்மில் சிலர் கருத்துரைத்துவருகின்றமையை அண்மைக்காலங்களில் காணமுடிகின்றது. இது புத்திஜீவிகளின் உன்னதமான கூற்று என்று பலர் நம்பும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

உண்மையில் அவ்வாறு தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்கள் தேசியப்பட்டி யலில் நியமிக்கக்கூடாதென்று கூறுவது நமது அரசியலமைப்பு எடுத்துக்காட்டும் 99அ வில் மூன்றாம் பந்தியில் காணப்படும் வாசகத்துக்கு முரணானதாகும்.எனில் இவ்வாறான தேசியப்பட்டியல் நியமனங்கள் சட்டத்தின் பிரிவினால் அங்கீகரிக்கப் பட்டவொரு செயற்பாடாகவே கொள்ளப்படல் வேண்டும்.

அதுமட்டுமன்றி இந்நடவடிக்கை என்பது இந்த நடைமுறை பாராளுமன்ற காலத்தில் மட்டுமன்றி இதற்கு முன்னரும் தேர்தல்களில் தோற்றவர்கள் நியமிக்கப்படும் பண்பு பின்பற்றப்பட்டே வந்திருக்கின்றது.இது நமது கூர்ந்த கவனிப்புக்குரிய பக்கமாகும்.

நமது முஸ்லிம் கட்சிகள் இந்த தேசியப்பட்டியல் விவகாரத்தில் தமக்குரிய பங்கீடுகளை சரிவர பெற்றுக்கொண்டனவா என்கின்ற ஓர் கேள்வியும் தேசியப் பட்டியல் முறைமையினை சரியாகப்பிரயோகித்தோமா என்ற இன்னுமொரு வினாவும் இது விடயத்தில் நம்மத்தியில் இருந்துவருகின்றது.

கடந்த 2007.09.14 ஆம் திகதி மரணமடைந்த மரஹூம் அன்வர் இஸ்மாயிலின் மரணத்தினால் ஏற்பட்ட தேசியப்பட்டியல் வெற்றிடம் தேசிய காங்கிரசுக்குரியது. அதனைக் கேட்டுப்பெற்றுக்கொள்ளும் திராணியின்றி முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் மௌனம் சாதித்தமையும் தேர்தல் வாக்குறுதியின்படி 2010 பாராளுமன்றத்தினுள் அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு கிடைக்கவேண்டிய ஒரு தேசியப்பட்டியலை மகிந்த ராஜபக்ஷ மறுத்தபோதும் அதனை உடனடியாக பெற்றுக்கொள்ள அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் முடியவில்லை.

பின்னர் மகிந்த ராஜபக்ஷ தான் மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சூழ்நிலையில் அவரது தேர்தல் வெற்றியை முன்னிறுத்தி ஏ.எச்.எம் அஸ்வரை இராஜினாமாச் செய்வித்து அந்த இடத்துக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரசை சேர்ந்த எம்.எஸ்.எம்.அமீர்அலி நியமிக்கப்பட்டார்.இதன் மூலம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குரிய தேசியப்பட்டியலை மகிந்த கொடுக்காது மறுத்துவந்தார் என்பதை நிரூபிக்கும் அதேவேளை அவரது சொந்த இலாபத்துக்கு அதாவது தேர்தல் வெற்றியை மையப்படுத்தி இதனை வழங்கியிருந்தார் என்பதையும் இவை நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

இப்படி இந்த தேசியப்பட்டியல் சமாச்சாரம் நமது முஸ்லிம் கட்சிகளின் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன.இருந்தாலும் சில நேரங்களில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்களைப் பொறுத்து மற்றவர்கள் இது பிழை என்ற சர்ச்சையில் இறங்கிவிடுகின்றனர். முஸ்லிம்களின் அதிகரித்த ஆதரவினைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பலத்த பிணக்கு களை இது தொடர்பில் எதிர்கொண்டதொரு கட்சியாகவும் காணப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த பொதுத்தேர்தலையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஐக்கிய தேசியக்கட்சியுனூடாக கிடைத்த இரண்டு தேசியப்பட்டியலுக்கு சட்டத்தரணி எம்.எச்.எம் சல்மான், டாக்டர் ஹாபிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த நியமனம் சரியானதா என்கின்ற கேள்வி முஸ்லிம் சமூகத்திடமும் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்த வாக்காளர்களிடமும் பரவலாக இருந்துவருகின்றது.

தேசியப்பட்டியல் விவகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை எப்போதும் முதலில் தலைவருக்கு விசுவாசமானவர்களுக்கு வழங்கி, பின்னர் அதிகரித்த கட்சி ஈடுபாடுடையவர்களுக்கு வழங்கும் நடைமுறையை கொண் டொழுகுபவராகக்காணப்படுகின்றார்.

தற்போதைய பாராளுமன்றத்தின் பொதுத்தேர்தலையடுத்து தமது கட்சிக்கு கிடைத்த இரண்டு தேசியப்பட்டியல் உறுப்புரிமையையும் கூட தலைவர் தனது நம்பிக்கைக்குரியவருக்கு முதலில் வழங்கும் பாணியில் பிரயோகித்துள்ளார் என்றே நம்பப்படுகின்றது.இது எவ்வளவுதூரம் யதார்த்தபூர்வமான செயற்பாடு என்பதுநமது கவனக்குவிப்புக்கு அப்பாலான சங்கதி அல்ல.

ஏனெனில் கடந்த 2004இல் நடைபெற்ற பதின்மூன்றாவது நாடாளுமன்ற தேர் தலையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினூடாக கிடைத்த மூன்று தேசியப்பட்டியல் உறுப்பினர்களுக்கு முதலில் ஐ.குத்தூஸ், ஹுஸைன் அஹமட் பைலா, டபுள்யு.பீ.புஷ்பகுமார ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இதில் ஐ.குத்தூஸ், டபுள்யு.பீ.புஷ்பகுமார அகியோர் இராஜினாமாச் செய்தனர். அந்த இடங்களுக்கு பின்னர் சட்டத்தரணி நிஜாமுதீன், பஷீர் ஷேகுதாவூத் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஆயினும் ஹுஸைன் அஹமட் பைலா என்பவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய மறுத்ததுடன் அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராகவே இருந்தார். இது தலைவர் ரவூப் ஹக்கீமின் நம்பிக்கைக் குரியவர் என்ற கருத்தை பொய்யாக்கிய முதல் சந்தர்ப்பமாகும்.இதன் பின்னர் இப்படியான துரோகத்தனம் நடைபெறமாட்டாதென்று சொல்லுமளவில் எந்த விதமான உத்தரவாதங்களையும் முன்னிறுத்த முடியாது.

பதினைந்தாவது நாடாளுமன்ற தேர்தலினை அடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு மிகுந்த நம்பிக்கைக்குரியவர் என நம்பப்பட்டு முதலில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் தமது விசுவாசத்தை நிரூபிப்பார்களா இல்லையா என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்கும் எனலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியலில் பெயர்குறித்து ஐந்து பேர் நிறுத்தப்பட்டிருந்தனர்.இதில் எம்.ரீ.எம்.ஹஸனலி,சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் தேசியப்பட்டியல் நிரலில் இருந்தனர்.இவ்விருவரும் கட்சியின் ஈடுபாட்டில் அதிகரித்த அக்கறை யையும் தொன்மையையும் ஆளுமையையும் கொண்டவர்களாக இருந்தனர். அப்படியிருந்தும் இவர்களை நிராகரித்துவிட்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இப்போது நியமிக்கப்பட்டிருப்பவர்கள்தான் தலைவரிடம் நம்பிக்கையை வென்றவர்கள் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கின்றனர்.

இதற்கப்பால் திருகோணமலை, வன்னி ஆகிய இரு மாவட்டங்களிலும் கடந்த பொதுத்தேர்தலின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை இழக்கப்பட்டிருக்கின்றது.இதனை முதலில் ஈடுசெய்யும் வகையில் அவ்விரு மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிட்டவர்களுள் எவருக்கேனும்

வழங்கியிருக்க முடியும்.அப்படி வழங்கினால் அதில் யாரும் மாற்றுக்கருத்து முன்வைக்க இடமில்லாமல் போயிருக்கும்.

அங்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களான முறையே தௌபீக்,முத்தலிப் பாவா என்பவர்களின் முன்னெடுப்புக்களின் பலவீனம்தான் தோல்வி நிலைக்கு காரணம் என்றால், இவர்களை தவிர்த்துவிட்டு கட்சியை வளர்க்கவும் நிலைப்படுத்தவும் கூடிய ஆளுமையுடைய பொருத்தமான வேறு இருவர்களை அம்மாவட்டங்களுக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் களாக்கியிருக்கலாம்.

அவ்வாறு தேசியப்பட்டியல் நியமனத்தை வழங்கும்போது இது நிரந்தரமாக உங்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற உறுப்புரிமை அல்ல.அது தேவைப் பாட்டைப் பொறுத்து சுழற்சி முறைக்குள்ளாக்கப்படும் என்ற முன்னிபந்தனையை முன்னிறுத்தி வழங்கியிருக்கலாம்.அப்படி வழங்குவதில் யாரும் தவறு என்று விமர்சிக்க வழியுமில்லை.

இவர்கள் சிலவேளை முன்னிபந்தனைகளை மீறி துரோகமிழைத்தால் கள அரசியல் செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் மக்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட வழியும் இருக்கின்றது.ஆனால் இப்போது தேசியப்பட்டியலுக்கு நியமிக்கப்பட்டவர்கள் சறுக்கினால் இப்படி தண்டிக்கவும் முடியாது,மாற்றுப்பாடம் புகட்டவும் எந்த முகாந்திரங்களுமில்லை.

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின்படி சில பிரதேசங்களுக்கு தேசியப்பட்டியலூடாகநாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்படு மென கூறியது நியாயம் என்றாலும் அதனை ஆறஅமர இருந்து சிந்தித்து ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு ஒரு போதிய அவகாசத்தை இது வழங்கி யிருக்கும். இதுகூட இன்றைய நியமனத்தினூடாக மறுதலிக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி ஏறத்தாள சுமார் ஐந்து மாதங்களை எட்டியும் இந்த தேசியப் பட்டியலுக்கு அடுத்துவர இருப்பவர்கள் யாரென்று மூச்சுக்கூடவிடாமல் பத்திரப் படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் டாக்டர் ஹாபிஸ் மட்டும் சில தடவை தலைமைத்துவம் கேட்டால் நாம் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்வோம் என அறிக்கைவிட்டிருக்கின்றார்.ஆனால் சட்டத்தரணி எம்.எச்.எம்.சல்மான் இது தொடர்பில் வாயே திறக்கவில்லை.இது அவர் இராஜினாமா செய்யமாட்டாரோ என்கின்ற சந்தேகத்தை அவர் மீது வலிமைப்படுத்துகின்றது.

டாக்டர் ஹாபிஸ் அவர்களின் அறிக்கையின் பிரகாரம் தேசியப்பட்டியல் விடயத்தில் தலைவர் முடிவெடுக்காமல் இன்னுமுள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றது. சிலவேளை எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பின்னர் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற எண்ணம் தலைவருக்கு இருந்தாலும் நாம் முன்னர்

குறிப்பிட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இழந்த இரு மாவட்டங்களுக்கும் வழங்கியிருந்தால் அம்மாவட்டங்களில் தமது கட்சியை பலப்படுத்துவதற்கும் பயனை அடைந்துகொள்வதற்கும் உபயோகித்த பண்பையாவது இது எட்டி யிருக்கக்கூடும்.

இப்படி கட்சி நலனும் மக்கள் நலனும் சார்ந்த தீர்மானத்தை எடுக்க முடியாத ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் பின்னடைவை சந்தித்திருப்பது அவரின் சாணக்கியத்திலும் ஆளுமையிலும் ஐயத்தை பெரியளவில் தோற்றுவிக்கின்றது.உண்மையில் தேசியப்பட்டியல் என்பது யாருக்கு வழங்குவது என்ற தீர்மானம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தின் முடிவின் படியன்றி தலைவரின் தற்துணிவின் அடிப்படையிலேயே இதுவரை நிகழ்கின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இதனால்தான் தேர்தல் பிரசாரக் காலங்களில் அவர் பிரசாரங்களை மேற் கொள்ளுமிடங்களில் தேசியப்பட்டியல் பற்றி பிரஸ்தாபித்து அவர் விரும்பும் கோணத்தில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி மக்களை அதற்கு இசைவாக்கி வருகின்றார்.அப்படித்தான் நமது பல பகுதிகளுக்கும் பிரதேசங்களுக்கும் தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்ற பதவி தரப்படும் என்ற வாக்குறுதியை வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை முன்னிறுத்திய நிலையிலேயே பிரயோகிப் பதன் பின்னணியாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்கும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது கட்சிக்காக வாக்களித்த மக்களின் வாக்குப்பலத்தினால் பெறக்கூடிய ஒன்றாகும்.அதனை தலைவர் தன்னிஷ்டத்துக்கு வழங்குவதென்பது ஒரு ஜனனாயாகக் கூறல்ல.

மாறாக தமது கட்சியின் உயர்பீட கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு அது தீர்மானிக் கப்படல் வேண்டும். அதற்காக போலித்தனமான முறையில் இது மஸுறா முடிவு என காண்பித்து தலைமைத்துவ அதிகாரத்துவ தீர்வாக தேசியப்பட்டியல் விவகாரம் முடிவுபெறுவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்த மக்களுக்கு ஆரோக்கியமான பயனை அளிக்காதென்பதே திட்டவட்டமானது.

*01.01.2016* - விடிவெள்ளி

குறிப்பு :

*2016 ஜனவரி 19 இல் டாக்டர் ஹாபிஸ் எம்.பி பதவியை இராஜினாமாச் செய்தார். அவரது இடத்திற்குப் பின்னர் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எஸ்.தௌபீக் எம்.பியாக நியமிக்கப்பட்டார்.*

# வடக்கு, கிழக்கில் தொடரும் ஆளுனர் முரண்பாடுகளும் முடியாமல் தடுமாறும் முதலமைச்சர்களும்

நமது நாட்டில் இன்று ஒன்பது மாகாண சபைகள் செயற்பட்டுக் கொண்டிருக் கின்றன. இவற்றில் வடக்கு,கிழக்கு ஆகிய இரு மாகாண சபைகளின் ஆளுனர் களுக்கும் முதலமைச்சர்களுக்குமிடையில் ஏற்படும் பிணக்குகள் அல்லது முரண்பாடுகள் போன்று பெரும்பாலும் இவை தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளிலும் இடம்பெறுவதில்லை.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு மாகாண சபையின் முதல்வருக்கும் ஆளுனருக்குமிடையில் பாரிய சர்ச்சைகளும் பிளவுகளும் தோன்றி,அதுவொரு முடிவில்லாமல் தொடர்ந்தன. இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தினூடாக புதிய ஆளுனராக அண்மையில் ரெஜினோல்ட் குரே நியமிக்கப்பட்டுள்ளார்.இவரின் காலத்தில் வடக்கு மாகாண சபையில் ஆளுனர்-முதலமைச்சர் போர் சற்று தணிந்திருக்கின்றது.

கிழக்கு மாகாண சபையின் ஆளுனராக மோகன் லால் பீரிஸ் இருந்த காலத்தில் முதலமைச்சர்-ஆளுனர் சர்ச்சை பெரிதாக வெளியில் கிளம்பிய தடயங்கள் இல்லை.அதேநேரம் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நியமிக் கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் ஒஸ்ட்ரின் பெர்னாண்டோவின் காலத்தில்தான் முதலமைச்சர்- ஆளுனர் பிரச்சனைகள் பெரிதாக தலையெடுக்கத் தொடங்கி, பகிரங்கமாகவும் அது பேசப்படுமளவில் நிலைமை மாறியிருக்கின்றது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்குப் புறம்பான மாகாண சபைகள், மாகாண சபை முறைமை கொண்டிருக்கும் அனைத்து சட்டதிட்டங்களையும் சரிவர நிறைவேற்றுகின்றதா என்கின்ற அக்கறைக்கு அப்பால் மாகாண சபைகளின் இயக்கம் நடைபெறுகின்றது என்கின்ற பதிவை பதியவைப்பது மட்டிலுமே அவர்களின் ஆர்வமும் கவனமும் குவிக்கப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இனப்பிரச்சனையை எதிர்கொண்ட மக்களான வடக்கு,கிழக்கு மாகாணத்தினுடையோர் மாகாணசபையின் கட்டமைப்பு அமுலாக்கம் நடை பெறுகின்றதா என்பதற்கு அப்பால், மாகாண சபை முறைமையில் முன்வைக் கப்பட்டிருக்கும் முழு அதிகாரங்களும் அனுகூலங்களும் பூரணமாக இயங்குதலை

கொண்டிருக்கின்றதா என்ற கூறின் மீதான கவனமும் எதிர்பார்ப்பும் மேலோங் கியிருக்கின்றது.

இவ்வாறான அக்கறையின் பேரிலும் இனப்பிரச்சனைகளில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலான மக்கள் பிரதிநிதிகளும் தமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைத்திருக்கின்றதா என்கின்ற ஆதங்கத்தின் அடிப்படையிலும் செயற்பட வேண்டிய தமது பொறுப்பிலிருந்து இயங்க தொடங்கும்போதுதான் இவ்வாறான ஆளுனர்-முதலமைச்சர் மோதல்கள் வெடிக்க தொடங்குகின்றது.

இந்நிலையை நாம் சரியாக எடைபோட்டுப் பார்ப்போமானால் இன்னொரு உண்மையை மிக தெளிவாக இவ்விடத்தில் உணர முடியும்.வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களுக்குத்தான் மாகாண சபையின் அதிகாரத் தேவை இருக்கின்றது. ஏனைய மாகாணங்களுக்கு அதன் அவசியமில்லை என்பதையும் புலப்படுத்திநிற்கின்றது.

மக்களின் சார்பில் நின்று, மாகாண சபைகளுக்கான சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் வழங்கப்பட்டிருக்கும் அதிகார எல்லைக்குள் நடைமுறைக்கு வரவேண் டிய விடயப்பரப்பில் காணப்படும் இடையூறுகள்,தாமதங்கள் என்பனவைதான் சர்ச்சையை மேலும் விரிவுபடுத்தும் கோணத்தை அடையாளப்படுத்துகின்றது.

இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான தீர்வாகவோ பரிகாரமாகவோ மாகாண சபை முறைமை இருக்கின்றதென்று பாதிக்கப்பட்ட மக்களான தமிழர்களும்,முஸ்லிம்களும் சுய திருப்தியில் இல்லை.இருந்தாலும் கிடைத்தவற்றைக் கூட அனுபவிக்க முடியாத குறுக்கீடுகள் வதை செய்கின்றது என்கின்ற நியாயமான கோபங்கள் எழுவது தவிர்க்க முடியாத ஒரு கூறாகவும் மாறிவருகின்றது.

மாகாண சபை முறைமையில் சொல்லப்பட்டுள்ள அதிகாரங்களில் பொலிஸ், காணி அதிகாரங்கள் என்பன இதுவரை நடைமுறைக்கு வராது உள்ளவை களாகும்.இதுகுறித்து வடக்கு,கிழக்கு மாகாண சபைகளும் இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்களும் அமுலாக்கப்பட வேண்டுமென பெரிதாக குரல் கொடுக்கின்றனர்.

இவ்விரு அதிகார அமுலாக்கம் இல்லாமை என்பது நாட்டிலுள்ள ஒன்பது மாகாண சபைகளுக்கும் உரிய ஒன்றாக இருந்தாலும் வடக்கு,கிழக்கு மகாண சபைகளுக்கு புறம்பான ஏனைய ஏழு மாகாண சபைகளிலும் இதற்கான போராட்டங்களோ கோரிக்கைகளோ எழுப்பப்படுவதில்லை. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளிலும் இவ்விரு மாகாணங்களிலும் பெரும்பான்மையாக வாழும் தமிழ்பேசும் மக்களான தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு தொடர்ந் தேர்ச்சியான முறையில் பொலிஸ், காணி அதிகாரம் அமுலாக்கம் குறித்து

குரல்கொடுத்துவருகின்றனர்.இந்த செயற்பாடானது இங்குள்ள மக்களின் தேவை என்பது ஏனைய மாகாண மக்களிலிருந்து வேறுபட்டதென்பதை இனம்காட்டப் போதுமானது.

இதனால்தான் இவ்விரு மாகாணங்களுக்கு வெளியே உள்ள ஆளுனர்கள், முதலமைச்சர்கள் மோதுகை என்பது பாரிய அளவில் வெளிப்படாது காணப் படுவதன் தாற்பரியமாகும்.இதற்கு மாறான நிலை வடக்கு,கிழக்கு ஆகிய இருமாகாணங்களிலிருந்து வருவதென்பது இம்மாகாணங்களில்தான் பெரு வாரியான இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்கள் இருப்புக் கொண்டுள்ளனர் என்பதை துல்லியமாகவும் எடுத்துக்காட்டுகின்றது.

ஆளுனர்-முதலமைச்சர் அதிகாரங்களின் பரப்பெல்லை பொதுவாக ஒன்பது மாகாண சபைகளுக்கும் ஒரேவிதமாக இருந்தாலும் அதன் அடிப்படையில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்பது தேசத்தில் காணப்படும் அரசாங்கம் சார்ந்த கட்சிக்குப் புறம்பான அல்லது மாற்றுக் கொள்கையுடைய கட்சியின் ஆட்சி முறைமை வடக்கு,கிழக்கு மாகண சபைகளில் அமைந்திருப்பதும் ஒரு முக்கியமான அம்சமாகும். இங்குதான் உண்மைக்கு உண்மையாக இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட சமூக குழுமத்தினரின் இருப்பியல் உறுதியாக நிலைப்பட்டிருப்பதுமாகும்.

இதனால் மாகாண சபை முறைமையினூடாக நிறைவேற்றப்படவேண்டுமென முன்மொழியப்பட்ட விடயங்களை செயல்படுத்துவதில் சில முட்டுக்கட்டைகளை வடக்கு,கிழக்கு மாகாண சபைகளுக்கான ஆளுனர்கள் திட்டமிட்டு செயற்படுத்தும் ஓர்மத்தனத்தை வீராப்புடன் காட்டுவதினாலும் இவ்வாறான முறுகல் நிலை ஒரு தொய்வில்லாத நிலைப்பேற்றை அடைந்துகொள்கின்றது.

வடக்கு,கிழக்கு மாகாண சபைகளின் ஆளுனர்களாக நியமிக்கப்படுபவர்கள் எப்போதும் நமது நாட்டின் பெரும்பான்மைச் சமூகமான சிங்களவர்களாவர். அவர்கள் நமது தேச அரங்கில் ஆட்சி புரியும் அரசாங்கம் சார்ந்தவர்கள் என்பதனால் தேசத்தில் காணப்படும் அரசாங்கத்தில் ஊடுருவியுள்ள சிங்கள-பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகளின் அடிவருடிகளாகவும் இனவாதத்தின் மொத்த முகவர்களாகவும் காரியமாற்றும் மனோபாவம் நிறைந்தவர்களே பெரும்பாலும் ஆளுனர் பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர்..

இதனாலும் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பெருவாரியாக வாழும் தமிழ் பேசும் சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுகின்ற வகையில் அல்லது நன்மைகள் எதனையும் அடைந்துவிடக்கூடாதென்கின்ற பாகுப்பாட்டுத் தன்மையும் ஆளுனர்களினூடாக பெருக்கெடுத்துக் கொள்கின்றது.

இப்படி சிங்கள-பௌத்த பேரின ஆதிக்க சக்திகளின் மேலோங்குகை வடக்கு,கிழக்கு மாகாண சபைகளில் பாரிய ஆதிக்கத்தை செலுத்துவதற்கு மாகாண சபை முறைமையில் காணப்படும் ஆளுனருக்கான அதிகாரத்தின் உச்சமும் முதலமைச்சருக்கு காணப்படும் அதிகாரக்குறைப்பும் பாரிய செல்வாக்கை செலுத்துகின்றது.

"154 ஊ(1) ஒரு மாகாணத்தின் ஆளுனருக்கு அவரது பணிகளை பிரயோகிப் பதில் உதவி செய்து ஆலோசனை அளிப்பதற்கென பிரதான அமைச்சரையும் நால்வருக்கு மேற்படாத வேறு அமைச்சர்களையும் கொண்ட அமைச்சர்கள் சபை ஒன்று இருத்தல் வேண்டும்.பிரதான அமைச்சர் சபைக்கு தலைமை தாங்குவார்.ஆளுனர் அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிவில் பிரயோகிக்கும்படி இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் அவர் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்குத் தவிர அவரது பணிகளை பிரயோகிக்கையில் அத்தகைய ஆலோசனை களுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்."

மேற்படிய 13ஆம் திருத்தச் சட்டத்தின் இந்த ஏற்பாட்டை சற்று ஊன்றிப் பார்த்தால் ஆளுனரின் பதவியின் பணிகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கும் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும்தான் மாகாண சபையின் முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்களும் கடமையாற்றுகின்றனர் என்பதை வெளிப்படுத்தும் ஒரு கோணத்தையும் இதற்குள் பார்க்கலாம்.

மாகாண சபையொன்றினைப் பொறுத்தவரை எல்லையில்லா அதிகாரக்குவிப்பை கொண்டவராக ஆளுனர் என்பவர் காணப்படுகின்றார்.அதுமட்டுமன்றி அவர் நேரடியாக நிறைவேற்று ஜனாதிபதியின் பிரதிநிதியாகவும் இருக்கின்றார். இதன் மறுதலை நமது தேசத்தின் ஆட்சியில் ஜனாதிபதியாக இருப்பவரின் ஆட்சியாகவே மாகாண சபை விளங்கமுடியும்.தவிர மாகாண சபையின் ஆட்சி பீடத்திலிருக்கும் கட்சி சார்பான அதிகார ஆதிக்க செல்வாக்கு பிரயோகிக்க முடியாதென்பதை தெட்டத்தெளிவாக வரையறுக்கின்றது.

மாகாண சபையில் ஆளுனரின் அதிகாரம் என்பது ஒரு வகையில் நிறைவேற்று அதிகாரத்தை ஒத்ததாக பார்க்கலாம்.ஏனெனில் தேசத்தின் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதியின் செயலாற்றுகையை பிரதிபலிப்பவராகவும் குறித்துரைக் கப்படுகின்றார். இதனை அவரது பின்வரும் அதிகாரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

01) காலத்துக்குக் காலம் மாகாண சபைகளை கூட்டுதல்,ஒத்திவைத்தல், கலைத்தல்.

02) ஒரு கூட்டத்தொடர் முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் அடுத்த கூட்டத்தொடரை கூட்டுதல்.

03) மாகாண சபையைக் கலைக்கும்போது சபையொன்றின் பெரும்பான்மை ஆதரவுபெற்ற முதலமைச்சரின் ஆலோசனைப்படியே செயலாற்றுதல்.

04) மாகாண சபையின் அமைச்சர்கள் சபையின் ஆலோசனைக்கு உடன்படாதவிடத்து ஆளுனர் அதனை ஜனாதிபதிக்கு அறிவித்தல்.

05) மாகாண சபையில் தேவையான போது உரையாற்றுதல்

06) மாகாண சபையினால் இயற்றி நிறைவேற்றாது இருக்கும் ஒரு சட்டம் பற்றி அல்லது மற்றைய விடயங்கள் பற்றி சபைக்கு செய்திகள் அனுப்புதல்.

இத்தகைய அதிகாரங்களோடு "மாகாண நிதி விடயங்களை ஆளும் எல்லா ஒழுங்குகளையும் ஆளுனர் மேற்கொள்வதுடன் மாகாண நிதி,மாகாணத்தின் அவசரகால நிதி என்பன உட்பட அனைத்தையும் கையாள்கிறார்.ஆளுனரின் சிபாரிசு இன்றி மாகண சபையின் எந்தவிதமான வருமானம்,செலவீனத்துடன் சம்பந்தப்பட்ட வருமான நியாதிக்கங்களை அறிமுகம் செய்துகொள்ளப்படவோ, முன்மொழியப்படவோ, ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாது."

இப்படியான ஆளுனரின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே மாகாண சபைகளின் இயங்கியல்கள் உட்படுகின்றன. இத்தகைய வட்டத்துக்குள் சிறைப்பட்டுள்ள மாகாண சபைகளில் முதலமைச்சர் பாத்திரம் என்பது ஆளுனரின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் மேலானதாக இராதென்பது மிக வலிமையான சமாச்சாரம்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் ஆளுனர்களின் தலையீடுகள் முதலமைச்சரின் வேகமான மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு தடையாக அமைகின்றதென்றால், அது ஆளுனர்களின் அதிகாரத்துக்கு வெளியில் நின்று செயற்படுவதல்ல.மாறாக அவர்களுக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தின் வெளிப்பாடுகள் என்பதை வடக்கு,கிழக்கு முதலமைச்சர்கள் தமது கவனத்தில் கொள்ளவேண்டிய கட்டாயத்தை அவர்களுக்கு கடமையாக்கின்றது.

மாறாக முதலமைச்சர்கள் தமக்கு அதிகாரம் கூடுதலாக இருப்பது போன்ற தோரணையை மக்களிடையே முன்னிறுத்துவது அவர்களின் பதவி வழி அதிகார இயலாமையை மறைத்துக்கொண்ட ஒரு அபத்தமான முன்னகர்ச்சி என்பதை நாம் புரிந்துகொள்வதில் பாரிய சிரமம் இராது.

09.03.2016 - நவமணி

## தகவல் மூலங்கள்


1. அரசியல் அமைப்புக்கான திருத்தம் 1-19
2. அதிகாரப்பகிர்வு ஆலோசனைகளும்
முஸ்லிம்கள் அதிகப்படியான மாநிலசபை ஒன்றின் அவசியமும்
3. அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும்
4. ஆட்சி அதிகாரப்பகிர்வில் முஸ்லிம்களுக்கு நீதி வேண்டும்
5. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு (1978)
6. இனத்துவம்
7. இலங்கை அரசியல்
8. இலங்கைச் சோனகர் இன வரலாறு – ஒரு திறனாய்வு
9. இலங்கை முஸ்லிம்களும் இனப்பிரச்சினையும்
10. இலங்கையின் இனப்பிரசனைத் தீர்வும் முஸ்லிம்களும்
11. இலங்கை முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்
12. இஸ்லாம் ஓர் அறிமுகம்
13. இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்
14. இஸ்லாமியத் தமிழரும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமும்
15. இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம்
16. இலங்கைப் பாராளுமன்றத்தில் முஸ்லிம்கள்
17. இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம்
18. ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் - பாகம் 2
19. க்ரியாவின் தற்கால தமிழ்,தமிழ் ஆங்கில அகராதி
20. குற்றவியல் நடவடிக்கைக் கோவை
21. குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2011
22. சிறுபான்மையினர் சில அவதானங்கள்
23. சுய நிர்ணயம் பற்றி
24. தண்டனைச் சட்டக்கோவை
25. தீவும் தீர்வுகளும்

26. தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லிம் மக்களும்

27. தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை

28. நடைமுறைக்கேற்ற இஸ்லாம்

29. மதஞ்சார் சிறுபான்மையினர்

30. முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை
இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கையும்

31. முஸ்லிம் சாகியத்தின் பன்முக அடையாளங்களும்
அரசியல் தேர்ந்தெடுப்புக்களும்

32. முஸ்லிம் பூர்விகம்

33. உதயம் - *1981*

34. முஸ்லிம் டைம்ஸ் - *1980*

35. சரி நிகர் - *1999*

36. தினகரன் *03.05.1985, 02.08.1986, 03.08.1986, 02.10.1986*

37. வீரகேசரி

38. *1951*ஆம் ஆண்டின் *13*ஆம் இலக்க
முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்

39. *1981*ஆம் ஆண்டின் *1*ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

40. *1987*ஆம் ஆண்டின் *42*ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம்

41. *2007*ஆம் ஆண்டின் *56*ஆம் இலக்க குடியியல் மற்றும்
அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பட்டொழுங்குச் சட்டம்

குறிப்பு :

பின் அட்டையில் உள்ள தலைவர்களான மர்ஹூம். எம்.எச்.எம். அஷ்ரஃப், ரவூப் ஹக்கீம் ஆகிய இருவரினதும் உரைகள் வெளியான பத்திரிகைகள், முறையே

வீரகேசரி - *25.04.1998*, வீரகேசரி - *09.05.1998*

## நன்றியை உரக்கச் சொல்லல்

விடிவெள்ளி
நவமணி
தமிழ் மிர்ரர்

சோனகர்.கொம்
மடவளை நியூஸ்
ஸ்ரீலங்கா முஸ்லிம்
மெட்ரோ மிரர்
அவதானி
தளம்
கல்குடா நேசன்

## எழுத்திலிருந்து நூலாக்கத்திற்கு இருப்பவை

வரலாற்றுப் பகிர்வில் இலங்கை முஸ்லிம்கள் (வரலாறு)
இஸ்லாத்தில் தஸவ்ஃப் (இஸ்லாமிய ஆய்வு)

## தீவும் தீர்வுகளும்
### நூல் வெளியீட்டு விழா உரையிலிருந்து...



“தீவும் தீர்வுகளும் ஆசிரியர் நூறுல்ஹக் சிறப்பான கட்டுரைத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் எழுத்துலகில் காலடிவைக்க நானும் ஒரு பங்காளியாக இருந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு இலக்கியகர்த்தா ஒரு நூலை வெளியிட்டுவிட்டான் என்றால் அவன் மைல்கல் ஒன்றை தாண்டி விட்டான் என்றே கூறவேண்டும்.

தீவும் தீர்வுகளும் நூலை ஒரு வழக்கு என்று நோக்கினால் அதன் வழக்காளி, எதிராளி, நீதவான் எல்லாமே முஸ்லிம் காங்கிரஸூம் அதன் தலைவரும்தான் என்றும் அவர் கூறியிருக்கிறார்.”


எம்.எச்.எம். அஷ்ரஃப்

23.04.1998

---



## தீவும் தீர்வுகளும்
### நூல் அறிமுக விழா உரையிலிருந்து...



“நண்பர் நூறுல்ஹக் அவர்களுடைய எழுத்துக்களைப் பார்க்கின்றபோதும் அவர் எடுத்தாண்டிருக்கின்ற அரசியல் பிரச்சினைகளின் அனுகுமுறைமைகளை நோக்குகின்ற போதும் அவரைப்போன்று அரசியல் விமர்சகர்கள் ஒரு பத்துப்பேர் இருந்தால் போதும் எங்களுடைய சமூகத்தின் அரசியல் விடுதலைக்கு அது போதும் என்கின்ற உணர்வு எம்மத்தியிலே எழுகின்றது”

ரவூப் ஹக்கீம்

02.05.1998

ISBN 978-955-43179-0-1

விலை: 300/=

Cover Design - Uwais Mohamed